


786/92

சாஹெப்

# தர்கா

**ISHQ-E-RASOOL ﷺ IS THE SOUL OF IMAN.**
ரஸூலுல்லாஹ்வை நேசிப்பது ஈமானின் உயிர்.
நாட்டை நேசிப்பது ஈமானின் அங்கம்

**உருஸ் 18 இதழ் 11**

முஹர்ரமுல் ஹராம் - 1430
ஜனவரி - 2010

**நன்கொடை : ரூ. 5/-**
(தனிச்சுற்றுக்கு மட்டும்)


کونین کی دولت ہے درگاہ اولیاء میں
اللہ کی رحمت ہے درگاہ اولیاء میں
آنے سے یہاں ہم کو ملتا ہے خدا حافظ
کیا جلوۂ قدرت ہے درگاہ اولیاء میں


**அரசு அனுமதிக்கு விண்ணப்பித்து ஆய்வுகள் முடிவடைந்த நிலையிலுள்ள இதழ்.**


## இதழின் உள்ளே ......


ஜியாரத் பயணம் 2
கண்ணியமிக்க பெண்கள் 3
யா கௌஸ்! யா முஹ்ய்யித்தீன்! 4
மதரஸா நலவாரியம் 6
புதையல் 7
ஒலிமார்கள் உயிருடன் உள்ளார்களா? 8
மாநபியின் மணிமொழிகள் 9
ஒட்டகனார் 10
இலங்கையில் ஒடுக்கத்துப் புதன். ஆய்வும், தீர்வும் 11
ஒரு நாள் பொழுது...! வலிமார்கள் பேசுகிறார்கள்...!14
செய்திகள் தருவது தர்கா எச்சரிக்கை...! 15
அரசியல் உலகம் ஹஜ்ரத் பதில்கள்! முஹர்ரம்? 16
பாத்திஹாக்களுக்கு நாள் குறித்தல் 17
தர்கா அலமாரி 18
திருமறையின் தெளிவுரை 19
வாசகர் மன்றம் 20



தங்கள் ஆலோசனைகள் வரவேற்கப்படுகின்றன.
தொடர்புக்கு :
ஆசிரியர் :
மௌலவி M.**சையத்அஹ்மத்,** M.A.,
74/176ஏ, முதல் மாடி,
காந்திஜிரோடு, இரட்டைமஸ்தான் தர்கா எதிரில், தஞ்சாவூர் - 613 001.
e-mail : dargah_tnj@yahoo.com
www.dargahtnj.blogspot.com



**அடுத்த வெளியீடு....**
**ஏப்ரல் - 2010**


## புனித தைக்கால்கள்...!

தைக்கால் என்ற சொல் "தக்யா" என்ற பாரசீக வேர் சொல்லிலிருந்து பிரிந்த ஒன்று. தக்யா என்றால் திண்டு, தலையனை என பொருள்படும்.

தமிழக முஸ்லிம்கள் ஷரீஅத் சட்ட விளக்கத்தில் தரீகாவைச் சேர்ந்த வலிமார்கள் இறுதியாக வந்து தங்கி கொடியேற்றி வைத்து தங்கள் மெஞ்ஞான போதனைகளை மக்களுக்கு எடுத்துக்கூறி மீலாது, மௌலூது, ஃபாத்திஹா, ராத்தீபு, நடத்தும் புனித இடங்களுக்கு தைக்கால் எனப் பொருள்பட நிறுவினார்கள்.

இவைகள் தான் வடக்கில் பாரசீக மொழியிலே கான்காக்கள் என்றும் உருது மொழியில் ஆஸ்தானாக்கள் என்றும் வழங்கப்பட்டுவருகின்றன.

இந்த தைக்கால்கள், ஆஸ்தானாக்கள், "கான்காக்கள்" தான் வாழையடி வாழையாய் முஸ்லிம்களுக்கு ஆன்மிக தஸவுஃப் என்னும் ஞானப்பாட்டையை காட்டி இம்மைக்கும் மறுமைக்கும் வழிகாட்டியாக திகழ்ந்தன. இன்னும் திகழ்கின்றன.

குழந்தை பயந்து அழுகிறதா? பால் குடிக்க மறுக்கிறதா?

அந்த தைக்காலுக்குப் போய் தைக்கா ஹஜ்ரத்திடம் ஓதிக்கொண்டுவா சரியாகிவிடும்.

வைத்தியத்தால் குணமாகவில்லையா?

தைக்கா லெப்பைமார்களிடம் முடிகயறு ஓதிப் பார்த்து தாயத்து போடு சரியாகிவிடும்.

மிக அதிக நாட்களாக நம் நற்காரியங்கள் தடங்கலாகின்றனவா?

தக்கியா சாபுவிடம் கேட்டு முராது வைத்து முஜாவரிடம் சொல்லி கந்தூரி கொடுப்பதும், நிய்யத்து வைத்து ஃபாத்திஹா ஓதி ஏழைகளுக்கு அன்னதானம் செய்வதும் காலங்காலமாய் முஸ்லிம் குடும்பங்களில் அன்றாடம் நடக்கும் நிகழ்வுகளாகும்.

இந்த தைக்காலில் தங்கி நல்லுபதேசம் செய்த அந்த மஹான்கள் இந்த உலக வாழ்க்கையை முடித்துக் கொண்டபோது அவர்களுக்கு அங்கே தர்கா எழுப்பி தேகம் அழியா அந்த புனித மஹான்களை ஜியாரத்து செய்து நன்மைகள் பல பெற்று நபி வழியில் நல்லமுறையில் நடந்து வந்தது நம் முஸ்லிம் சமுதாயம்.

இவைகள் எல்லாம் சட்டமாமேதைகளான நான்கு இமாம்களும் வகுத்துத்தந்த ஷரீஅத் சட்ட வழக்கப்படி ஆகுமானதே என்ற திடமான நம்பிக்கையுடன் சுமார் 1400 ஆண்டு காலமாக ஆலிம்கள், பெரியோர்கள், ஃபக்கீர்கள், மிஸ்கீன்கள், அறிஞர்கள், பொதுமக்கள் என்று எல்லா தரப்பினரும் ஜாதி இன நிற பேதங்களைக் கடந்து, ஏழைப் பணக்காரன் என்ற மாச்சரியங்களைக் மறந்து ஆண்டி முதல் அரசன் வரை எந்த சமய பாகு பாடின்றி மத நல்லிணக்க கூடங்களாக இந்த தைக்கால்கள் திகழ்ந்து வருகின்றன.எந்த கருத்து வேறுபாடின்றியும் தைக்கால்களை கொண்டாடி போற்றி அவற்றுக்கு மதிப்பளித்து வந்தனர்.

ஆனால் இன்று தனக்குத் தான் அனைத்தும் தெரியும் என்று அனைவரையும் ரட்சிக்க வந்த ரட்சகனாக (வழி கெடுக்க வந்த ராக்ஷசனாக) மீடியாக்களில் மக்களை குழப்பி மத்ஹபுகளின் மகிமையைப் புரிந்து கொள்ளாமல் இஸ்லாத்தில் 4 மத்ஹபுகளா? என ஏகடியம் பேசியவர்கள் 420 ஜமாஅத்துகளாக நாறிப்போன தவ்ஹீது வாலாக்களான தேவ்பந்தி, தப்லீகி, ஜமாஅத்தே இஸ்லாமி போன்ற நவீன வஹ்ஹாபிய ஜமாஅத்துக்கள் தான், தான்தோன்றிதனமான புதிய நவீன அப்துல் வஹ்ஹாப் நஜதி என்ற சண்டாளனின் கொள்கைகளால் மக்களை மடையர்கள் என்று நினைத்து ஷிர்க் பித்அத் என்று கூறி தைக்கால்களிலிருந்து மக்களை தூரமாக்குகிறார்கள்.

இந்த தூரம் மக்களுக்கு எல்லாவிதத்திலும் நஷ்டங்களையும், கஷ்டங்களையும் கொடுக்கிறது என்பதால் இந்த வஹ்ஹாபிய ஜமாஅத்துக்கள் உள்ளூர சந்தோஷமடைகின்றன. ஏனெனில் இந்த வஹ்ஹாபிய ஜமாஅத்துக்களின் எஜமானர்களான அமெரிக்க CIA மற்றும் அதன் மூலமான இஸ்ரேலி மொஸாட்டின் முஸ்லிம்களை பிரித்தாளும் நோக்கம் நிறைவேறுகிறது.

ஆகையால் பொதுமக்களே! தைக்கால்கள் மற்றும் தர்காக்களின் தொடர்புகளிலிருந்து உங்களையும் உங்கள் குடும்பங்களையும் வழிகேடர்களால் துண்டிக்கப்படாமல் பார்த்துக் கொள்ளுங்கள். தர்கா, தைக்கால் வழி நடங்கள்.

சிந்திப்போம்! செயல்படுவோம்!! வஸ்ஸலாம்!!!

## வாருங்கள் ஜியாரத் பயணம் செல்வோம்...

# ஷாஹ் விலாயத் ஹஜ்ரத் ஷர்புத்தீன் வலியுல்லாஹ்...

இவ்வாண்டு புனித நோன்பு பெரு நாளுக்குப் பின் நானும், மேலப்பாளையம் மௌலவி மீரான் முஹ்யித்தீன் மன்பஈ அவர்களும் மக்கன் பூர், பரேலி ஷரீஃப், முராதாபாத், அம்ரூஹா, டெல்லி, பானிபட் ஆகிய ஊர்களுக்கு வட இந்திய ஜியாரத் பயணம் புறப்பட்டோம். *29.09.2009ல் பரேலியில் அஃலா ஹஜ்ரத் அல்லாமா அஹ்மத் ரிளாகான் ரஹ்மதுல்லாஹி அலைஹி* அவர்களின் புனித மண்ணறையை ஜியாரத் செய்து விட்டு 30 ஆம் தேதி வியாழன் அன்று அம்ரூஹா என்னும் ஊரை நோக்கி பயணித்தோம். U.P மாநிலம், முராதாபாத் மாவட்டத்தைச் சேர்ந்த அம்ரூஹா - டெல்லியிலிருந்து 131 K.M தூரத்திலுள்ளது.

அங்கே தேள் தர்கா (உருது மொழியில் *பிஹ்ச்சுவாலீ தர்கா*) என்ற பெயரில் புகழ்பெற்ற தர்கா உள்ளது. அதில் ஷாஹ் விலாயத் ஷர்ஃபுத்தீன் வலியுல்லாஹ் அவர்களின் அடக்கஸ்தலம் உள்ளது. அங்கே உலா வருகின்ற தேளைப் பிடித்து நானும் மௌலவி மீரான் முஹ்யியத்தீன் அவர்களும் எங்கள் கரங்களில் ஓடவிட்டோம். கைகளில் ஓடுவதை போட்டோவும் எடுத்துக் கொண்டோம். பல முறை ஓடவிட்டும் அது எங்களை கொட்டவில்லை. தர்காவின் எல்லைக்கு வெளியே தேளை தூக்கி வந்தால் கொட்டிவிடுமாம்.

தர்காவின் புனித எல்லைக்குள் மாத்திரம் தேள் பிறருக்கு தொல்லை தராத ரகசியம் தான் என்ன? இதோ...

ஹஜ்ரத் ஷர்ஃபுத்தீன் வலியுல்லாஹ் அவர்கள் தன் ஜீவிய காலத்தில் வேற்றூரில் இருந்து வந்து அம்ரூஹாவில் குடியேறினார்கள். அங்கு ஏற்கனவே குடில் கொண்ட ஹஜ்ரத் நஸீருத்தீன் வலியுல்லாஹ் அவர்கள், ஹஜ்ரத் ஷர்ஃபுத்தீன் வலியுல்லாஹ் அவர்களை நோக்கி... "நீங்கள் இங்கே தங்க வேண்டாம். நீங்கள் இவ்வூரிலிருந்து புறப்படுங்கள்!" என்று சொன்னார்கள்.

"நான் இங்கிருந்து போக இயலாது. ஏனெனில் எனது ஷைகு அவர்கள் என்னை இங்கு அனுப்பினார்கள்!" என்று ஹஜ்ரத் ஷர்ஃபுத்தீன் வலியுல்லாஹ் அவர்கள் பதிலளித்தார்கள்!

"அப்படியானால் உங்கள் மரணத்திற்குப் பின் உங்கள் மண்ணறைக்கு மேலே தேள்கள் மேயும்!" என்றார்கள் ஹஜ்ரத் நஸீருத்தீன் ஒலியுல்லாஹ்!

"நீங்கள் சொன்னால் அது நடக்கத்தான் போகிறது. அனால் அத்தேள்கள் எனது எல்லையில் எவரையும் என்றைக்கும் கொட்டாது!" என்று சட்டென்று பதில் தந்தார்கள் ஹஜ்ரத் ஷர்ஃபுத்தீன் ஒலியல்லாஹ். மேலும் ஷர்ஃபுத்தீன் ஒலியுல்லாஹ் அவர்கள் நஸீருத்தீன் ஒலியுல்லாஹ் அவர்களை நோக்கி...



ஹஜ்ரத் அவர்களின் புனித மஜார் - அம்ரூஹா



கைகளில் கொட்டாத தேள்

நீங்கள் மரணித்தால் உங்கள் கப்ரைச் சுற்றிலும் கழுதைகள் உலா வரும் என்றார்கள். அதற்கு நஸ்ருத்தீன் ஒலியுல்லாஹ் அவர்கள், "நீங்கள் சொன்னால் அது நடக்கத் தான் செய்யும். ஆனால் கழுதைகள் என் எல்லையில் மல ஜலம் கழிக்காது!" என்றார்கள்.

மதிப்பிற்குரிய வாசகர்களே! வலிமார்களின் வாயிலிருந்து என்றோ வெளிப்பட்ட வார்த்தைகள் இன்றும் நிஜமாக நடக்கின்றன.

ஒரு தர்காவில் தேள்கள் பவனி. பிரிதொரு தர்காவில் கழுதைகள் பவனி. இவ்விரு தர்காக்களும் அம்ரூஹாவில் தான் உள்ளன. சுமார் ஒரு கிலோ மீட்டர் இடைப்பட்ட தூரத்தில்.

வலிமார்களின் கராமத்துகளை மறுக்கும் வஹ்ஹாபிகளை ஒன்று சொல்ல மனம் நாடுகிறது. வலிமார்களின் உள்ளத்துணரும் உதிப்பை அறியா மூடர்களே! மேலே உரைக்கப்பட்ட ஊருக்குச் சென்று உண்மைதனை நேரில் காணீர்!

புழுதி படிந்த தலைமுடிகொண்ட இறைநேசர் பலர், வாசல் விட்டு விரட்டப்படுவார்கள். ஆனால் அவர்கள், அல்லாஹ்வின் ஆணையாக இது இவ்வாறே நடக்கும் என்றுரைத்தால் ஐயமற அதை அவ்வாறே அல்லாஹ் நடத்தி வைப்பான்.

- நபி மொழி

**பயண செலவு :**

சென்னையிலிருந்து டெல்லிக்கு ரயிலில் செல்லலாம். டெல்லியிலிருந்து பரேலி, லக்னோ, முராதாபாத் செல்லும் அனைத்து ரெயில்களும் சுமார் 3 1/2 மணிநேரத்தில் அம்ரூஹா செல்கின்றன.

அம்ரூஹா ஸ்டேஷன் அருகிலேயே உள்ள முஸாபிர்கானாவில் ரூ 100/-க்கு வசதியான ரூம்கள் வாடகைக்குக் கிடைக்கின்றன.

ஒரு நபருக்கு உணவு மற்றும் தங்கும் செலவுகள் தவிர்த்து போக்குவரத்து செலவு மட்டும் ரூ 2500/- ஆகும்.

நேரம் கிடைக்கும் போது ஜியாரத்துக்கு சென்று வந்து நன்மை பெற்று உங்கள் பயண அனுபவங்களைக் கார்டில் எமக்கு எழுதுங்களேன். என்ன அடுத்த ஜியாரத்து பயணம் செல்ல தயாராவோமா?

*புனித ஜியாரத் பயண கட்டுரையை வழங்கியவர்:*

*கலீஃபா ஹல்லாஜியா தரீக்கா,*

**மௌலவி காஸிம் மஹ்ளரி பேஷ் இமாம் ஹஜ்ரத்**

*ஏழுலெப்பை பள்ளி, நாகூர் ஷரீஃப்.*

## On the spot

### அது அதுக்கு அப்டி அப்டி...

நானும் என்தோழர் சையத் அப்துல் காதர் அவர்களும், சென்னையில் ஒரு பிரபல பள்ளிவாசலில் மஃக்ரிப் தொழச் சென்றிருந்தோம். தொழுகையில் என் அருகில் இருந்த ஒருவர் விரலாட்டிக் கொண்டிருந்தார். நரம்புத் தளர்ச்சியோ...? எனத் தோன்றியது. நாம் இது பற்றி தொழுகை முடிந்து அவரை கேட்கலாம் என்றிருந்தோம். ஆனால் அவரோ சுன்னத்தை கூட தொழாமல் வெறுமனே உட்கார்ந்திருந்தார். நாம் தொழுது முடிப் பதற்குள் அவர் வெளியே சென்றுவிட்டார்.

நாம் வெளியே வந்து அவர் விரலாட்டியதைப் பற்றி அவரைப்பிடித்து கேட்கவேண்டும் என்று பேசிக் கொண்டிருந்த போதே சற்று தள்ளி நின்றிருந்த அவர் தானாகவே முன்வந்து, "உங்களோடு சற்று பேசவேண்டும்!" என்றார். "நாங்களும் அதை த்தான் எதிர்பார்த்தோம்!" என்றோம். காஜா அஜ்மீர் நாயகத்தின் தர்கா கயிற்றை என் நண்பர் கட்டியிருப்பதைக் காட்டி, "நீங்கள் ஏன் கையில் கயறு கட்டியுள்ளீர்கள்?" என்றார் அவர்.

என் நண்பர் அதற்கு, "தொழுகையில் உங்களைப் போல் நரம்புத் தளர்ச்சி ஏற்பட்டு விரல் வெடவெடக்காமல் இருக்கத்தான்!" என்றார். "ஆங்...! கையில் இப்படி கயறு கட்டுவதற்கு எந்த ஆதாரமுமில்லை ஆனால் விரலாட்டுவதற்கு எங்க தலைவர் ஆதாரம் காட்டி இருக்கிறார்!" என்றார் அவர். "உங்க தலைவர் பல வருடங்களாக விரல் ஆட்டச் சொன்ன ஆதாரம் மட்டும் தான் தங்களுக்கு கிடைத்துள்ளது. ஆனால் சில வருடங்களாக பிளேட்டை மாற்றி விரல் ஆட்ட வேண்டாம் எனச் சொன்ன ஆதாரம் உங்களுக்கு கிடைக்கவில்லை என்று நினைக்கிறேன். அவர் சொல்லிய படியே விரல் ஆட்டி தொழுத மவுத்தானவர்களின் நிலை மறுமை நாளில் என்ன ஆகும் தெரியவில்லை. உங்கள் தலைவர் எந்த ஆதாரத்திலும் நிலையாக நின்றதாக சரித்திரமில்லை. ஆனால் உங்களைப் பெற்ற தாய், தந்தை வலிமார்களின் பாதையில் இப்படி கையில் கயறு கட்டி வந்துள்ளனர். போய் முதலில் கயறு கட்டுங்கள் நரம்புத் தளர்ச்சி நீங்கும்!" என்றார். அவர் மேலும் ஏதோ உளர ஆரம்பிக்கவே நேரமாவதால் நான் நண்பரை அழைத்துக்கொண்டு வந்துவிட்டேன்.

**-தர்கா நேசன் முஜக்கீர் குலாம் முஹ்யித்தீன் பிஜ்லி, சென்னை. *03.12.2009***

# கண்ணியமிக்க பெண்கள்

## சஃபூரா அம்மையாரின் சிறப்பான வரலாறு

நபி மூஸா அலைஹிஸ் ஸலாம் அவர்களின் காலம்...

பிர்அவ்ன் நான் தான் மிகப் பெரிய இறைவன் என்று கூவிக் கொண்டிருந்தான். நபி மூஸா அவர்கள் பிர்அவ்னின் கர்வத்தை எதிர்த்து தன்னந்தனியாக அல்லாஹ் ஒருவன் தான் என முழங்குகிறார்கள்...

பொறுத்துக் கொள்ள முடியவில்லை அவனால். நபி மூஸாவின் தலையை வெட்டி எடுத்து வாருங்கள் என்று தன் படை பரிவாரங்களுக்கு உத்திரவு பிறப்பித்தான்.

எகிப்து நகரம் அல்லல் படுகிறது. மக்கள் பீதிக்குள்ளாகின்றார்கள். மன்னன் மக்களைப் பற்றிய கவலை சிறிதும் இன்றி நபி மூஸாவின் தலையைக் கொய்வதிலேயே குறியாக இருக்கிறான்.

நபி மூஸாவிற்கு தகவல் வருகிறது. தன்னைச் சார்ந்தோரிடம் நீண்ட ஆலோசனை செய்து அந்த பிர்அவ்னின் சாம்ராஜ்யத்தை விட்டு யாருக்கும் தெரியாமல் வெளியேறுகிறார்கள்.

எகிப்து தேசத்தில்தான் அக்காலத்தே நபி ஷுஐப் அலைஹிஸ் ஸலாம் அவர்கள் வசித்து வந்தார்கள். ஹஜ்ரத் அவர்களின் குடும்பத்தினர் ஆடுகள் வளர்ப்பில் ஜீவானம்சம் நடத்தி வந்தார்கள். அவர்களுக்கு இரு பெண் மக்கள் இருந்தனர். அவர்கள் அந்த ஆடுகளை மேய்த்து வந்தனர். மத்யனில் ஒரு பொது கிணறு இருந்தது. அதில் தான் எல்லோரும் தங்கள் ஆடுகளுக்கு தண்ணீர் அருந்த வைப்பது வழக்கம். எப்போதும் போல் தன் ஆடுகளுக்கு தண்ணீர் குடிக்க வைக்க அந்த கிணற்றிற்கு நபி ஷுஐப் அவர்களின் மகளாரும் வந்தார்கள். இந்த நீண்ட வரலாற்றை திருக்குர்ஆனின் வசனங்கள் இப்படி இயம்புகின்றன.

(அவ்வாறு சென்ற அவர்) மத்யன் நகரத்தின் வெளியிலிருந்து ஒரு கிணற்றின் சமீபமாக வந்த பொழுது ஒரு கூட்டத்தினர் (தங்கள் ஆடு, மாடு முதலிய கால் நடைகளுக்கு) தண்ணீர் புகட்டிக் கொண்டிருப்பதையும் அதற்கு அருகில் இரு பெண்கள் (தங்கள் ஆட்டு மந்தையை) வளைத்து நிறுத்திக் கொண்டிருப்பதையுக் கண்டு (அப் பெண்களை நோக்கி) "உங்கள் விஷயமென்ன? எதற்காக நீங்கள் தேங்கி நிற்கிறீர்கள்" என்று கேட்டார். அதற்கு அவ்விரு பெண்களும், "இம் மேய்ப்பர்கள் தங்கள் கால் நடைகளுக்கு தண்ணீர் புகட்டி விலகும் வரையில் நாங்கள் எங்கள் ஆடுகளுக்கு தண்ணீர் புகட்ட முடியாது. எங்கள் தந்தையோ வயது முதிர்ந்த கிழவர். (அவர் இங்கு வர முடியாததால் நாங்களே இவைகளை ஓட்டி வந்திருக்கிறோம்!" என்று கூறினார்கள்.

(இவைகளை செவியுற்று அனுதாபப் பட்ட ) அவர் அவர்களுடைய கால்நடைகளுக்கு தண்ணீர் (இறைத்துப்) புகட்டி விட்டு (சிறிது) விலகி ஒரு (மரத்தின்) நிழலில் அமர்ந்து கொண்டு, "என் இறைவனே எந்த ஆகாரத்தை நீ தந்த போதிலும் நிச்சியமாக நான் அதை விரும்பக் கூடியவனாகவே இருக்கிறேன்!" என்று பிராத்தித்தார்கள்.

அது சமயம் (அவ்விரு பெண்களில்) ஒருவர் மிக்க நாணத்துடன் இவர் முன் வந்து, "நீர் எங்கள் கால் நடைகளுக்கு தண்ணீர் புகட்டியதற்குரிய கூலியை உமக்குக் கொடுக்கும் பொருட்டு மெய்யாகவே என் தந்தை உம்மை அழைக்கிறார்!" என்று கூறினார். மூஸா அவர்களிடம் சென்று தன் நிலையைக் கூறவே அவர், "இனி நீர் பயப்பட வேண்டாம். அக்கிரமக்கார ஜனங்களை விட்டு நீர் தப்பித்து கொண்டீர்!" என்று கூறினார்.

(அத் தருணத்தில் இவ்விரு பெண்களில் ஒருவர்) "என் தந்தையே! நீர் இவரைக் கூலிக்கு அமர்த்திக் கொள்ளும். நிச்சயமாக (இந்த) நம்பிக்கையுள்ள பலவானை நீர் கூலிக்கு அமர்த்திக் கொள்வது மிக்க நல்லது!" என்று கூறினார்.

அதற்கு அவர் (மூஸாவிடம்) கூறினார்... "நீர் எனக்கு எட்டு வருடங்கள் வேலை செய்ய வேண்டும் என்ற நிபந்தனையின் மீது இவ்விரு பெண்களில் ஒருவரை நான் உமக்கு விவாகம் செய்து கொடுக்க விரும்புகின்றேன். நீர் அதை பத்து வருடங்களாக பூர்த்தி செய்தால் அது நீர் எனக்குச் செய்யும் நன்றி தான். நான் உமக்கு (அதிகமான) சிரமத்தை கொடுக்க விரும்பவில்லை. அல்லாஹ் நாடினால் நீர் என்னை உமக்கு உபகாரியாகவே காண்பீர்!" (என்றார்கள்)

அதற்கு மூஸா ; உமக்கும் நமக்குமிடையில் இதுவே (உடன்படிக்கையாகும்) இவ்விரு நிபந்தனைகளில் எதையும் நான் நிறைவேற்றலாம் (இன்னதைத்தான் நிறைவேற்ற வேண்டுமென்று) என்மீது கட்டாயமில்லை. நாம் பேசிக் கொண்ட இவ்வுடன் படிக்கைக்கு அல்லாவே சாட்சி என்று கூறினார்கள்.

**அத்தியாயம் கஸஸ் வசனம் 23...28**

மேற்கண்ட மத்யனில் நபி மூஸா அலைஹிஸ் ஸலாம் அவர்களுக்கும் நபி ஷுஐப் அவர்களின் மகள் சஃபூரா அம்மையாருக்கும் (நிக்காஹ்) விவாக உடன்படிக்கை எட்டு-பத்து வருட சேவையே மஹ்ராக இருக்க திருமணம் நடந்தேறியது. மத்யன் பிரதேசத்தில் நுழைந்த உடன் முதன் முதலில் சந்தித்த பெண்மணி சஃபூரா அம்மையாரே நபி மூஸா அவர்களின் வாழ்க்கைத் துணைவியானார்கள்.

நிக்காஹ்வும், மணப்பெண்ணின் வருகையும் நல்ல வரவாக அமையும் என்பது அன்னை சஃபூரா அம்மையாரின் வாழ்க்கை நல்ல முன் மாதிரி ஆகும். நபி மூஸா அவர்கள் சஃபூரா அம்மையாரை நிக்காஹ் முடித்து துணைவியாரை அழைத்து வரும் போது தான் தூர்சீனா மலையில் இறைதரிசனம் கிடைத்த பெரும் பாக்கியத்தை தித்திக்கும் திருமறையின் வசனம் குறிப்பிடுகின்றது.

நபி மூஸா அவர்கள் தன் தவணையைப் பூர்த்தி செய்து (நபி ஷுஐப் அவர்களின் மகளை விவாகம் செய்து கொண்டு) தன் மனைவியை அழைத்துக் கொண்டு சென்ற பொழுது (ஓர் இரவு வழி தெரியாது திகைத்துக் கொண்டிருந்த சமயத்தில்) தூர் (சீனாய்) மலையின் பக்கத்தில் ஒரு நெருப்பைக் கண்டு தன் குடும்பத்தினரை நோக்கி நீங்கள் (சிறிது) தாமதித்திருங்கள். நான் ஒரு நெருப்பைக் காண்கிறேன். நான் (அங்கு சென்று நான் செல்ல வேண்டிய) பாதையைப் பற்றியதொரு தகவலை உங்களுக்கும் கொண்டுவரக்கூடும். அல்லது நீங்கள் குளிர் காய்வதற்கேனும் ஒரு எரிக் கொள்ளியை கொண்டு வருகிறேன் என்று கூறினார்கள்.

இறை தரிசனம் மூஸா நபிக்கு சஃபூரா அம்மையாரை நிக்காஹ் செய்த பிறகு தான் நடந்தது என்பதும் இங்கு கவனிக்கத்தக்கது.

---

**வஸீலா தேடுவதின் வகைகள் மூன்று : -**

*1. இறைவா இன்ன அவ்லியாவின் பொருட்டால் எனது இன்ன காரியத்தை நிறைவேற்றுவாயாக என்று இறைவனிடம் கேட்பது.*

*2. இன்ன அவ்லியாவே எனது இன்ன காரியம் நிறைவேற இறைவனிடம் கேளுங்கள் என்று அவ்லியாவிடம் கேட்பது.*

*3. இன்ன அவ்லியாவே எனது இன்ன காரியத்தை நீங்களே நிறைவேற்றித் தாருங்கள் என்று அவ்லியாவிடம் கேட்பது.*

*இம் மூன்று வகைகளாக கேட்பது ஆகும் என்றும் இம் மூன்று வகையும் ஒன்று தான் என்றும் இமாம் தகிய்யுத்தீன் ஸுபுக்கி ரஹிமஹுமுல்லாஹ் அவர்கள் கூறியுள்ளார்கள். ஆதாரம் : ஷிபா உஸ்ஸகாம் பக்கம் 134*

அனல் வாஹிதுல் ஃபார்துல் கபீரு பீ ஜாத்திஹி...!

# யா கௌஸ்...! யா முஹ்ய்யித்தீன்...! கண்மணி நாயகத்தின் மீலாதும், மௌலூதும்...!

**ஆக்கம் :** தீன் தீன் முஹ்யித்தீன் என்று முஹ்யித்தீனில் மூழ்கியிருக்கும் முஹ்யித்தீன் அடிமை.

**சலவாத்து சொல்லுவோம்!**

இன்னல்லாஹா வ மலாயிகத்தஹு யுஸல்லூன அலன்னபிய்யீ யா அய்யுஹல் லஜீன ஆமனூ ஸல்லூ அலைஹி வ ஸல்லிமூ தஸ்லீமா.

ஓ, விஸ்வாஸிகளே (அல்லாஹ் வாகிய) நானும் எனது அமரர்களும் உங்கள் நபி மீது சலவாத்து (வாழ்த்து) சொல்கிறோம். நீங்களும் சொல்லுங்கள்.

-குர்ஆன்

அல்லாஹ் மனிதர்களுக்கு பல கடமைகளை விதித்திருக்கிறான். பல முக்கிய செயல்களை நம்மை செய்யச் சொல்கிறான். ஆனால் அவைகளை அவன் செய்வதில்லை!

நாம் கலிமா சொல்ல வேண்டும் - அவன் சொல்வதில்லை.

ஏனென்றால் கலிமாவின் கருப் பொருளே அவன் தான்.

நாம் தொழ வேண்டும் - வணங்க வேண்டும் - அவன் யாரையும் வணங்க வேண்டியதில்லை.

ஏனென்றால் வணக்கத்திற்கு உரியவனே அவன் தான். அணு முதல் அண்டசராசரங்கள் வரை அனைத்துமே அவனைத்தான் வணங்குகின்றன - வழிப்படுகின்றன. எனவே அவன் யாரையும் வணங்க வேண்டியதில்லை!

நாம் நோன்பு நோற்று ஆன்ம பரிசுத்தம் அடைய வேண்டும் (அதனால் நம் ரூஹ் (ஆன்மா) ரூஹுல் குத்தூஸாக வேண்டும். (புனித ஆன்மாவாக வேண்டும்.)

அல்லாஹ் பரிசுத்தமே உருவான குத்தூஸ் எனவே அவனுக்கு எந்தவித நோன்பும் தேவையில்லை!

நாம் ஏழை வரியான ஜக்காத்தைக் கொடுக்க வேண்டும் உண்மையில் எல்லோருக்கும் எல்லாவற்றையும் கொடுக்கும் உண்மையான வள்ளல் - உண்மையான சீமான் (கனீ) அவன் ஒருவன் தான்.

நாம் அனைவரும் சிறிய - பெரிய பிச்சைக்காரர்கள் தான். அவன் நமக்கு கொடுப்பதைத்தான் நாம் மற்றவர்களுக்கு கொடுக்கிறோம்!

நாம் புனித காபாவைச் சுற்றி வலம் வந்து வழிப்பட்டு ஹஜ்ஜு கடமையை நிறைவேற்ற வேண்டும் - அனைத்து உயிர்களும் பொருள்களும் சுற்றி வலம் வரும் கருப் பொருளே அவன் தான்!

**அல்லாஹ் செய்யும் செயல்...**

ஆக நாம் செய்ய வேண்டிய ஃபர்ளு, சுன்னத், வாஜிபு போன்ற எந்த கடமைகளையும் அவன் செய்வதில்லை- ஒன்றே ஒன்றைத் தவிர...

நம் கண்மணி நாயகம் ஸல்லல் லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் மீது அல்லாஹ்வும் அவனுடைய கோடிக் கணக்கான அமரர்களும் சலவாத்து சொல்லிவிட்டு நம்மையும் சலவாத்து சொல்லச் சொல்கிறான்!

நாம் செய்ய வேண்டிய புனிதக் கடமைகளில் அல்லாஹ்வும் செய்யும் ஒரே செயல் நபிகள் திலகம் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் மீது ஸலவாத்து ஓதுவது தான்!

ஆக, நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீதும் அவர்களின் வம்சாவழி அஹ்லே பைத்து - பாரம்பரிய கிளையார்கள் அத்தனைப் பேர் மீதும் இறுதி காலம் வரை இதயப்பூர்வ நேசத்தோடு சலவாத்து சொல்ல வேண்டியது - வாழ்த்துரைக்க வேண்டியது. அல்லாஹ் நமக்கு ஆணையிட்டுள்ள அன்புக் கட்டளை!

**நுபுவத்து சூரியனும், விலாயத்து வேந்தரும்...**

அல்லாஹ்வின் இந்த இனிய கட்டளையின் அடிப்படையில் தான் உலகத்து அனைத்து முஸ்லிம்கள் - முஃமின்கள் - முத்தகீன்கள் அனைவரும் அண்ணல் லல்லல் லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் மீதும் அவர்களின் பரிசுத்த அஹ்லே பைத் கிளையார்கள் மீதும் இரவு பகல் இடைவெளியில்லாமல் சலவாத்து ஓதுவது, ஆண்டுதோறும் புனித ரபியுல் அவ்வல் மாதத்தில் மீலாதுன் நபி பெருவிழா நடத்துவது, நபிகள் திலகம் ஸல்லல் லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களின் புனித மௌலூது ஷரீஃப் ஓதுவது, விதவிதமான இனிய கந்தூரி விருந்துகள் அளிப்பது கோமான் நபிகள் நாதர் அவர்களின் புனித விழாக்களை மிகக் கோலாகலமாக கொண்டாடி குதூகலிப்பது மற்றும் நபிகள் பெருமான் ஸல்லல் லாஹு அலைஹு வ ஸல்லம் அவர்கள் சம்பந்தமுள்ள புனித நிகழ்ச்சிகளான மிஃராஜ் புனித இரவு, நபிகள் பேரரசர் ஸல்லல் லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களுக்கு நபித்துவமும் - மனித குலத்திற்கு மாமறை குர்ஆன் ஷரீஃபும் இறக்கப்பட்ட ஆயிரம் இரவுகளை விட சிறந்த இரவு என்று குர்ஆன் கூறும் புனித லைலத்துல் கத்ரான இனிய இரவு போன்ற அனைத்து நிகழ்ச்சிகளிலும் பூமான் நபிகள் ஸல்லல் லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களின் புகழ்பாடி பூரிப்பது ஆகிய அத்தனை தூய செயல்களும் இவை தொடர்புள்ள உலகக் காரியங்களும் அத்தனைச் செயல்களும் அல்லாஹ்வின் கட்டளைக்கு உட்பட்ட ஃபர்ளு, சுன்னத், வாஜிபு போன்ற பரிசுத்த கடமைகள் தான்.

**விலாயத் வேந்தருக்கு விழா எடுப்போம்...**

நுபுவத்துச் சூரியன் ஆன அண்ணல் ஸல்லல் லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களை அடுத்து விலாயத்துச் சந்திரன் ஆன விலாயத்து வேந்தர் அப்துல் காதர் ஜீலானி ஆண்டகை அவர்களின் மகத்தான அவதாரத் திருநாள் ஆன புனித ரமளான் முதல் நாள் முஹ்யித்தீன் எஜமான் அவர்களின் பிறந்த தினப் பெருவிழாவைக் கொண்டாடுவதும் அடுத்து முஹ்யித்தீன் பிரபு அவர்களின் புனித திருமாதமான ரபியுல் ஆகிர் மாதத்தில் பிறை 11லும் மாதம் முழுவதிலும் முஹ்யித்தீன் ஆண்டகை அவர்களின் மகத்தான மௌலூது ஷரீஃப் ஓதுதல் சிறப்பு நிகழ்ச்சிகள், பயான்கள் கந்தூரி விருந்துகள் நடத்துவதும் அல்லாஹ்வின் கட்டளைகளுக்கு உட்பட்ட கட்டாயத் தேவைகளே!

**புனித அஹ்லே பைத்துக்கள்...**

புனித அஹ்லே பைத்துகளின் மூலவர்களான அன்னை பாத்திமா ரஜியல்லாஹு அன்ஹா, ஆன்மிகக் கோட்டையின் தலைவாயில், வீரர் திலகம் ஹஜ்ரத் அலீ ரஜியல்லாஹு அன்ஹு, சன்மார்க்க சத்திய தியாகிகள் ஹஜ்ரத் இமாம் ஹஸன் ரஜியல்லாஹு அன்ஹு, ஹஜ்ரத் இமாம் ஹுசைன் ரஜியல்லாஹு அன்ஹு, ஹஜ்ரத் இமாம் ஜைனுல் ஆபிதீன் ரஜியல்லாஹு அன்ஹு, ஹஜ்ரத் இமாம் ஜாஃபர் சாதிக் ரஜியல்லாஹு அன்ஹு ஆகிய அந்த வரிசையில் அத்தனை பேர்களின் பெயர்களாலும் அந்தந்த புனித நாட்களில் சிறப்பு துஆக்களுடன் விழாக்களும் விருந்துகளும் நடத்துவதும் தேவையே! அடுத்து...

உலகமெல்லாம் பரவி ஆங்காங்கே வாழ்ந்த - வாழ்ந்து கொண்டிருக்கின்ற வரப் போகின்ற அஹ்லே பைத் வம்ச வாரிசுகள்...

இங்கே இந்தியாவில் குத்புல் ஹிந்த் அஜ்மீர் காஜா முயீனுத்தீன் ரஜியல்லாஹு அன்ஹு அவர்கள், குல்பர்கா காஜா பந்தே நவாஸ் ரஜியல்லாஹு அன்ஹு அவர்கள் தென்னக ஏகத்துவ காவலர் நாகூர் ஷரீஃப் ஷாஹுல் ஹமீத் ரஜியல்லாஹு அன்ஹு அவர்கள் மற்றும் அவரவர் வழி நாதாக்கள் உட்பட உலகில் எங்கெல்லாம் அஹ்லே பைத்துகளின் - சந்ததிகளின் இறையருட் செல்வர்கள் மறைந்தும் மறையாமலும் அருளாட்சி செய்து கொண்டிருக்கிறார்களோ, ஏன் இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்களோ இனியும் வரப்போகிறார்களோ அவர்கள் அத்தனைப் பேர்களுக்கும் சிறப்புகள் செய்ய வேண்டும் - வாழ்த்துரைக்க வேண்டும் - சலவாத்து சொல்ல வேண்டும்.

**ரசூலின் ஜனனம்...**

கி.பி. 571ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21ஆம் தேதி திங்கட்கிழமை அதிகாலை மக்காவின் புனித மயமான காபா ஆலைய வளாகம்.

அன்றைய மக்கா மாநகரில பிரபல முக்கியப் புள்ளிகள் சிலர் அந்த அதிகாலை நேரத்தில் காபாவின் தாழ்வாரத்தில் வழக்கம் போல் அமர்ந்து பேசிக்கொண்டிருந்தார்கள்.

அண்ணல் அப்துல்லாஹ் ரஜியல்லாஹு அன்ஹு அவர்களின் வீட்டுப் பணிப் பெண் வந்து அந்தக் கூட்டத்தில் ஒருவராக அமர்ந்து பேசிக்கொண்டிருந்த அப்துல்லாஹ் அவர்களின் மூத்த சகோதரர் அபூ லஹப் அவர்களை நோக்கி பணிந்து தாழ்மையுடன், "ஏஜமானே! இன்று அதிகாலை சிறிது நேரத்திற்கு முன்னால் தங்கள் சகோதரர் அப்துல்லாஹ் அவர்களின் மனைவியார் ஹஜ்ரத் ஆமினா அம்மையார் அவர்களுக்கு ஒரு அழகான ஆண் குழந்தை பிறந்தது. தாயும் குழந்தையும் நலமாக உள்ளனர்!" என்று பணிவோடு கூறி முடித்தாள்.

இதைக் கேட்டதும் அபூ லஹப் அவர்கள் தனக்கே உரிய பெரிய மனிதத் தோரணையில் மிடுக்கோடு நிமிர்ந்து தன் வலது கையின் பெருவிரலை நீட்டிய படி கம்பீரமான குரலில்....

"பெண்னே! நல்ல செய்தியைச் சொன்னாய். மகிழ்ச்சி! நன்றி!" என்றார். பணிப் பெண் பணிவுடன் சென்று விட்டாள்.

சில மாதங்களுக்கு முன்னால் காலஞ்சென்ற தன் சகோதரர் ஹஜ்ரத் அப்துல்லாஹ் அவர்களின் மனைவிக்கு ஒரு ஆண் குழந்தை பிறந்துள்ளது என்ற செய்தி அபூ லஹப் அவர்களைப் பொறுத்த வரையில் ஒரு பெரிய விஷயமல்ல. அவருக்கு உண்மையில் அதனால் ஒரு மகிழ்ச்சியோ, ஒரு நெகிழ்ச்சியோ ஏதுமில்லை. தன் குடும்பத்தில் ஒரு குழந்தை பிறந்துள்ளது என்ற ஒரு செய்தியை பணிப் பெண் சொன்னதும், அதைக் கேட்டதும் பக்கத்திலிருப்பவர்கள் தன்னை உயர்வாக நினைக்கும் விதத்தில் தன் பெரிய மனிதத் தோரணையை வெளிப்படுத்தும் வகையில் தன் வலது கை பெருவிரலை நீட்டி அப்படி "மகிழ்ச்சி! நன்றி!" என்று சொன்னார். அவ்வளவுதான். அதற்கு மேல் அவருக்கு அதில் அக்கரை ஏதுமில்லை.

அதன் பிறகு அந்த குழந்தை என்ன ஆயிற்று, எப்படியிருக்கிறது என்றெல்லாம் அவர் கேட்கவுமில்லை. அதைப் பற்றி சிந்திக்கவுமில்லை. ஏன் - பல ஆண்டுகள் அந்த குழந்தையைப் பற்றி மறந்தே விட்டார்.

**குழந்தைப் பருவம்...**

அல்லாஹ்வின் அருள் ஒளி அஹ்மதான - அற்புத முஹம்மதான தெய்வக் குழந்தை வனப்போடும், வாய்மைப் பொலிவோடும் வளர்ந்தார்கள்.

நாயகம் அவர்கள், பால பருவத்திலிருந்து சிறுவர் என்ற நிலைக்கு வந்ததும், அந்த சிறுவயதில் இருந்தே எல்லையற்ற இறைநேச தாகத்தோடும் மற்ற மனிதர்களையெல்லாம் விட்டு அடிக்கடி தனித்தும் தனித் தன்மையோடும் திகழ்ந்தார்கள்.

அடுத்து தன் இளமைப் பருவத்திலிருந்தே முஹம்மத் ஸல்லல் லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் ஏகத்துவத்தோடு பேச ஆரம்பித்தார்கள்.

இறைவன் ஒருவன் - அவன் இணை துணை அற்றவன் - அனைத்தும் அவனே - அவனே வணக்கத்துக்குரியவன். இதுவே சரியான பாதை - மற்றவை எல்லாம் தவறான கற்பனைகள். என்று முழக்கமிட ஆரம்பித்தார்கள்.

இதைக் கேட்டதும், மற்ற குரைஷிகளைப் போலவே அபூ லஹ்பும் கொதித்தெழுந்தார்.

தன் முன்னோர்களின் மார்க்கத்தையும் பல்லாண்டு காலமாக அவர்கள் வணங்கி வந்த தெய்வங்களையும் குறை சொல்லும் இந்த இளைஞரை அன்றே குழந்தையாய் இருக்கும் போதே கொல்லாமல் விட்டுவிட்டோமே என்று வேதனைப் பட்டார்.

அண்ணல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களுக்கு தொல்லை கொடுப்பதில் அபூ ஜஹல் போன்ற மற்ற விரோதிகளுடன் அபூ லஹ்பும் அவர் மனைவியும் முண்ணியில் இருந்தார்கள். ஆம், அண்ணல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களை எப்படியாவது கொன்றொழிக்க வேண்டும் என்று கூட திட்டமிட்டார்கள். அது நடக்க வில்லை.

காலம் வேகமாக விரைந்தது. இப்போது அபூ லஹ்புக்கு நிறைய வயதாகி விட்டது. ஒடுங்கி ஓய்ந்து விட்டார்.

**அபூ லஹ்பின் இறுதி நொடிகள்...**

இன்று அவர் மரணப்படுக்கையில் கிடக்கிறார். இனி அவர் பிழைக்க மாட்டார் என்று எல்லோரும் பேசிக் கொண்டார்கள்.

இந்த நேரத்தில் சிலர் அண்ணல் நபி ஸல்லல் லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களிடம் தனது பெரிய தந்தையார் அபூ லஹப் அவர்கள் மரணப்படுக்கையில் கிடக்கிறார். மிகவும் சிரமப் படுகிறார் என்று சொன்னார்கள். இதைக் கேட்டதும் அண்ணல் நபி ஸல்லல் லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் உடனே எழுந்தார்கள் அபூ லஹப் வீட்டை நோக்கி நடந்தார்கள். அவர்களை பின் தொடர்ந்து சில தோழர்களும் சென்றார்கள். அபூ லஹப் தன் வீட்டில் ஒரு அறையில் படுக்கையில் கிடத்தப் பட்டிருந்தார்.

அவர் மூச்சு விட முடியாமல் திணறிக் கொண்டிருந்தார். மார்பு விம்மி விம்மி துடித்தது. இது இறுதி நேர அறிகுறி என்பது பார்த்த உடனே புரிந்தது. அவர் அருகில் சென்ற கருணை நபி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் அவர் நிலையைப் பார்த்து கண் கலங்கினார்கள்.

**கருணை நபியின் புனிதக் கரம்...**

காலமெல்லாம் தன்னை துன்புறுத்தவும் தன்னை அழிக்கவும் பெரு முயற்சிகள் செய்து கொண்டிருந்த பரம விரோதியான அபூ லஹ்பின் நிலையைப் பார்த்து பரிசுத்த திரு நபி பரிவோடு அவரை நெருங்கினார்கள். வேதனையோடு விம்மித்துடிக்கும் அபூ லஹ்பின் மார்பை தம் திருக் கரத்தால் தடவி விட தாஹா நபி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் வற்றாத கருணை ஊற்றான தம் வலது கையை அபூ லஹ்பின் மார்பை நோக்கி நீட்டினார்கள். அதே கணத்தில் அவர்கள் திருக் கரத்தை திடீரென்று யாரோ பின்னுக்கு இழுப்பதைப் போல் உணர்ந்து திடுக்கிட்டு திரும்பிப் பார்த்தார்கள்.

அங்கே மிக நெருக்கமாக ஜீப்ரீல் அலைஹிஸ் ஸலாம் அவர்கள் நின்றிருந்தார்கள். "யா ரஸூலல்லாஹ்! இந்த அபூ லஹ்ப் மிக மிக கொடியவன் தங்களுக்கு காலமெல்லாம் கணக்கில்லா கொடுமைகளைச் செய்தவன். இவன் தங்களுக்கு செய்த கொடுஞ் செயல்களுக்காக இந்த பெரும் பாவி நிச்சயம் நரகத்திற்குத் தான் செல்ல வேண்டும் என்பது இறைவனின் நாட்டம். புனிதமான தங்கள் திருக் கரத்தால் அவனைத் தொட்டு விட்டால் தங்கள் புனிதக் கரம் அவன் மீது பட்டு விட்டால் உடனே அவன் சொர்க்கத்திற்குச் செல்லும் தகுதியைப் பெற்று விடுவான் அல்லாஹ் அதை விரும்பவில்லை. எனவே தங்கள் திருக் கரத்தால் அவனைத் தொட வேண்டாம்!" என்று சொன்னார்கள்.

அல்லாஹ்வின் கட்டளைக்கு முன் தம் சொந்த பந்த பாச விருப்பு - வெறுப்புகளுக்கு மட்டுமல்ல கருணை என்ற தனித் தன்மைக்கு கூட இம்மியளவும் இடம் தராமல் அண்ணல் நபி ஸல்லல் லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் உடனே தம் இருப்பிடம் திரும்பி விட்டார்கள்.

**தேனமுதமும் திங்கட்கிழமையும்...**

அடுத்த சில நாழிகைகளில் அபூ லஹ்ப் இறந்து விட்டார்.

இறந்த நபர்களை கனவிலே காண்பதும், அவர்களின் மறுமை நிலைப் பற்றி பேசுவதும் அக்கால அரபுகளின் வழக்கம்.

இறப்புக்குப் பின் அபூ லஹ்ப் நரகத்தில் கிடந்து தண்டனைகளை அனுபவிப்பதாகவும், வேதனை பொறுக்க முடியாமல் பெரும் கூக்குரலிட்டு கதறுவதாகவும், தாங்கள் கனவிலே கண்டதாகவும் அடிக்கடி சிலர் பேசிக் கொண்டார்கள்.

ஒரு நாள் ஒருவர் தான் நேற்று இரவு கனவிலே அபூ லஹ்பை நரகத்தில் கண்டதாகவும், அபூ லஹ்ப் நரக வேதனையில் துடித்துக் கொண்டே அருகில் இருந்த மற்றொரு நரக வாசியிடம், "திங்கட்கிழமை எப்போழுது வரும்!" என்று கேட்டாராம் அதற்கு அந்த

நரகவாசி, “நரகத்தில் துடித்துக் கொண்டிருப்பவருக்கு எந்த கிழமையானால் என்ன? அதென்ன திங்கட்கிழமையைக் கேட்கிறாய்?” என்றாராம்.

“அந்த திங்கட் கிழமை வந்தால், அன்று ஒரு நாள் மட்டும் தான் இதோ இந்த வலது கைபெருவிரலில் இருந்து மிகவும் சுவையான தேனமுதம் சுரக்கிறது. அந்த அமுதத்தை சுவைத்துக் கொண்டு தான் வாரத்தின் மற்ற நாட்களின் துன்பத்தை மறந்து விடுகின்றேன்!” என்று அபூ லஹ்ப் சொன்னாராம்.

அன்று கி.பி. 571ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21ஆம் தேதி திங்கட் கிழமை அதிகாலை அந்தப் பணிப் பெண் வந்து காபாவின் அருகில் இருந்த அபூ லஹ்பிடம் அண்ணல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் அவதரித்த இனிய செய்தியைச் சொன்ன போது அபூ லஹ்ப் தனது வலது கை பெருவிரலை நீட்டி மகிழ்ச்சி! நன்றி! என்று இரண்டே இரண்டு வார்த்தைகளை சொன்ன போது அவரது வலது கை பெருவிரலை ஆட்டியதற்காக அந்த வலது கை பெரு விரலுக்கு மட்டும் சொர்க்கத்தினை அனுபவிக்கும் தகுதியை - அதில் மட்டும் சுவனத்தின் தேனமுதம் சுரக்கும் பாக்கியத்தை அல்லாஹ் அருளி விட்டான் என்பது புரிகிறது.

பக்கத்தில் இருந்தவர்கள் பார்க்க வேண்டும் என்ற நோக்கத்துடன் ஒப்புக்கு சம்பிரதாயமாக உள்ளுணர்வே இல்லாமல் அன்று அபூ லஹ்ப் திரு நபிபிறந்த செய்திக்காக மகிழ்ச்சி! நன்றி! என்று வலது கை பெருவிரலை நீட்டியதற்கே அந்த விரலுக்கு அல்லாஹ் சொர்க்கத்தின் தகுதியை வழங்கி விட்டான்.

தொடரும்...

## மத்திய அரசின் மதரஸா நலவாரியம் مرکزی مدرسہ بورڈ کا قضیہ

மத்திய அரசால் மதரஸா நலவாரியம் அமைப்பதற்காக மத்திய அரசு கொண்டு வந்த மசோதாவை தங்கள் தீவிரவாத தாலிபான் சார்பு குட்டு வெளிப்பட்டுவிடும் என்ற அச்சத்தில் வஹ்ஹாபிய தேவ்பந்து மதரஸா மசோதாவை எவ்வித பரிசீலனையும் செய்யாமல் நிராகரித்து விட்டது.

ஆனால் அதே வேளையில் அகில இந்திய சுன்னத் வல் ஜமாஅத் சார்பாக நாடெங்கிலும் உள்ள சுன்னத் வல் ஜமாஅத் உலமாக்கள் 18.11.2009 அன்று அல் பரகாத் எஜுகேஷனல் இன்ஸ்டிடியூட்டி- அலிகடில் (Aligarh) ஒன்று கூடி All India Madrasa coordination committeeயை அமைத்தனர்.

ஹஜ்ரத் அமீனே மில்லத் Prof.சையத் ஷாஹ் முஹம்மத் அமீன் மியான் பரகாத்தி, (சஜ்ஜாதா நிஷீன் கான்காயே ஆலியா பர்காத்தியா, மாரஹ்ரஹா முதஹ்ஹரா) அவர்கள் தலைமை புரவலராகவும், ஹஜ்ரத் மௌலானா சுப்ஹான் ரிளா கான் சுப்ஹானி மியான் (சஜ்ஜாதே நிஷீன் கான்காயே ரிஸ்வியா பரேல்வி) அவர்கள் புரவலராகவும், மௌலானா முஹம்மத் அஹமத் மிஸ்பாஹி (தலைமை ஆசிரியர் அல் ஜாமிஅத்துல் அஷ்ரபிய்யா, முபாரக் பூர்) அவர்கள் தலைவராகவும், மௌலானா யாஸீன் அக்தர் மிஸ்பாஹி (நிறுவனர் : தாருல் கலம், தில்லி), மௌலானா சையத் முஹம்மத் அஷ்ரப் கசோச்சவி ( உலமா மற்றும் மஷாயிகு போர்டின் தலைவர்), மௌலானா உசைதுல் ஹக் முஹம்மத் ஆஸிம் காதிரி (கான்காயே ஆலியா காதிரிய்யா பதாயூன்) ஆகியோர் துணைத் தலைவர்களாகவும், Dr.ஃபஹீம் உஸ்மான் சித்தீகி (கோஆர்டினர் : அல் பரகாத் எஜுகேஷனல் இன்ஸிடியூட், அலிகட்) அவர்கள் பொதுச் செயலாளராகவும், மௌலானா முபாரக் ஹுஸைன் மிஸ்பாஹி (ஆசிரியர் : அஷ்ரஃபிய்யா மாத இதழ்) அவர்கள் அமைப்பாளராகவும், மௌலானா குஷ்தர் நூரானி (ஆசிரியர் : ஜாமே நூர் மாத இதழ்) அவர்கள் செய்தித் தொடர்பாளராகவும்), Dr.காஜா அக்ரம் (Associate prof : ஜவஹர் லால் நேரு பல்கலைக் கழகம் , தில்லி), அல்ஹாஜ் முஹம்மத் சயீத் நூரி ( இயக்குனர் : ரிஜா அகாடமி, மும்பை) மௌலானா சையத் தன்வீர் ஹாஷிமி (தலைவர் : அல் ஹாஷிம் டிரஸ்ட், பீஜாபூர்- கர்நாடகா), Dr.குலாம் யஹ்யா அன்ஜும் (இஸ்லாமியா துறை தலைவர் : ஜாமிஆ ஹம்தர்த், தில்லி) ஆகியோர் உறுப்பினர்களாகவும் All India Madrasa coordination committeeக்காக தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

இந்த கமிட்டி 3.12.2009 அன்று மத்திய அரசின் மனிதவள மேம்பாட்டு அமைச்சரான மாண்புமிகு கபில் சிபல் அவர்களை சந்தித்து மசோதாவில் செய்ய வேண்டிய சில பரிவர்த்தனைகளையும், மாற்றங்களையும் அடங்கிய மனுவை சமர்பித்தது.

கமிட்டியை வரவேற்ற மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மனுவை பரிசீலனை செய்வதாகவும் அதன் மீது தக்க நடவடிக்கை எடுப்பதாகவும் உறுதியளித்தார். மேலும் மதரஸா நலவாரியம் சம்பந்தமாக முஸ்லிம்கள் சார்பாக தம்மை வந்து சந்தித்ததைப் பற்றி சிலாகித்துப் பேசினார்.

மதரஸா நலவாரியத்தைப் பற்றி மற்ற அனைத்து மாநிலங்களிலும் கூட்டங்கள் நடத்தி விழிப்புணர்வு ஏற்படுத்த இருப்பதாக All India Madrasa coordination committeeயின் செய்தித் தொடர்பாளர் மௌலானா குஷ்தர் நூரானி அவர்கள் தெரிவித்தார்.

**நன்றி ஜாமே நூர் : ஜனவரி 2010**

ماہ نامہ ؛ جام نور ۔ جنوری ۲۰۱۰ء اداریہ مولانا خوشتر نورانی

## மணமக்கள் வாழியவே...!

### முத்துப்பேட்டை :

முத்துப் பேட்டை தர்கா ஷரீஃப் Y.P. பட்டத்து லெப்பை இல்ல நிக்கா மணமக்கள் **Y.P.L.S.அனீஸ் ஃபாத்திமா L.S.A. மீரான் ஹுஸைன் M.sc.(Software Engineer, Pune)** அவர்களின் நிக்காஹ் 14.12.2009 திங்கள் கிழமை இனிதாய் நிறைவேறியது. எல்லாம் வல்ல அல்லாஹ் மணமக்களுக்கு நீண்ட ஆயுளையும் நிறைந்த செல்வத்தையும், நிம்மதியான வாழ்வையும், நபிமார்கள் வாழ்ந்து காட்டிய வழியில் சிறப்புற்று வாழவும், நபிகள் நாயகம், எல்லா வலிமார்கள், குறிப்பாக முத்துப்பேட்டை ஷேக் தாவூத் நாயகம் ஆகியோரின் பொருட்டால் முபாரக்கான நல்வாழ்த்தோடு, தர்கா இதழ் பணிமனை குழுவினர் பணிந்து துஆ செய்கிறோம்.

தர்கா இதழுக்கு பத்திரிக்கை அழைப்பு நேரில் வழங்கிய ஆலி ஜனாப் Y.P.L.ஹைத்ரூஸ் சேட் லெப்பை ஜனாப் Y.P.L.சலீம் லெப்பை ஆகியோருக்கு நன்றிகள்...

### காயல்பட்டிணம் :

எல்லாம் வல்ல அல்லாஹ்வின் நல்லருளாலும், ஏந்தல் நபிகள் நாயகம் ஸல்லல் லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களின் கருணையாளும் இறை அருள் பெற்ற நபிமார்கள், குருநாதர் கௌதுல் அஃலம் முஹிய்யித்தீன் அப்துல் காதர் ஜீலானி ரலியல்லாஹு தஆலா அன்ஹு அவர்கள். எங்கள் ஷெய்கு நாயகம் சேகு அப்துல் காதர் ஸூபி ஹஜ்ரத் ரலியல்லாஹு தஆலா அன்ஹு மற்றும் ஏனைய அவ்லியாக்கள், காதிரிய்யா, நக்ஷபந்தியா தரீக்காக்களின் காமிலான ஷெய்குமார்களின் துஆ பரக்கத்தாலும் நிகழும் சங்கையான ஹிஜ்ரி 1431ம் ஆண்டு முஹர்ரம் பிறை 13, 31/12/2009 வியாழக்கிழமை காலை 9 மணியளவில் காயல்பட்டிணத்தில் நடைபெற்ற நிக்காஹ்வில் மணமக்களான **W.S.S.முஹம்மது முஹிய்யித்தீன் B.Sc. c.s.,** (S/o மர்ஹூம் W.M.A.சேகு சுலைமான்) **S.M.S.முஹம்மது சேகு பாத்திமா B.Sc.**(D/o மர்ஹூம் M.O.செய்யிது முஹம்மது சாலிஹ்) ஆகியோரின் வாழ்வு சிறக்க முபாரக்கான நல்வாழ்த்துக்களை கூறிக்கொள்வதுடன் தர்கா இதழ் பணிமனை குழுவினர் வலிமார்களின் சன்னிதியில் பணிந்து துஆ செய்கிறோம்.

நேரில் வந்து அழைப்பு விடுத்த V.S.L.சேகு அப்துல் காதிர் அவர்களுக்கு நன்றிகள்.

## புதையல்...5 தப்லீக் வஹ்ஹாபிகள் தமிழகத்தில் நுழைந்த கதை...

இன்று தவ்ஹீது வாதிகள் என்று சொல்லிக் கொள்ளும் வஹ்ஹாபிகள் பகிரங்கமாக அல்லாஹ்வின் மீதும் அவன் ரஸூலின் மீதும் அவுலியாக்களின் மீதும் வைக்கும் தரக்குறைவான விமர்சனங்களையும், தப்புத் தப்பான மார்க்க சட்டங்களையும் உள்ளே மறைத்துக் கொண்டு மெல்ல மெல்ல வஹ்ஹாபிய கொள்கைகளுடன் தேவ்பந்து மதரஸாவின் ஆதரவோடு அதே வஹ்ஹாபிய நச்சுக் கருத்துக்களை தமிழகத்தின் உள்ளே நுழைக்க நெற்றியில் கருப்பும், கையில் தஸ்பியும், மழித்த மீசையும், நீண்ட தாடியும், அதைவிட நீண்ட ஜிப்பாவும் போட்ட தப்லீகர்கள் முயன்ற போது அவர்களை நம் தமிழகத்து சுன்னத் ஜமா அத்தின் அன்றைய சங்கை மிகு உலமாக்கள் எப்படி தடுத்தனர் என்பதை அறிந்து கொள்ளும் நோக்கத்தோடு துவக்கப்பட்டதுதான் இந்த புதையல் பகுதி .

## வேலூர் பாக்கியாதுஸ் ஸாலிஹாத் மதர்ஸா மஹல்லா பள்ளிவாசலில் தப்லீக்வாலாக்களின் தொல்லை தாங்கமுடியாமல் 1957ல் வெளியிடப்பட்ட நோட்டீஸ்

## போலித் தப்லீக்

### பொது மக்களுக்கு இதனால் தெரிவிப்பது யாதெனில்...!

அநேக நாட்களாய் மஸ்ஜிதுகளில் முத்தவல்லிகளின் அனுமதியைப் பெற்றே பிரசங்கிகள் பிரசங்கம் புரிவது வழமையிலிருந்து வருகிறது. இதே பிரகாரம் பாக்கியாத் முஹல்லாவிற்கு சம்பந்தப்பட்ட இரண்டு மஸ்ஜிதுகளிலும் நடந்து கொண்டிருந்தது. ஆனால் சில தினங்களாக தப்லீக்காரர்களில் ஒருவரும் விருஞ்சிபுரவாசியுமான மௌலவி ஹாஜி ஹாபிஸ் அபூ சவூத் சாஹிப் பெயிட் செகரடாரி மதரஸா பாகியாத்துஸ் ஸாலிஹாத் வேலூர் இவர்களின் சகோதரியை தப்லீகில் மும்முரமாக ஈடுபட்டு வேலை செய்யும் வட இந்தியவாசியான மியான்ஜி ஈஸா சாஹிப் தப்லீகிக்கு விவாகம் செய்து கொடுக்கப்பட்டது. மௌலவி சாஹிபின் சகோதரர் மௌலவி ஹாஜி முஹம்மத் இப்ராஹிம் சாஹிப் மேல் விஷாரத்திலுள்ள தப்லீக் மதரஸாவில் வேலை பார்த்து வருகிறார். இன்னவரின் சகலை மௌலவி பட்டேல் அப்துல் வஹ்ஹாப் சாஹிபும் (ஆசிரியர் பாகியாத்துஸ் ஸாலிஹாத் வேலூர்) சேர்ந்து முத்தவல்லி சாஹிபின் அனுமதியைப் பெற்று பாகியாத் மஹல்லாவிற்கு சம்பந்தப்பட்ட இரண்டு மஸ்ஜிதுகளிலும் தன் மச்சானை சந்தோஷப்படுத்துவதற்கும் கண்ணியப் படுத்துவதற்குமாக பிரசங்கம் செய்ய ஆரம்பித்தார்கள். இதை நலமான காரியமென உத்தேசித்து மஸ்ஜிதின் பொறுப்புடையவர்கள் பொருட்படுத்தாமல் விட்டுக் கொடுத்து வந்தார்கள் நாளடைவில் கணக்கற்ற தப்லீக்காரர்கள் தப்லீகின் பெயரால் தங்களின் மூட்டை முடிச்சு விரிப்புகளையும் முஸாஃபர் பங்களாவைப் போல் மஸ்ஜிதின் மேற்குப் புறமுள்ள மிம்பரைச் சேர்ந்த சுவற்றில் சாய்த்து வைக்க ஆரம்பித்தார்கள். மஸ்ஜிதின் நடு மத்தியில் உணவும் உண்ணத் தொடங்கினார்கள். மஸ்ஜிதுகளில் வைக்கப்படும் விரிப்புகள் அநேகமாக சிறுநீர் போன்ற அசூதிகள் நிரம்பிய இடங்களான பஸ்நிலையங்களிலும் இரயில் நிலையங்களிலும் மேற்படி விரிப்புகளை விரித்தோ அல்லது விரிக்காமல் சுருட்டியபடியே வைத்தோ அவர்கள் உட்கார்ந்திருக்கவும் அவைகளில் மேற்படி அசூதிகள் பட்டிருக்கவும் கூடும் என்ற எண்ணத்தினால் சில தொழுகையாளிகள் மனநிம்மதியற்று இருந்தார்கள். ஆதலால் மேற்படி விரிப்புகளை மஸ்ஜிகளில் வைப்பதை விட்டும் தடை செய்யப்பட்டது. இதற்குப்பின் ஆலிம்களும் ஆலிம் அல்லாதவர்களும் உபந்நியாசம் புரிய ஆரம்பித்து விட்டார்கள். ஆலிம் அல்லாதவர்கள் உபதேசம் புரிவது அல்லாஹ்வின் பால் நளினமாகவும் அழகான உபந்நியாசத்தைக் கொண்டும் அழைப்பீராக! என்ற அருளுக்கு முற்றிலும் முரணாக இருப்பதுடன் தப்பும் தவறுமான மஸ்அலாக்களைக் கூறவும் துணிந்து விட்டார்கள். பலவித நிர்பந்தங்கள் செய்வதிலும் பின்வாங்கவில்லை. அதாவது டெல்ஹிக்கு வாருங்கள், மேவாத்துக்கு வாருங்கள், எங்களுடன் ஒரு சில்லா (40 நாட்கள்) வாருங்கள், உங்களுடைய பொருட்களினால் பிற ஜனங்களை அனுப்பி வையுங்கள் என்பன போன்ற பல பாடங்களை போதிக்க ஆரம்பித்தனர். இந்த நிபந்தனைகளின் காரணமாக தொழுகையாளிகளும் மஸ்ஜித் பொறுப்புடையவர்களும் தனவந்தர்களும் இவர் (தப்லீக்காரர்) களின் வருகையைப் பார்த்ததும் மஸ்ஜிதை விட்டு விரண்டோடவும் அவர்கள் தங்கியிருக்கும் வரை மஸ்ஜிதிற்கு வராமலிருந்தும் மஸ்ஜிதுகள் காலியாக இருந்து கொண்டிருந்தன.

**<u>தப்லீகர்களின் தவறான மஸ்அலாக்கள்</u> :-**

தப்லீக் ஜமாஅத் (ஆண்கள் பெண்கள் உட்பட) இவ்வித தன்னுடைய தவறான நடவடிக்கைகளாலும் பல இடங்களில் பொது மக்கள் மத்தியில் தவறான மஸ்அலாக்களைக் கூறி மக்களைப் பீதியடையச் செய்து தன் செல்வாக்கை இழந்து வருவதுடன் கேவலமும் அடைந்து வருகிறதை கண்கூடாகப் பார்த்தும் கேட்டும் வருகிறோம் பல இடங்களில் முஸ்லிம்களுக்கு கலிமாக் கூட ஞாபகமில்லை என்று கெட்ட எண்ணம் கொண்டு பகிங்கரமாக அவர்களை கலிமா ஓதச் சொல்லி கேவலப்படுத்துவதின் காரணமாக குழப்பத்தை உண்டு பண்ணிக் கொண்டிருக்கின்றனர். பொதுவாக பின் வரக் கூடியவைகளை யோசிக்காமல் செய்யும் வேலைகளாலும் மௌலவி ஆஷிகே இலாஹியின் பகிரங்க அறிக்கையாலும் விளைந்த பலன் என்னவெனில் பாகியாத் மஹல்லாவிற்கு சம்பந்தப்பட்ட இரண்டு மஸ்ஜிதுகளின் மிம்பர்கள் பொதுமக்களின் வேண்டுகோளுக்கு இணங்க பொதுவாக தப்லீகில் சேராதவர்களும் குறிப்பாக தப்லீக் காரர்களும் மேல்படி இரண்டு மஸ்ஜிதுகளிலும் முத்தவல்லி சாஹிபின் அனுமதியின்றி பிரசங்கங்கள் செய்வதைக் கடுமையாக தடை செய்யப் பட்டுள்ளது என்ற சட்டத்தை தீர்மானித்துள்ளார்கள். எல்லா முஸ்லிம் சகோதர்களிடத்திலும் இவ்வித குழப்பத்தை உண்டு பண்ணும் தப்லீக் ஜமாஅத்தை விட்டும் தவிர்த்து கொள்ளுமாறு நாங்கள் வேண்டிக் கொள்கிறோம். ஏனெனில் அல்லாஹு தஆலா தன் திருமறையில் குழப்பத்தை உண்டு பண்ணுவது கொலை புரிவதைவிட (பாவத்தில்) கடினமானது எனக் கூறியுள்ளான். இவ்விதக் குழப்பம் இஸ்லாமியர்களின் ஒற்றுமைக்கு ஊறு விளைவிப்பதால் அதைத் தடுக்க இந்த விளம்பரத்தை படிப்பவர்கள் படிப்பதுடன் பிறருக்கும் படிக்கக் கொடுங்கள்.

நம் முஸ்லிம் சகோதரர்கள் இதனைப் படித்து உண்மையை நன்கு உணர்ந்து தீயவைகளின் பக்கம் செல்லாமல் இருக்கவே இப்பிரசுரம் மீண்டும் அச்சிடப்பட்டுள்ளது.

இது உருதுவின் மொழிப் பெயர்ப்பாகும். உருதுவில் பிரசுரித்தவர் ஜாக்கிர் பஷீருல்லாஹ் சாயபு, ஜாயின் செகரடெரியே , பாக்கியாத் மஹல்லா, வேலூர், (N.A.) *1957*

***<u>மீண்டும் அச்சிட்டது : 1983</u>***

**ஆசாரே ஷரீப் தைக்கால், கொண்டிராஜ பாளையம் தெரு, தஞ்சாவூர் - *613001***

## எடக்கு! மடக்கு!

### சந்தேக ஷம்ஷு பாய்.

சட்டமாமேதைகளான நான்கு இமாம்களும் கூறிய சுன்னத் வல் ஜமாஅத் ஷரீஅத்சட்ட ஆகுமான முறைப்படி தர்காக்களுக்கு சென்று, அல்ஹம்து, குல்ஹுவல்லாஹு அஹ்த், குல் அவூஜு பிரப்பில் ஃபலக், குல் அவூஜு பிரப்பின்னாஸ், யாஸீன், தபாரக், குர்ஆன், சலவாத், சலாம் பைத்து, படித்து பாத்திஹா ஓதி ஜியாரத்து செய்வது தேவ்பந்தி, தப்லீகி, தவ்ஹீதி மற்றும் அனைத்து வஹ்ஹாபிய ஜமாஅத்துக்களிடம் ஷிர்க்கு, பித்தத்து, ஹராம்......... அப்படியானால்...

பட்டப் பகலில் நட்ட நடு ரோட்டில், இளம் குமரிப் பெண்கள் முதல் கைக் குழந்தைகள் வரை, கொடிகள் பிடித்து, கைகளை உயர்த்தி ஆட்டி ஆட்டி, போராடுவோம்! போராடுவோம்!! என கோஷங்களை முழக்கி உலக மீடியாக்களிடம் போட்டுக் காட்டுவது...

ஏ ! கத்துவோமா...? பக்கா தவ்ஹீதா...? முக்கா தவ்ஹீதா...? சிந்தியுங்கள்... சகோதர சகோதரிகளே!!

**இப்படிக்கு சந்தேக ஷம்ஷு பாய்.**

# ஒலிமார்கள் உயிருடன் உள்ளார்களா?

**விலாயத்தின் ரகசியம் :-**

ஆதி பிதா நபி ஆதம் அலைஹிஸ் ஸலாம் அவர்கள் இவ்வுலகிற்கு வந்த போது வெளிரங்கத்தில் நுபுவத்தும், உள் ரங்கத்தில் விலாயத்தும் உடையவர்களாக இருந்தார்கள். அவர்களுக்குப் பிறகு பல்லாயிரக்கணக்கான நபிமார்கள் வெளியாகி, இறுதியாக கண்மணி நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்கள் தோன்றினார்கள். அவர்களோடு நபித்துவம் நிறைவுப் பெற்றுவிட்டதால், அவர்கள் பால் பகிரங்கமாக இருந்த நுபுவத்தும் அந்தரங்கமாகி, அந்தரங்கமாயிருந்த விலாயத் (கராமத்) பகிரங்கமாகிவிட்டது. ஆகவே நபித்துவத்தின் இறுதி ஒலிமார்களின் ஆரம்பமாகும். ஆரம்பத்தில் விலாயத்தைச் சுமந்தவர்கள் ஹஜ்ரத் அலி கர்ரமல்லாஹு வஜ்ஹஹு ஆவார்கள். அவர்களின் வழி வந்த கௌதுல் அஃலம் அவர்களே விலாயத்திற்கு அதிபதியாக இருக்கிறார்கள்.

இறைவன் நபிமார்கட்கு தனது வஹீஹைக் கொண்டு பயிற்சியளித்தான். ஒலிமார்களுக்கு தெய்வீக உதிப்பாகிய இல்ஹாமைக் கொண்டு பயிற்சியளிக்கிறான். அவ்லியாக்கள், நபியின் நிர்வாகப் பொறுப்பாளராகவும், பிரதிநிதியாகவும், வாரிசுகளாகவும் இருக்கிறார்கள்.

**மண்ணோடு மண்ணாகிப் போவதில்லை :-**

அவ்லியாக்கள் மரணமாகி மண்ணோடு மண்ணாகிப்போவதில்லை. உடல்களும் நசிப்பதில்லை. ஜீவியத்தில் இருந்தது போல் மரணத்திற்குப் பிறகும் கப்ரில் (பர்ஜகில்) அப்படியே உடல் கோர்வைக் குலையாதிருப்பார்கள். அவர்களுடைய உடலை மண் தின்னாது. இறைவன் ஹராமாக்கிவிட்டான். மரணம் முஃமினுக்கு காணிக்கையாகும். நபிகள் நாயகம் அவர்கள் உலக வாழ்வைத் துறந்த போது அவர்களே நேரில் தமது இல்லத்திற்கு வந்து பணிப்பெண்ணிடம் அவளின் சுக செய்தியையும், வீட்டின் விஷயங்களையும் விசாரித்துச் சென்றிருக்கிறார்கள்.

ஹஜ்ரத் இமாமுல் ஆஃலத் அபூ ஹனீஃபா ரஹ்மதுல்லாஹி அலைஹி அவர்கள் வஃபாத்தான பிறகு, அவரின் கப்ருக்கு ஒவ்வொரு சுப்ஹும் கிலுறு அலைஹிஸ் ஸலாம் அவர்கள் சென்று ஷரீஅத்தின் இல்மு கல்வியைப் படித்து வந்திருக்கின்றார்கள். மேலும் கௌதுல் அஃலம் அவர்கள், இமாம் அஹ்மத் இப்னு ஹம்பல் அவர்களின் கப்ருக்குச் சென்று ஜியாரத்துச் செய்கையில் இமாம் அவர்கள் கப்ரிலிருந்து வெளியாகி கட்டித்தழுவி விடைபெற்று மறைந்தார்கள்.

*1972*-ஆம் ஆண்டு சென்னையில் உலகப் பிரசித்துப் பெற்ற மௌலானா மௌலவி அல்ஹாஜ், அல்லாமா முப்தி முஹம்மது ஹபீபுல்லாஹ் சாஹிப் காதிரி அவர்கள் வெளியிட்ட பிரபல அரபுத் தமிழ் ஃபத்வாவை தங்கள் முன் வைக்கிறேன்.

இமாம் முஹம்மது கஸ்ஸாலி அவர்கள் தனது இஹ்யாவுலுமித்தீன் என்ற நூலில் மனிதர்களின் மரணத்திற்கு பிறகும் அவர்களுடைய கப்ரை பரக்கத்துக்காக ஜியாரத்து செய்வது ஆகும். அதாவது சாதாரண மனிதர்களுக்கு இவ்வளவு மகிமை இருக்கும் பொழுது அவ்லியாக்களுக்கு எவ்வளவு மகிமை இருக்கும் என்பதை தெரிந்துக்கொள்வீர்களாக.

**யூசுப் தாதாவிற்கு நாகூர் நாயகத்தின் பதில் :-**

நானிலம் கண்ட மகான் நாகூர் நாதர் அவர்கள் மரணமாகி அடக்கப்பட்ட மூன்றாம் நாள் காலையில் அவர்கள் (வஸீயத்) உபதேசப்படி தங்களுடைய குமாரர் மகான் சையிது முஹம்மது யூசுப் நாயகம் அவர்கள் கப்ரு ஷரீஃப் அருகாமையில் இருந்து தமது தகப்பனாருக்கு சலாம் கூறுகையில், கப்ரிலிருந்து சலாத்திற்கு பதிலும், மேலும் நீர் பயப்பட வேண்டாம், நீரும் உமது சந்ததிகளும் என் வாசலை விட்டும் போக வேண்டாம் என்றும் கூறியுள்ளார்கள். எனவே இவ்வரலாற்றுச் சான்றுகளை நம் சிந்தையில் செலுத்தி அவர்களை நேரில் சென்று ஜியாரத்து செய்து பயன் பெறுவோமாக.

உலகப்பிரசித்திப் பெற்ற கர்பலா அருகில் ஹஜ்ரத் பெரு மகான் முஹம்மது அப்துல்லாஹ் ஒளியுல்லாஹ் அடங்கியுள்ளார்கள். அவர்கள் அடங்கியுள்ள கப்ரு அவர்களின் திருபாதம் வெளியே தெரியும் வண்ணமாக காட்சியளித்துக் கொண்டிருக்கின்றது. மக்கள் ஒவ்வொரு தினமும் வந்து ஜியாரத் செய்து கொண்டிருக்கிறார்கள். இந்த அற்புதக் காட்சியை இன்றும் காணலாம். நேரில் கண்டவர் மௌலானா, மௌலவி அல்ஹாஜ் அல்லாமா முப்தி V.சலாஹுத்தீன் (பாரி- J.P) இலங்கை.

**அவுலியாக்கள் ஜீவனுள்ளவர்களே :-**

நிஜாமுத்தீன் ஒலியுல்லாஹ் அவர்கள் டில்லியில் அடங்கியிருக்கும் காஜா குத்புத்தீன் பக்தியார் காக்கீ அவர்களின் தர்காவுக்கு ஜியாரத்தை நாடிச் சென்றார்கள். அவர்களின் கப்ரு ஷரீஃபைச் சுற்றி நடந்து கொண்டே... டில்லியிலுள்ள கப்ருகள் எல்லா காரியங்களையும் நிறைவேற்றி அருளக்கூடியதாகவே இருக்கின்றது. நான் என் சொல்வேன்! நான் இங்கு வந்திருப்பதை அவர்கள் அறிந்து இருக்கிறார்களோ என்னவோ? என்ற சந்தேகம் அவருள் உண்டாகிவிட்டது. அந்த சந்தேக உதிப்பு அடங்குவதற்குள்...

உம்மைப்போல எம்மையும் ஜீவனுள்ளவரென அறிந்து கொள்வீராக! என் கப்ருக்கு நீர் உடலோடு வந்திருக்கின்றீர். நானோ ரூஹுடன் வந்திருக்கின்றேன். என்னுடைய ஞாபகத்தை விட்டும் நீர் நீங்கியிருப்பதாய் என்னவேண்டாம். நீர் என்னை பார்க்கா விட்டாலும் உம்மை நான் பார்க்கிறேன்! என்று கப்ரு ஷரீஃபிலிருந்து பதில் வந்தது. ஆதாரம் கியாஹத் உருது நூல் - ஆகவே ஔலியாக்கள் உயிருடன் உள்ளார்களா என்ற வினாவிற்கு ஆம்! சந்தேகமின்றி உயிருடன் உள்ளார்கள்! என்று ஆணித்தரமாக பதில் அளித்திடுங்கள்.

***ஆக்கம் : பன்னூலாசிரியர் - E.K.S. சுல்தான் சாஹிபு காதிரி - நாகூர் ஷரீ:ப்***

# தொழக்கூடாத நேரங்கள் ஏன்...?

தொழக்கூடாத நேரங்கள் என எல்லாப் பள்ளி வாசல்களின் அறிவிப்புப் பலகைகளிலும் எழுதி வைத்திருப்பதை நாம் பார்த்திருக்கிறோம்.

பொதுவாக இவற்றில் பஜ்ர் நேரத்திற்கு சற்று பின்பும், லுஹர் தொழுகைக்கு சற்று முன் சுமார் பத்து பனிரெண்டு நிமிடங்களும், மஃக்ரிப் நேரத்திற்கு சற்று முன் சுமார் நான்கு நிமிடங்களும் தொழக்கூடாது என்று குறிக்கப்பட்டிருக்கும்.

ஏன் இவ்வாறு குறிக்கப்பட்டுள்ளது? இதற்கு காரணம் என்ன? என்று யாரும் அதை ஒரு பெரிய விஷயமாக பொருட் படுத்துவதில்லை. மேலும் அந்த நேரத்தில் தொழுது கொண்டிருப்பவர்களும் உண்டு.

சூரியனும், சந்திரனும் பூமியை மையமாகக் கொண்டு ஒரே நேர்கோட்டில் சந்திப்பதால் சூரியனிடமிருந்து மின் சக்தியும், சந்திரனிலிருந்து காந்தசக்தியும், ஏற்பட்டுமற்ற கிரகங்களுக்கும் இந்த சக்தி பரவி ஒன்றோடு ஒன்று பரிமாறிக் கொள்வதால் பூமி தன் புவியீர்ப்பு சக்தியால் அந்த சக்தியை பூமிக்கு ஈர்க்கும் நேரமே அந்த தொழக்கூடாத நேரமாக அறிவிக்கப் பட்டுள்ளது. இந்த மின்காந்த சக்தி பூமியில் ஈர்க்கப்பட்டுக்கொண்டிருக்கும் நேரத்தில் தலை சஜ்தாவில் இருந்தால் மூளையில் உள்ள நரம்புகள் பாதிக்கப்படலாம். அதிகமாக ஞாபக மறதி ஏற்படலாம். இதனால் கண்பார்வை பாதிக்கப்படலாம். இன்னும் எத்தனையோ நமக்கு அறியாத பாதிப்புகளை ஏற்படுத்தும் வாய்ப்பு உண்டு. இதை விஞ்ஞான பூர்வமாக அறிந்து விஞ்ஞானிகளே வியந்துள்ளனர்.

***தகவல் : மஹ்பூப் ஜான் முபாரக்***

# தர்கா நிர்வாகிகளுக்குஅறிவிப்பு

தர்கா, தைக்கால் நிர்வாகிகள், ஹஜ்ரத் மார்கள், முதவல்லிகள், பெரியோர்கள், தொடர்புடையோர் தத்தமது பொறுப்பில் உள்ள தர்காக்களைப் பற்றிய விவரங்களை உலகளாவிய தர்கா வெப்சைட்டான **www.aulia-e-hind.com** என்ற வெப்சைட்டில் பதிவு செய்யுங்கள்.

தர்காக்களைப் பற்றி தெரிந்து கொள்ள விரும்புவோர் மேற்கண்ட வெப்சைட்டின் மூலம் உலகளாவிய தர்காக்களைப் பற்றி தகவல்களைப் பெறலாம். **நன்றி தகவல் :**

***Ali Janab Shabbir Ahmed Bijli - Dubai***



# احاديث النبي صلى الله عليه وآله وسلم

## மாநபியின் மணிமொழிகள்

சிஹாசித்தா



இது வரை நாம் பரகத்திற்காக வேண்டி இப் பகுதியில் அஹ்லெ பைத் சையத்மார்களின் மகத்துவம், பாவா ஆதம் அலா நபியினா அவர்கள் பிறப்பதற்கு முன்பிருந்து தீர்ப்பு நாளாகிய கியாமத் நாள் வரை சையத் சாதாத்மார்களின் மேன்மை எப்படிப்பட்டது என்பதை குறிப்பிட்டோம். இனியும் அதை விரிவாக அந்தந்த ஹதீஸ்களின் போது எழுதுவோம்.

அதற்கு முன்னால் மாநபியின் மணிமொழிகளை எவ்வாறெல்லாம் கஷ்டப்பட்டு தொகுத்து பதம் பிரித்து கோர்வை செய்து, எவற்றையெல்லாம் ஷரீஅத்துக்கு மூல ஆதாரமாக கொள்ள வேண்டும் எவற்றையெல்லாம் படிப்பினையாக கொள்ள வேண்டும் என்று ஹதீஸ் கலை வல்லுனர்களான இமாம்கள் ஒவ்வொன்றையும் தொகுத்துத்தந்தவைகளை நேற்று பெய்த மழையில் இன்று முளைத்த காளான்களான தவ்ஹீதிய வஹ்ஹாபிய பேர்வழிகள் ளயீப்பு-பலகீனமான ஹதீஸ் என்ற ஒரே வார்த்தையில் கேவலப் படுத்துகிறார்கள்.

ضعيف ளயீப்பு என்பதை ض என்ற எழுத்தால் எழுதுவதா, ذ என்ற எழுத்தால் எழுதுவதா, ز என்ற எழுத்தால் எழுதுவதா, ظ என்ற எழுத்தால் எழுதுவதா என்பது கூட தெரியாத வஹ்ஹாபிய சவூதிய யஹூதிகள் ...! என்னே ஆச்சரியம்!

வாசகப்பெரு மக்களே! அதுகள் எப்படியாவது எக்கேடு கெட்டாவது போகட்டும். மாட்சிமைப் பொருந்திய ஹதீஸ் கலை வல்லுனர்களான முஹத்திஸீன்கள் மாநபியின் மணிமொழிகளான ஹதீஸ்களை கண்ணியத்துடன் சங்கை செய்து எத்தனை வகைகளாகப் பிரிக்கிறார்கள் என்பதையும் அதன் விளக்கங்களையும் சுருக்கமாகப் பார்ப்போம்.

எடுத்தேன் கவிழ்த்தேன் என்பது அல்ல. ஹதீஸ்கலையின் மேன்மை கடலைப்போன்ற ஆழமும். அகலமும் கொண்டது. ஹதீஸ்கலை விற்பன்னர்கள் ஹதீஸ்களை எத்தனைவகைகளாகப் பிரிக்கிறார்கள் என்று பார்ப்போம்.

*1. ஹதீஸே குத்ஸி 2.ஹதீஸே சஹீ 3. ஹதீஸே மர்ஃபூஉ 4. ஹதீஸே மவ்கூஃப் 5. ஹதீஸே மஃக்தூஉ 6. ஹதீஸே முதவாதிர் 7. ஹதீஸே மஷ்ஹூர் 8. ஹதீஸே அஜீஸ் 9. ஹதீஸே கரீப் 10. ஹதீஸே மவ்ஜூஉ 11.வஜ்ஜாவுல் ஹதீஸ் 12. ஹதீஸே ளயீஃப்.*

மேற் கூறப்பட்ட வகைகளான ஹதீஸ்களின் விளக்கங்களை சுருக்கமாகப் பார்ப்போம்.

**ஹதீஸ் :-**

நபிகள் கோமான் கண்மணி நாயகம் அவர்களைத் தொட்டு சஹாபாப் பெருமக்கள் வாயிலாக தாபயீன்கள், தபவுத்தாபயீன்கள் என நம் வரை கிடைத்த ரஸூலுல்லாஹ் ஸல்லல் லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களின் சொல், செயல், ஏவல், தடுத்தல், அங்கீகாரம், மவுனம் ஆகிய அத்தனை பதிவுகளும் ஹதீஸ்களே.

**ராவி :-**

எம்பெருமான் நபிகள் நாயகத்தின் சொல், செயல் உத்திரவு, தடுத்தல், அங்கீகாரம், மவுனம் போன்றவற்றை எடுத்துரைப்பவர்.

**ரிவாயத்:-**

ஹதீஸ்களை பதிவு செய்வது, ஹதீஸ்களை கூறுவது.

**ஸனதே ஹதீஸ் :-**

ஹதீஸ்களை பதிவு செய்பவர்களின் - கூறுபவர்களின் சங்கிலித் தொடர் பெயர் பட்டியல்.

**மதனே ஹதீஸ் :-**

ஹதீஸ் கூறுபவர்களின் பெயர் பட்டியல் முடிந்த பின் வரும் வாக்கியம்.

**முஹத்திஸ் :-**

ஹதீஸ்கலையில் பாண்டித்தியம் பெற்ற நிபுணர்.

**சஹாபி :-**

நாயகத்தோழர். நபிகள் நாயகத்தை நேரடியாக கண்டு இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டவர்.

**தாபயி :-**

நாயத்தோழரைக் கண்டு இறைத் தூதர் நபிகள் நாயகத்தையும், அல்லாஹ்வையும் ஏற்றுக்கொண்டு இஸ்லாமானவர்.

**ஹதீஸே குத்ஸி :-**

அல்லாஹ்விற்கும், கண்மணி நாயகம் அவர்களுக்கும் இடையில் ஜிப்ரயீல் இன்றி நடைபெற்ற சம்பாஷனைகள்.

**ஹதீஸே சஹீஹ் :-**

ஹதீஸில் கூறப்படும் வாசகத்திலும், சொல்பவர்களின் பட்டியலில் உள்ளவர்கள் மீதும் எவ்வித சந்தேகமும் இல்லை என்று ஏற்றுக்கொள்ளப்பட்ட ஹதீஸ்.

**ஹதீஸே மர்ஃபூஉ :-**

அறிவிக்கப்படும் ஹதீஸ் நபிகள் நாயகத்தோடு நேரடியாக தொடர்பு கொண்டிருப்பது. அதாவது ஹதீஸை கூறும் சஹாபி - நாயகத்தோழர், நபிகள் நாயகம் அவர்கள் இப்படி சொல்வதை நான் கேட்டேன் - இப்படி செய்வதை பார்த்தேன் என்று கூறும் ஹதீஸ், ஹதீஸே மர்ஃபூஉ ஆகும்.

**ஹதீஸே மவ்கூஃப் : -**

அறிவிக்கப்படும் ஹதீஸின் பெயர் பட்டியல் நாயகத்தோழர் வரை சென்றடைவது. உதாரணமாக நாயகத் தோழர் இப்னு அப்பாஸ் அவர்கள் கூறினார்கள் என்று தொடங்கும் ஹதீஸ்கள்.

**ஹதீஸே மஃக்தூஉ :-**

அறிவிக்கப்படும் ஹதீஸின் பெயர் பட்டியல் தாபயி வரை சென்றடைவது. அதாவது தாபயி - சயீத் இப்னு ஜுபைர் அவர்கள் இப்படி கூறினார்கள் என்று ரிவாயத்து செய்யப்பட்ட ஹதீஸ்கள்.

**ஹதீஸே முதவாதிர் :-**

எல்லா காலத்திலும் அந்த ஹதீஸை கூறுபவர்கள் எண்ணிக்கையில் மிக அதிகமாகவும், அவர்களில் எவரின் மீதும் எவ்வித சந்தேகத்திற்கு இடமின்றி இருப்பதும் ஆகும். இவ்வித ஹதீஸ் ஹதீஸே முதவாதிர் ஆகும்.

**ஹதீஸே மஷ்ஹூர் :-**

எல்லா காலங்களிலும் அந்த ஹதீஸை கூறுபவர்கள் இரு நபருக்கு மேற்பட்டவராக இருக்கும் ஹதீஸ்கள். இவற்றை ஹதீஸே முஸ்தஃபீஸ் என்றும் கூறுவர்.

**ஹதீஸே அஜீஸ் :-**

எல்லா காலங்களிலும் அந்த ஹதீஸை கூறுபவர்கள் இரு நபராக இருப்பதும், முழு பெயர் பட்டியலிலும் ரிவாயத்து செய்பவர்கள் இரு நபருக்கு குறையாமல் இருக்கும் ஹதீஸ்கள் ஹதீஸே அஜீஸ் என்றழைக்கப்படுகிறது.

**ஹதீஸே கரீப் :-**

இந்த ஹதீஸை அறிவிப்பு செய்பவர்களின் பெயர் பட்டியல் தொடர்ச்சியில் எங்காவது ஒரு நபர் மட்டுமே அறிவிக்கும் ஹதீஸ்கள் ஹதீஸே கரீப் ஆகும்.

**ளயீஃப் :-**

நபிகள் நாயகம் கூறிய வாக்காக இருப்பினும் ரிவாயத்து செய்யும் நபரின் குறைபாடு காணப்பட்ட ஹதீஸை ளயீஃப் பலகீனமான ஹதீஸ் என்கிறோம்.

**ஹதீஸே மவ்ஜூஉ :-**

நபிகள் நாயகம் அவர்கள் கூறியதாக இட்டுக் கட்டப்பட்ட ஹதீஸ்.

**வஜ்ஜாவுல் ஹதீஸ் :-**

நபிகள் நாயகம் அவர்கள் கூறியதாக பொய் கூறுபவன். இட்டுக் கட்டுபவன்.

**மேலும் மொழிவோம்.....**

## ஈராக் போரின் உண்மைக் காரணம்... The Three Trillion War : The True Lost of The Iraq Conflict

**இந்தியா வாங்கலையோ... இந்தியா...?**
**சர்வதேசங்களும் காாா...ரித்துப்பும் வஹ்ஹாபிசம்...**
**அப்துல் வஹ்ஹாப் நஜ்திக்கு வக்காலத்து வாங்கும் சவூதி...**
**ஒட்டகனாரின் செய்திக் கோர்வை...**

பொருளாதாரத்தில் நேபல் பரிசு பெற்ற **ஜோசப் E ஸிடிகிலிஸ்ட்** மற்றும் ஹார்வர்டு பல்கலைக் கழகத்தின் பொருளாதார பேராசிரியரான **லிண்டா J பில்மெஸ்** இணைந்து அளித்த ஆய்வறிக்கை... **தி திரீ டிரில்லியன் வார்;The Three Trillion War**

பலவாறகத் தேடி அலைந்தோம் ஒட்டகனாரை கண்டுபிடிக்க முடியவில்லை நமது நண்பர் காயல்பட்டிணம் சென்ற போது ஒட்டகனாரை மிகவும் கேட்டு விசாரித்து இருக்கிறார்கள். “அப்போது என்ன குர்பானி மாசத்தில் ஒட்டகனாரை குர்பான் செய்ய தேடுகிறீர்களா?” என்று “அவரை குர்பானி குடுத்துவிடுவார்கள் என்று பயந்து பதுக்கிவிட்டாரோ” என்று நண்பர்கள் கூறி சிரித்துள்ளார்கள்.

வாழ்க ஒட்டகனார் என்று முழக்கம் வந்த திசையில் திரும்பிப் பார்த்ததில் அய்யா ஜனாப் ஒட்டகனார். ஏகசந்தோஷம்.

“நான் குர்பான் ஆவதற்காகப் பிறந்தவன். நபி சாலிஹ் அலைஹிஸ் ஸலாமின் முஃஜிசா அற்புதத்தில் வந்தவன். பத்ரு யுத்தத்தில் நாங்கள் ஏழு பேர், எதிரிகளின் வாள் வீச்சை துச்சமாகக் கருதி துவசம் செய்தவர்கள். ஹிஜ்ரத்தின் போது பூமான் நபி கோமானை மதீனத்து வீதியில் ஸஹாபித் தோழர் அபூ அய்யூப் அன்சாரி வீட்டில் மிகச் சரியாக இறக்கியவன், கர்பலா போன்ற களம் பல கண்டவன். என்னைப் பார்த்து குர்பானிக்கு பயந்து ஒதுங்குபவன் என்றா சொன்னீர்”? என்று தன் வீரதீர பராக்கிரமங்களை அடுக்கியவரை பாலைவனச் சோலை கப்பலே! கார்மேகமே! என அடுக்கு மொழி வசனம்பேசி செய்திகளுக்காக மூடை மாற்றினோம்.

“பூனைக்குட்டி வெளியேவந்து விட்டது”! என்று சொல்லத் தொடங்கினார்... “பல இலட்சக்கணக்கானோர் அனாதையாகி, வீடு வாசல் இழந்து, விலைமதிப்பில்லா உயிர்களை இழந்து... ஈராக் போர் நடத்தப்பட்ட காரணத்தை ஒவ்வொரு முறையும் ஒவ்வொரு பொய்யைச் சொல்லும் அமெரிக்கா இப்போது ஒரு உண்மைக் காரணத்தைச் சொல்லியுள்ளது. The Three Trillion War : The True Lost of The Iraq Conflict என்ற நூலில் முன்னாள் மூதேவி புஷ், துணை ஷைத்தான் டிக் சென்னி மற்றும் ஆயுத வியாபாரிகளின் ஆயுதம் வாங்கத்தான் ஓர் போர். அதன் கருத்தை அப்படியே படித்துப் பாரும்!” என்றார்.

★ ஈராக் போரை தொடங்கியதன் முக்கியமான உள்ளார்ந்த காரணம் என்ன? யாருடைய நலனிற்காக இந்தப் போர் நடத்தப்பட்டது. 1961 ஆம் வருடம் தனது வழியனுப்பு விழாவில் பேசிய அன்றைய அமெரிக்க ஜனாதிபதி ஐசனோவர், ஆயுத தொழிற்சாலைகள் உடன் அமெரிக்க அரசியல்வாதிகள் தொடர்பு குறித்து அமெரிக்க நாட்டு மக்களுக்கு அன்றே எச்சரிக்கை செய்தார். இந்த ஆயுத தொழிற்சாலைகளின் அதிபர்கள் தான் அரசின் திட்டங்கள் மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளை வடிவமைத்திருக்கின்றனர். ஈராக் போர் மூலம் பெருமளவு பயனடைந்தவர்கள் இந்த ஆயுத வியாபாரிகள் தான். ஈராக் போர் தொடங்கியவுனேயே Hallibirton, General Dynamics, Lockheed, Martin போன்ற நிறுவனங்களின் பங்குகள் மார்க்கெட்டில் எகிறியது. Hallibirton என்ற ஆயுதத் தயாரிப்பு நிறுவனத்தின் முன்னாள் தலைவரும் அமெரிக்கத் துணை ஜனாதிபதியுமான டிக் சென்னி குடியரசுக் கட்சியின் தேர்தல் செலவுகளுக்கு அந்த நிறுவனத்திடமிருந்து 11,46,248 டாலர் பெற்றுள்ளார்கள்.

★ கடந்த 6 ஆண்டுக் காலமாக ஆயுத வியாபாரிகளிடமிருந்து புஷ் நிர்வாகத்தினருக்குக் கோடிக்கணக்கான டாலர் லஞ்சமாக கொடுக்கப்பட்டுள்ளது. புஷ் நிர்வாகத்திலும், பெண்டகனிலும் குறிப்பிட்ட ஒரு சில ராணுவ அதிகாரிகளும் இதனால் கொள்ளை லாபம் அடைந்துள்ளனர். இதற்கு எவ்வித கணக்கும் கிடையாது. அமெரிக்கப் பாதுகாப்பு துறையில் 1,96,000 ஆயுத தளவாடம் மற்றும் பல்வேறு பணிகளுக்கான ஒப்பந்ததாரர்கள் இருக்கின்றனர். இந்த எண்ணிக்கை 1998 முதல் 2004- வரை 105 மடங்கு உயர்ந்துள்ளது. ஆனால் இவர்களை மேற்பார்வையிடுவோர் எண்ணிக்கை 25 விழுக்காடு குறைக்கப்பட்டுள்ளது. இது மட்டுமல்லாமல், ஈராக்கில் மறுசீரமைப்புப் பணிக்கான டெண்டர்கள் அனைத்தும் அமெரிக்க கம்பெனிகளுக்கே அளிக்கப்பட்டுள்ளன. இதில் கோடி கோடியாக அந்த நிறுவனங்கள் கொள்ளையடித்துள்ளது தெரியவந்துள்ளது. 20 காவல் நிலையங்களுக்கு பெயிண்ட் அடிப்பதற்கு 25மில்லியன் டாலர் செலவு செய்யப்பட்டுள்ளது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

**இந்தியா வாங்கலையோ... இந்தியா...?**

“அமெரிக்கப் புராணம் போதும் பாரதப் புராணம் கூறும்” என்றது தான் தாமதம் “இந்தியா வாங்கலையோ இந்தியா” என பெரிய வியாபாரி போல கூவ ஆரம்பித்து விட்டார்.

“அட நிறுத்தும்! நம் நாட்டை விற்கப் பார்க்கிறீர்களா”? என்றோம். 19.11.2009 குமுதம் ரிப்போர்டரில் திரு சோலை எழுதிய “இந்தியா விற்பனைக்கு” என்ற கட்டுரையை தூக்கிப் போட்டார். அதன் சுருக்கங்களைப் படித்துப் பாருங்களேன்.

★ இன்றைக்கு இரண்டாவது முறையாக அமைந்த மன்மோகன் சிங் அரசு சற்றுக் கூடுதலாகப் பலம் பெற்றிருக்கிறது. இடது சாரிகள் பலம் இழந்து விட்டனர். பி.ஜே.பியைப் பற்றிச் சொல்லத் தேவையில்லை. பொதுத்துறைப் பங்குகளை விற்று நாட்டை நாசமாக்குவதற்கு என்றே வாஜ்பாய் ஆட்சியில் ஓர் இலாகா உருவாக்கப்பட்டது. அன்றைய பி.ஜே.பி அரசின் அடிச்சுவட்டில் தான் இன்றைக்கு மன்மோகன் சிங் அரசு செயல்படுகிறது. எல்லாம் தனியார்மயம் என்ற தத்துவத்திற்குத் தோழன்.

★ பங்குச் சந்தை சூதாட்டக் களத்தில் முதலீடு செய்ய பொன் முட்டையிடும் வாத்துக்களை அறுக்கப் போகிறோம் என்கிறார்கள்.சென்ற ஆண்டு அமெரிக்கப் பொருளாதாரம் ஆணி வேரோடு பெயர்ந்து வீழ்ந்தது. பகாசுர நிறுவனங்கள் திவாலாகின. உலகம் முழுமையும் கிளைகள் பரப்பிய வங்கிகள் கதவுகளை மூடிக் கொண்டன. பங்குச் சந்தை பயங்கர வீழ்ச்சிக் கண்டது. அந்தப் பங்குச் சந்தையில் முதலீடு செய்த நிறுவனங்கள் நிர்மூலமாகின.

அந்த அழிவிலிருந்து மீள்வதற்கு அமெரிக்கா மூச்சுத் திணறிக் கொண்டிருக்கிறது. திவாலான தனியார் வங்கிகள், நிறுவனங்களின் பங்குகளை அரசே வாங்குகிறது. ஆம், மரணப்படுக்கையில் மன்றாடும் தனியார் நிறுவனங்களைக் காக்க அரும்பாடு படுகிறது. ஆனால் இங்கே நல்ல லாபத்தில் இயங்கும் பொதுத்துறை நிறுவனங்களின் பங்குகளைத் தனியாருக்கு விற்று மரணப்படுக்கைக்கு அனுப்பப் பார்க்கிறார்கள்.

★ சென்ற ஆண்டு பொருளாதார சுனாமியால் ஆட்டம் கண்ட நாடுகளெல்லாம் தனியார் துறையைக் கட்டுப்படுத்தவும் பொதுத்துறையை வலுப்படுத்தவும் முயன்று வருகின்றன. ஆனால், இங்கே கண்ணை விற்றுச் சித்திரம் வாங்கத் தயாராகி விட்டனர்.

★ LIC நிறுவனம் உலகிலேயே தலைசிறந்த காப்பீட்டுக் கழகமாகச் செயல்படுகிறது. இப்போது அதனைப் பலவீனப்படுத்துவதற்கும் மன்மோகன் சிங் அரசு தயாராகி விட்டது. இவர்களது குருகுலமான அமெரிக்காவில் தனியார் இன்ஷுரன்ஸ் நிறுவனங்கள் திவாலாகி வருகின்றன.

★ எல்லா விற்பனையும் அன்னிய முதலீட்டிற்கு என்ற நிலை தொடருமானால் என்ன நடைபெறும்? இந்தியா விற்பனைக்கு என்று ஒரு நாள் ஏடுகளில் விளம்பரம் வரும்.

இவ்வளவு செய்திகளை வாசித்துக் காட்டிய ஒட்டகனாரின் முகம் கலையாய் இருப்பதைப் பார்த்து ஹஜ்ஜுப் பெருநாள் குர்பானி செய்து நபி இப்ராஹீம் நபி இஸ்மாயீல் அலைஹிஸ் ஸலாம் அவர்களின் பாத்திஹா ரொட்டியும், சுட்ட திக்கா கரியும் சிகப்பு தஸ்தர் விரித்து பரிமாறினோம். ஜம் என்று சாப்பிட்டு. ஏப்பம் விட்டு அல்ஹம்து லில்லாஹ் கூறியவரை "வேறு செய்தி உண்டா?" என்று கிளறினோம்.

"சர்வதேச நீதிபதிகள் மாநாட்டில் வஹ்ஹாபிய தீவரவாதத்தை சரியாக போட்டு உடைத்துள்ளார் RSS அபிமானி ராம் ஜெத்மலானி. அப்துல் வஹ்ஹாப் நஜ்தியைப் பற்றி போட்ட போட்டில் சவூதி தூதருக்கு பொத்துக் கொண்டு கோபம் வர வெளிநடப்பு. உண்மை கசக்கத்தானே செய்யும். அதையும் THE HINDUவின் தலைப்பையும் தினமணி செய்தியையும் பாரீர்!" என்று இரண்டையும் எடுத்துக் காண்பித்தார்.

★ Saudi envoy walks out over Jethmalani's remark. **(THE HINDU- 22.11.2009 Page : 9)**

★ துரதிருஷ்டவசமாக 17-வது நூற்றாண்டில் வஹ்ஹாப் என்ற தீய மனிதர் சௌதி அரேபியாவில் தோன்றினார். முஸ்லிம் உலகம் வீழ்ச்சி அடைவதைப் பற்றி கவலைப்பட்ட வஹ்ஹாப் அதற்கு தவறான தீர்வைத் தந்தார். தீவிரவாதத் தாக்குதல்களை மேற்கொள்ள வேண்டும் என இளைஞர்களின் உள்ளங்களில் ஓர் எண்ணத்தை வஹ்ஹாபி தீவிரவாத கொள்கை உருவாக்கியது.

வஹ்ஹாபி தீவிரவாதத்தை ஆதரித்த நாடுகளுடன் இந்தியா நட்புறவு கொண்டது வேதனையான விஷயமாகும். ஹிந்து தீவிரவாதிகளும், புத்த தீவிரவாதிகளும் இருக்கையில், உலகத்தில் தீவிரவாதம் என்றாலே முஸ்லிம் என முத்திரை குத்தப்படுவது துரதிருஷ்டவசமானதாகும். இஸ்லாம் உள்பட எல்லா மதங்களின் மாணவன் நான் என்பதை தெளிவுபடுத்த விரும்புகிறேன். அமைதியின் இருப்பிடமான இறைத் தூதர் முஹம்மது நபி மீது அதிகபட்ச மரியாதை வைத்துள்ளேன்.

**(நன்றி :தினமணி 22.11.2009 பக்கம் : 7)**

முடித்துக் கொள்ளலாம் என்பதைப் போல ஒட்டகனாரின் முகம் இருப்பதைப் பார்த்து சென்று வாரும் பீஃஅமானில்லாஹ், பிஜாஹே ரஸுலில்லாஹ்! என்று விடை கொடுத்தோம்.

---

# இலங்கையில் ஒடுக்கத்துப் புதன்! ஆய்வும் தீர்வும்...

அன்புள்ள சகோதர சகோதரிகளே!

அஸ்ஸலாமு அலைக்கும் வ ரஹ்மதுல்லாஹி வ பரகாத்துஹு...

ஸஃபர் மாதம் மிடிமைக்குரிய மாதமென்றும், இம்மாதத்தில் எந்தவொரு நல்ல காரியமும் செய்யலாகாதென்றும் மக்களிடம் ஓர் அபிப்பிராயம் இருந்து வருகின்றது.

இந்நாளில் மா, வாழை இலைகளிளோ, பீங்கான் தட்டுக்களிளோ பின்வரும் திருக்குர்ஆன் வசனங்களை எழுதி அதை நீரால் கரைத்துக் குடிக்கும் வழக்கமும், எழுதப்பட்ட இலையை உடலில் குறிப்பாகத் தலையில் தேய்த்துக் குளிக்கும் வழக்கமும் தொன்றுதொட்டு குறிப்பாக இந்திய முஸ்லிம்களிடம் இருந்து வந்தது.

இவ்வழக்கம் இருந்து வந்த காலத்தில் இமாம்கள் போல் திறமையும், அறிவு முதிர்ச்சியும் பெற்றிருந்த மார்க்க அறிஞர்கள் பலர் இருந்துங் கூட அவர்களில் எவரும் இவ்வழக்கம் இஸ்லாம் மார்க்கத்துக்கு முரணானதென்றோ, பித்அத் என்றோ, மூட நம்மிக்கை என்றோ சொன்னதுமில்லை, எழுதியதுமில்லை, வெள்ளிக்கிழமை மிம்பர் மேடையில் முழங்கியதுமில்லை. மாறாக அவர்கள் இவ்வழக்கத்திற்கு ஒத்துழைப்பு வழங்கியே வந்துள்ளார்கள். ஆயினும் சமீப காலத்தில் படித்துப் பட்டம் பெற்ற சிலர் இவ்வழக்கம் ஹராம் என்றும், பித்அத் என்றும், மூடநம்பிக்கை என்றும் பேசியும் எழுதியும் மிம்பர் மேடையில் முழங்கியும் வருகின்றார்கள்.

எனவே இதுபற்றி திருக்குர்ஆனும், நபிமொழிகளும், இஸ்லாமிய அறிஞர் களான இமாம்களும் தெரிவித்துள்ள தகவல்களை இங்கு சுருக்கமாகத் தருகின்றோம்.

இமாம்களையும், மகான்களையும் தூக்கிஎறிந்துவிட்டும், அவர்களால் எழுதப்பட்ட நூட்களைப் புறக்கணித்துவிட்டும் தமக்கு குர்ஆனும், ஹதீஸும் போதுமென்று சொல்பவர்களுக்கு இப்பிரசுரம் இனிக்கவுமாட்டாது. மணக்கவுமாட்டது. கழுதைக்கு குங்குமம் மணப்பதில்லை என்பது பொய்யா மொழி.

கண்டதெற்கெல்லாம் திருக்குர்ஆனிலிருந்தும், ஹதீஸிலிருந்தும் நேரடியான தெளிவான ஆதாரம் கேட்டு ஒற்றைக் காலில் நிற்போர் இல்முல் இல்ஹாம், இல்முல் லதுன்னீ என்று ஒரு வகை அறிவுண்டு என்பதையும் சிந்தனையிற்கொள்ள வேண்டும் இப்படி ஒரு அறிவுண்டு என்பது திருக்குர்ஆனின் ஆதாரம் கொண்டும், சரியான ஹதீஸ்களின் ஆதாரம் கொண்டும் நிறுவப்பட்ட விடயமென்பதையும் தெரிந்து கொள்ள வேண்டும். நபிமார்களுக்கு வஹீயும் இருந்தது, இல்ஹாம் என்ற அறிவும் இருந்தது. ஆனால் நபிமாரல்லாத வலிமார், நல்லடியார்களுக்கு இல்ஹாம் மட்டும் இருந்தது. இதையாரும் மறுக்க முடியாது.

ஒருவர் ஒரு விடயத்தை சொல்லுகிறார் என்று வைத்துக் கொள்வோம். அவரிடம் நீங்கள் சொல்வதற்கு திருக்குர்ஆனிலும், ஹதீஸிலும் ஆதாரம் உண்டா? என்று கேட்கும் போது அது எனக்குத் தெரியாது, ஆனால் இதை எனது இல்ஹாம் என்ற அறிவின் மூலம் சொன்னேன் என்று அவர் சொல்வாராயின் அவரை ஏற்றுக் கொள்வதா? அல்லது இல்ஹாமும் கத்தரிக்காயும் என்று கூறி அவரைத் தூக்கி எறிவதா?

அவரைத் தூக்கிஎறிந்தால் திருக்குர்ஆனும் நபி மொழிகளும் கூறுகின்ற இல்ஹாம் என்ற அறிவைத் தூக்கி எறிந்ததாகிவிடும். ஆகையால் அவரை ஏற்றுக்கொள்ள வேண்டும். ஏற்றுக் கொள்வதாயினும் கண்ணை மூடிக்கொண்டு ஏற்றுக் கொள்ளமுடியாது. அவரை ஷரீஅத் என்கிற தராசில் நிறுத்திப் பார்க்க வேண்டும். அவரின் கொள்கையும், நடவடிக்கைகளும் ஷரீஅத்துக்கு முரணில்லாதிருந்தால், அவர் நல்லடியார் என்று பரவலாக அறியப்பட்டவராயிருந்தால் அவரின் பேச்சை ஏற்றுக் கொள்ள வேண்டுமேயன்றி அவரைத் தூக்கி எறிந்துவிடலாகாது.

இந்த அடிப்படையில் ஒடுக்கத்துப் புதன் தொடர்பாக வலிமார்களும், இறைஞானிகளும் கூறியுள்ள கருத்துக்களை சிந்தனையிற் கொண்டு செயல்பட வேண்டும்.

**ஸபர் மாதம் ஓர் ஆய்வு :**

ஸபர் மாதம் மிடிமைக்குரிய மாதம் என்ற அபிப்பிராயம் நபி ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களின் காலத்திற்கு முன் வாழ்ந்த மக்களிடமும் இருந்தது. இது ஒரு தவறான அபிப்பிராயமாகும். இதனால்தான் நபி அவர்கள்...

இஸ்லாம் மார்க்கத்தில் தொற்று நோய். பறவை ஜாதகம், ஆந்தை கத்துவதால் மரணம் நிகழ்தல் ஸபர் மாதம் மிடிமைக்குரியது என்பன இல்லை என்று அருளினார்கள்.

இதன் கருத்து ஸபர் மாதம் மிடிமைக்குரிய மாதமில்லை என்பதாகும்.

ஆயினும் அல்லாஹ் நாடினால் மிடிமை, கஷ்டம், நோய் போன்றவற்றை ஸபர் மாதத்திலும் தருவான். ஏனைய மாதங்களிலும் தருவான். ஆயினும் ஸபர் மாதம் மிடிமை, கஷ்டம், நோய் போன்றவற்றை சுயமாக ஏற்படுத்துமென்று கொள்ளுதல் பிழையானதாகும். அதாவது ஷிர்க் என்ற இணைவைத்தலை ஏற்படுத்தக்கூடியதாகும். ஏனெனில் அல்லாஹ்வைத் தவிர சுயமாகச் செய்வதற்கு எவருக்கும் எதற்கும் சக்தியே இல்லை. இதுவே ஒரு முஸ்லிமின் நம்பிக்கையாகும். லாஸபர பில் இஸ்லாம் என்ற வசனம் இக்கருத்தையே வலியுறுத்துகிறது. தவிர ஸபர் மாதத்தில் எவருக்கும் மிடிமை, கஷ்டம், நோய் போன்றவை வராதென்பதும் கருத்தல்ல.

## நாட்களில் கெட்ட நாள் உண்டா?

அல்லாஹ் படைத்த ஏழு நாட்களில் கெட்ட நாள் - மிடிமை, கஷ்டம், நோய் போன்றவற்றிற்கான நாள் உண்டு என்பதற்கு திருக்குர்ஆனில் ஆதாரம் உள்ளது.

நிச்சயமாக நாம் அவர்கள் மீது ஆத் கூட்டத்தினர் மீது நஹ்ஸ் உடைய நாளில் கடுமையான காற்றை அனுப்பி வைத்தோம்.

**திருக்குர்ஆன் - கமர் அத்தியாயம் : 101**

நிச்சயமாக நாம் அவர்கள் மீது நஹ்ஸ் உடைய நாளில் கடுமையான காற்றை அனுப்பி வைத்தோம்.

**திருக்குர்ஆன் - புஸ்ஸிலத் அத்தியாயம் : 16**

மேற்கண்ட இரு வசனங்களிலும் முன் வாழ்ந்த கூட்டத்தினருக்கு அல்லாஹ் கடுங்காற்றை அனுப்பி அவர்களைத் தண்டித்ததாகக் கூறியுள்ளான்.

மேற்கண்ட இரு வசனங்களில் முந்தின வசனத்தில் நஹ்ஸ் என்ற சொல் ஒருமையாகவும், இரண்டாம் வசனத்தில் பன்மையாகவும் வந்துள்ளது. இச் சொல்லுக்கு தீமை, மிடிமை, தரித்திரம் போன்ற அர்த்தங்கள் உள்ளன. மேற்கண்ட இரு வசனங்கள் மூலம் நஹ்ஸ் உடைய நாளென்று ஒன்று உண்டு என்பது தெளிவாகின்றது. அந்த நாள் எது என்பதில் அறிஞர்களுக்கிடையில் கருத்துவேறுபாடு காணப்படுகின்றது. அதோடு அந்த நாள் எந்த மாதத்திலுள்ள நாள் என்பதிலும் கருத்துவேறுபாடு காணப்படுகின்றது. இவ்விவரத்தை சரியாக அறிந்து கொள்வதாயின் ஆத் கூட்டத்தினருக்கு அல்லாஹ் பயங்கர காற்றை அனுப்பிய மாதம், நாள் பற்றித் தெரிந்துகொள்ளுதல் வேண்டும். இதில் கூட வரலாற்று ஆசிரியர்களுக்கிடையில் கருத்து வேறுபாடு உண்டு. எனினும் இது தொடர்பாகச் சொல்லப்பட்டுள்ள பலரின் கருத்தையும் இங்கு தருகின்றோம்.

அந்த நாள் புதன் கிழமைதான் என்று பல்வேறு அறிஞர்கள் கருத்து கூறியுள்ளார்கள். ஆயினும் அவர்கள் எந்த மாதம் என்பது பற்றி தெளிவாகவும், திட்டவட்டமாகவும் ஒன்றும் சொன்னதாக காணவில்லை. தப்ஸீர் ரூஹுல் மஆனியின் ஆசிரியர் அவர்கள் தங்களின் மேற்கண்ட விரிவுரை நூல் 27 ஆம் பாகம், 119 ஆம் பக்கத்தில் அது ஷவ்வால் மாதம் பிற்பகுதியிலுள்ள புதன் கிழமை என்று கூறியுள்ளார்கள்.

அல்லாமா வகீஉ அவர்கள் குறர் என்ற நூலில் ஒவ்வொரு மாத்தின் கடைசிப் புதன்கிழமை நஹ்ஸ் உடைய நாள் என்று நாயகம் அறிவித்துள்ளதாக இப்னு அப்பாஸ் அவர்களைத் தொட்டும் வந்துள்ள நபி மொழியை இப்னு மர்தவைஹ் அவர்களும், அல் ஹதீபுல் பக்தாதீ அவர்களும் அறிவித்துள்ளதாக எழுதியுள்ளார்கள். இமாம் தபரானீ அவர்கள் அந்த நாள் புதன் கிழமை என்று தங்களின் தபரானீ என்ற நூலில் பதிவு செய்துள்ளார்கள். ஆயினும் மேற்கண்ட இரு நபி மொழிகளையும் அபூ ஹாதம், இப்னுல் ஜவ்ஸீ, இப்னு ரஜப், ஸகாவீ ஆகியோர் ழயீப் பலம் குறைந்தவை என்று கூறியுள்ளார்கள்.

புதன் கிழமை நஹ்ஸ் உடைய நாள் என்று தகவல்கள் இருப்பது போல் அது நல்ல நாளென்றும் தகவல்கள் உள்ளன. மின்ஹாஜுல் ஹுலைமி, ஷுஅபுல் பைஅகீ ஆகிய இரு நூல்களிலும் புதன்கிழமை மதிய நேரத்தின் பின் பிரார்த்தனை ஏற்றுக் கொள்ளப்படும் என்று கூறப்பட்டுள்ளது.

இமாம் புர்ஹானுல் இஸ்லாம் அவர்கள் ஹிதாயஹ் என்ற நூலில் வந்துள்ளதாக தங்களின் தஃலீமுல் முதஅல்லிம் என்ற நூலில் புதன் கிழமை ஆரம்பிக்கப்படுகின்ற எந்தவொரு காரியமும் நிச்சயமாக நிறைவேறும் என்றும் அன்றுதான் அல்லாஹ் ஒளியைப் படைத்தான் என்றும் குறிப்பிட்டுள்ளார்கள். இதனால் தான் பெரியோர்கள் - ஹஜ்ரத்மார்கள் கல்வி சம்பந்தமான வகுப்புகளை புதன்கிழமையில் தொடங்கி வந்துள்ளார்கள். அதோடு புதன்கிழமை கல்விக்குரிய நாளென்றும் பரவலாக கணிக்கப்படுகின்றது.

எவனாவது புதன்கிழமை மரங்களை நட்டி ஸுப்ஹானல் பாஇதில் வாரீதி என்று சொல்வானாயின் அவை அவனுக்கு காய்கனிகளைக் கொடுக்கும் என்ற நபிமொழியை ஹஜ்ரத் ஜாபிர் அவர்கள் அறிவிக்க இப்னு ஹிப்பான் அவர்களும் தைலமீ அவர்களும் தமது நூட்களில் பதிவுசெய்துள்ளார்கள். இந்த நபிமொழியை ஆதாரமாகக் கொண்டு பெரியோர்கள் செயல்பட்டு வந்துள்ளார்கள்.

## புதன்கிழமை கெட்டநாளா?

புதன்கிழமை நஹ்ஸ் உடைய நாள் என்பதற்கான சில தகவல்களை இங்கு தருகின்றோம். எனது உம்மத்துக்கள் வெறுக்கமாட்டார்கள் என்றிருந்தால் புதன்கிழமை பயணம் செய்ய வேண்டாம் என்று அவர்களை நான் பணித்திருப்பேன் என்று நாயகம் அவர்கள் கூறியதாக அன்னை ஆயிஷா அவர்கள் அறிவித்துள்ளார்கள். இந்த நபிமொழி பிர்தவ்ஸ் என்ற நூலில் பதிவாகியுள்ளது.

வார நாட்களில் சனிக்கிழமை - சூழ்ச்சி, துரோகத்துக்குரிய நாளாகும், ஞாயிற்றுக்கிழமை மரம் நடுதல், கட்டிடம் கட்டுவதற்குரிய நாளாகும். திங்கட்கிழமை பயணம், உழைப்புக்குரிய நாளாகும். செவ்வாய்க்கிழமை வன்மை, துக்கத்துக்குரிய நாளாகும். புதன்கிழமை கொடுக்கல் வாங்கலுக்குப் பொருத்தமற்ற நாளாகும். வியாழக்கிழமை தேவைகளைத் தேடுவதற்கும், அதிகாரிகளிடம் செல்வதற்குரிய நாளாகும். வெள்ளிக்கிழமை திருமணப் பேச்சுக்கும், திருமணம் செய்வதற்கும் பொருத்தமான நாளாகும். என நபிகள் நாயகம் அவர்கள் கூறியுள்ளார்கள்.

இந்த நபி மொழியை ஹஜ்ரத் இப்னு அப்பாஸ் அவர்கள் அறிவித்ததாக ஹஜ்ரத் அபூயஃலா அவர்களும், ஹஜ்ரத் அபூ ஸயீத் அவர்கள் அறிவித்ததாக இப்னு அதிய்யாஹ் அவர்களும், ஹஜ்ரத் தமாம் அவர்களும் அல்பவாயித் என்ற நூலில் பதிவு செய்துள்ளார்கள்.

ஆயினும் ஹஜ்ரத் ஸகாவீ அவர்கள் இந்த நபிமொழி பலவீனமானதென்று கூறியுள்ளார்கள்.

வெண்குஷ்டம், கருங்குஷ்டம் இரண்டும் புதன்கிழமையில்தான் வெளியாகுமென்று நபிகள் நாயகம் அவர்கள் கூறியுள்ளார்கள்.

இந்த நபிமொழியை ஹஜ்ரத் இப்னு உமர் அவர்கள் அறிவித்துள்ளதாக இப்னு மாஜாவும், வேறு இருவழிகளில் ஹாக்கிம் அவர்களும் பதிவு செய்துள்ளார்கள்.

புதன் கிழமை நகம் வெட்டுதல் கூடாதென்றும், அவ்வாறு செய்தால் குஷ்டநோய் வருமென்றும் சில தகவல்கள் கூறுகின்றன. ஒரு நோயாளியிடம் குசலம் விசாரிக்கச் செல்வது நல்ல காரியமாயினும் அதைப் புதன் கிழமை தவிர்த்துக் கொள்ளுதல் நல்லதென்றும் தகவல்கள் கூறுகின்றன.

புதன்கிழமை மிடிமைக்குரிய நாளாக கருதப்படுமென்றும், மாதத்தின் கடைசிப் புதன்கிழமை மிகவும் கடுமையான மிடிமைக்குரிய நாளாக கருதப்படும் என்றும், அர்றவ்ழஹ் என்ற நூலில் கூறப்பட்டுள்ளது.

மாதத்தின் கடைசிப் புதன்கிழமை மிடிமைக்குரிய நாளென்று நபிகள் நாயகம் அவர்கள் கூறியதாக ஹஜ்ரத் இப்னு அப்பாஸ் அவர்கள் அறிவித்துள்ளார்கள்.

ரூஹுல் பயான் என்ற திருக்குர்ஆன் விரிவுரை நூல் வால்யும் 09 பக்கம் 324ல் புதன்கிழமை சுவர்க்கத்து நீர் உலகத்து நீருடன் கலக்கப்படுவதால் அன்று குளிப்பது சிறந்ததென்று கூறப்பட்டுள்ளது.

தண்டனையைப்பெற்ற எந்தவொரு கூடமாயினும் அது புதன்கிழமையே தண்டிக்கப்பட்டுள்ளது. இந்த தகவல் ரூஹுல் பயான் வால்யும் 08 பக்கம் 328ல் இடம்பெற்றுள்ளது.

ஸபர் மாதத்தின் கடைசிப் புதன்கிழமையில் முன்னூற்றி இருபதாயிரம் சோதனைகள், துன்பங்கள் இறங்குவதாகவும், வருட நாட்களில் அந்த நாள் ஒன்று மட்டுமே மிகவும் கஷ்டமான

நாளென்றும் இறைஞானிகள் சொல்லியிருப்பதாக முஜர்ரபாதுத் தைரபீ என்ற நூலில் 103ஆம் பக்கத்தில் கூறப்பட்டுள்ளது.

**காஜா அஜ்மீர் நாயகத்தின் கூற்று**

அஷ்ஷைகுல் காமில் பரீதுத்தீன் மஸ்வூத் கன்ஜே ஷகர் அவர்கள், தங்களின் ஞானகுரு ஹஜா முயீனுத்தீன் அவர்களின் அவ்றாத் தொகுப்பில் பின்வருமாறு இருக்க, தான் கண்டதாகக் கூறியுள்ளார்கள்.

ஒவ்வொரு வருடமும் முன்னூற்றி இருபதாயிரம் சோதனைகள் - துன்பங்கள் இறங்குகின்றன. அவையாவும் ஸபர் மாத்தின் இறுதி புதன்கிழமையிலேயே இறங்குகின்றன. அந்த வருட நாட்களில் இந்த நாள்தான் மிகவும் கஷ்டமானது. அன்று யாராவது நான்கு றக்அத் தொழுது ஒவ்வொரு றக்அத்திலும் பாத்திஹா சூரா ஓதிய பின் இன்னா அஃதைனா கல்கவ்ஸர் என்ற சூரத்தை 17 தரமும், குல்ஹுவல்லாஹு ஐந்து தரமும், குல் அவூதுபி றப்பில் ஃபலக் ஒரு தரமும், குல் அவூதுபி றப்பின்னாஸ் ஒரு தரமும் ஓதினால் அந்த வருடம் முழுவதும் அவன் சகல பலாய்களிலிருந்தும் பாதுகாக்கப் படுவான். பின்பு ஸலாம் என்ற சொல் கொண்டு துவங்கப்படுகின்ற திருக்குர்ஆன் வசனங்களை பன்னீர், கஸ்தூரி, குங்குமம் கொண்டு பீங்கானில் எழுதிக் குடிக்கவும் வேண்டும். நூல் : பழாயிறுஷ் ஷுஹூரில் ஹஜ்ரிய்யாஹ் - பக்கம் - 33,34

**ஸபர் மாதம் பீடை மாதமா?**

ஸபர் மாதம் எந்தவொரு வேலையும் செய்யாமல் இருப்பது சிறந்ததென்று அநேகர் அபிப்ராயம் கூறுகின்றார்கள் என்றும்,

ஸபர் மாதம் முடிந்து விட்டதென்று என்னிடம் சுபச்செய்தி சொல்பவனுக்கு சுவர்க்கத்தைக்கொண்டு நான் சுபச் செய்தி சொல்வேன். என்று நபிகள் நாயகம் அவர்கள் கூறியுள்ளார்கள் என்றும் ஹயாத்துல் ஹைவான் என்ற நூலில் முதலாம் பாகம் 120ஆம் பக்கத்தில் கூறப்பட்டுள்ளது.

இஆனதுத் தாலிபீன் என்ற சட்டக்கலை நூலை எழுதியவரும், மக்காவில் பிறந்து திரு மதீனாஹ் நகரில் மறைந்தவருமான அஸ்ஸெய்யித் முஹம்மத் ஷாஹ் அத்திம்யாதீ அவர்கள் தங்களின் நிஹாயத்துல் அமல் என்ற சட்ட நூல் 208ஆம் பக்கத்தில் ஒடுக்கத்துப் புதன் பற்றிக் குறிப்பிடுகையில், ஒவ்வொரு வருடத்திற்கெனவும் அல்லாஹ்வால் ஏற்படுத்தப்படுகின்ற பலாய்கள், கஷ்டங்கள், சோதனைகள் லவ்ஹுல் மஹ்பூள் பலகையிலிருந்து பூமியை அடுத்துள்ள முன் வானத்துக்கு ஸபர் மாத இறுதிப் புதனன்று இறக்கப்படுகின்றன. ஆகையால் கீழ் காணும் திரு வசனங்களைப் பாத்திரத்தில் எழுதி அதைத் தண்ணீரால் கரைத்துக் குடிப்பவர்களுக்கு மேற்குறித்த சோதனைகள் ஏற்படமாட்டா தென்று கூறியுள்ளார்கள்.

**ஒடுக்கத்துப் புதன் இந்திய மூடநம்பிக்கையல்ல**

ஒடுக்கத்துப்புதன் கதையும், மா - வாழை இலையில் இஸ்ம் எழுதிக்குடிக்கும் - குளிக்கும் கதையும் இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட மூடநம்பிக்கை என்று சொல்வோர் மேற்கண்ட நூலாசிரியர் மக்காஹ்வில் பிறந்து, திரு மதீனாவில் மறைந்தவர் என்பதைத் தெரிந்துகொள்ளுதல் வேண்டும்.

ஒவ்வொரு மாதத்தின் இறுதிப் புதன்கிழமையும், குறிப்பாக ஸபர் மாதத்தின் இறுதிப் புதன்கிழமையும் நஹ்ஸ் மிடிமைக்குரிய நாட்கள் என்பதற்கான மேற்கண்ட ஆதாரங்கள் கொண்டும்,

நபிகள் நாயகம் அவர்கள் உலக வாழ்வை துறக்கும் உடல் நலக்குறைவும் ஸபர் மாதத்தின் இறுதிப் புதன் கிழமை ஆரம்பமானதைக் கருத்திற் கொண்டும் அன்றைய தினம் திருக்குர்ஆன் வசனங்களை மா - வாழை இலையிலோ, அல்லது வேறு பாத்திரத்திலோ எழுதி நோய், மிடிமை, கஷ்டம் போன்றவற்றிலிருந்து பாதுகாப்புப் பெறும் நோக்குடன் குடிப்பதை இஸ்லாமிய மூத்த அறிஞர்கள் நல்ல காரியம் என்று கூறியுள்ளதால் இவ்வழக்கம் எந்த வகையிலும் ஹராம் ஆகவோ, பித்அத் ஆகவோ, ஷிர்க் ஆகவோ மாட்டாது.

அருள் பெற நாடி திருக்குர்ஆன் வசனங்களை அன்றைய தினத்திலோ, வேறு தினத்திலோ குடிப்பதற்கு நிறைய ஆதாரங்கள் உள்ளன. தேவையானோர் எம்முடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

எனவே ஸபர் மாதத்தின் இறுதிப் புதன்கிழமையான ஒடுக்கத்துப் புதன்கிழமை திருக்குர்ஆன் வசனங்களை மா - வாழை இலைகளிலோ, அல்லது காகிதம் பீங்கான் போன்றவற்றிலோ எழுதிக் கரைத்துக் குடிப்பதும், உடலில் தேய்த்துக் குளிப்பதும் முபாஹ் ஆகுமாக்கப்பட்ட காரியமேயன்றி அது எந்தவகையிலும் மார்க்கத்திற்கு முரணாகிவிடாது. அதனால் ஏதோ ஒரு வகையில் பயன்தான் கிடைக்குமேயன்றி பாவம் வந்துவிடாது. இதை எதிர்ப்போர் இவ்விடயத்தை ஆழமாக ஆய்வு செய்து இச்செயல் ஷிர்க் என்றுத் பித்அத் என்றும் மூடநம்பிக்கை என்றும் ஃபத்வா வழங்குவதையும், மின்பர் மேடைகளில் முழங்குவதையும் கண்டிப்பாகத் தவிர்த்துக் கொள்ளுதல் வேண்டும்.

இது தொடர்பாக வந்துள்ள நபிமொழிகள் பலம் குறைந்தவை என்று வைத்துக் கொண்டாலும் கூட பலம் குறைந்த நபிமொழிகளை ஆதாரமாகக் கொண்டு செயல்பட முடியுமென்பதையும் அவர்கள் தெரிந்துகொள்ளுதல் வேண்டும், இவ்வழக்கம் ஹராம் என்பதற்கோ, ஷிர்க் என்பதற்கோ, ஆதாரம் இல்லா திருப்பதாலும், ஆனால் முபாஹ் ஆகுமென்பதற்கு ஆதாரம் இருப்பதாலும் இதை எதிர்ப்போர் இது விடயத்தில் குறைந்தபட்சம் விரும்புவோர் செய்யட்டும், விரும்பாதோர் விட்டு விடட்டுமென்றாவது சொல்லவேண்டும் என்று அவர்களை அன்பாய் கேட்டுக் கொள்கின்றோம்.

ஓர் ஊரில் தொன்றுதொட்டு நடந்து வந்த ஒரு வழக்கம் முபாஹ் ஆகுமாக்கப்பட்ட ஒன்றாக இருந்தால் அதை அப்படியே விட்டுவிட வேண்டுமேயன்றி அதைத் தடுத்து நிறுத்துவதும், அதைக் கருவாகக் கொண்டு ஊர் மக்களிடம் பிளவையும், பிரச்சனையையும் உருவாக்குவதும் கடும் தண்டனைக்குரிய குற்றமாகும். குழப்பவாதிகளின் கீழ்தரமான செயலுமாகும். அஸர் தொழுகையின் பின் தொழுகையில் ஒரு சிலர் மறுசிலருடன் முஸாபாஹ் கைகொடுத்து ஸலாம் சொல்வது போன்று சூரிய கிரகணத் தொழுகையும், சந்திர கிரகணத் தொழுகையும் மார்க்கத்தில் சுன்னத் ஆக்கப்பட்டுள்ளதற்கான காரணம் இங்கு ஆய்வுக்கு எடுக்கப்பட வேண்டிய ஒன்றாகும்.

**ஏழு திருவசனங்கள்**

1. ஸலாமுன் கௌலம் மிர் றப்பிர் றஹீம் (36-28) — سَلَامٌ قَوْلًا مِّنْ رَّبٍّ الرَّحِيْمِ
2. ஸலாமுன் அலா நூஹின் ஃபில் ஆலமின் (57-79) — سَلَامٌ عَلٰى نُوْحٍ فِى الْعَالَمِيْنَ
3. ஸலாமுன் அலா இப்ராஹீம் (37-109) — سَلَامٌ عَلٰى اِبْرَاهِيْمَ
4. ஸலாமுன் அலா மூஸா வ ஹாரூன் (37-120) — سَلَامٌ عَلٰى مُوْسٰى وَهَارُوْنَ
5. ஸலாமுன் அலா இல்யாஸீன் (37-131) — سَلَامٌ عَلٰى اِلْيَاسِيْنَ
6. ஸலாமுன் அலைக்கும் திப்த்தும் ஃபத்குலூ ஹாகாலிதீன் (37-73) — سَلَامٌ عَلَيْكُمْ طِبْتُمْ فَادْخُلُوْهَا خَالِدِيْنَ
7. ஸலாமுன் ஹிய ஹத்தா மத்ல இல் பஜ்ர் (97-5) — سَلَامٌ هِيَ حَتّٰى مَطْلَعِ الْفَجْرِ

**நன்றிகள் பல**

மௌலவி அல்ஹாஜ் அப்துர் றஊப் மிஸ்பாஹி - பஹ்ஜீ அகில இலங்கை சமாதான நீதிவான் காத்தன்குடி. தொலைபேசி : 065-2245625 0777733786 வெளியீடு இறாக் நட்புறவு ஒன்றியம், கல்முனை. 24.03.2006

அன்றும்! இன்றும்!

# அந்த கால முஸ்லிம் குடும்பங்களின் ஒரு நாள் பொழுது...!

அதிகாலை பாங்கிற்கு முன்போ, பின்போ எழுந்து விடுவோம், அல்லது எழுப்பப்பட்டு விடுவோம்! பல வீடுகளில் லைட் கிடையாது. அப்படி இருந்தாலும் குண்டு பல்பு தான். டியூப் லைட் கருப்பா சிவப்பா தெரியாது. சின்னதாக எரியும் விளக்கு திரியை கூட்டி வெளிச்சம் ஏற்படுத்திக் கொண்டு கொள்ளைப் பக்கம் காலை கடன்களை முடித்துக் கொண்டு, பெரிய இரும்பு டப்பாவில் பல் பொடி போன்ற கருப்பு தூள் இருக்கும். அதை தயாரிப்பது என்பது தனிக் கதை. பெரிய இரும்பு கடாயில் உமியோ, தவிடோ போட்டு அடுப்பில் வைத்து எரித்து ஓரளவு கருப்பானவுடன், கல் உப்பை ( அந்த காலத்தில் தூள் உப்பு பாக்கெட் எல்லாம் கிடையாது) இடித்து தூளாக்கி அத்துடன் ஒரு அளவு கரு மிளகும் இடித்து தூளாக்கி நன்றாக கலந்து வைத்திருப்பார்கள். எடுத்துப் போட்டு தேய்த்தால் ஈர்களில் லேசாக எரிச்சலாகவும், உப்புக் கரிப்பாகவும் இருக்கும். அந்த கருப்பு தூளால் பல் தேய்த்து ஒளு செய்தால் இன்றைய போலி விளம்பரங்களை விட பற்கள் பளீர் வெள்ளையாய் இருக்கும்.

பள்ளிக்கு அருகில் உள்ளவர்கள் பள்ளிக்கு தொழ சென்றுவிட வேண்டும். தொழுது வந்தால் அலிஃப், பே காயிதா, அல் ஹம்து, குர்ஆன் என்று எதை ஓதிக் கொண்டிருக்கிறோமோ அதை ரிஹாலுடன் தலையில் வைத்துக் கொண்டு பள்ளிவாசலில் உள்ள மாரஸாவிற்கு சென்றுவிட வேண்டும். தம்பிகளும் இருந்தால் கிதாபு எடுத்துக் கொடுத்து, தொப்பி வைத்து அழைத்துச் செல்ல வேண்டியது அண்ணன்மார்களின் பொறுப்பு. இல்லையேல் இப்லீசு, ஷைத்தான் தம்பிய அழாம கூட்டிட்டுப் போடா என்று திட்டோ, சில சமயம் திட்டுடன் கூடிய அடியோ, அடியுடன் கூடிய திட்டோ வானிலை அறிவிப்பைப் போல் அவ்வப் போது உண்டு!

பெண் பிள்ளைகள் ஃபஜ்ரு தொழுது முடித்து வீட்டை கூட்டி பெருக்கி முடித்து, சின்ன கோஷா துப்பட்டி போட்டு கிதாபுடன் அரை மணி நேர சலுகையுடன் மதரஸா வருவார்கள். இதற்கு முன் நன்னிமா, பூமா எழுந்து, வெறும் வைத்தோட மதரஸா போய் என்ன படிக்கும் குழந்தைகள்? என்று தே தண்ணியோ, காப்பி தண்ணியோ கொஞ்சம் வசதியுள்ள வீடுகளில் கொடுப்பதுண்டு.

பள்ளி வாசலிலோ, வசதியுள்ள மஹல்லாக்களில் பள்ளி தாவாரத்திலோ மதரஸா நடக்கும் ஹஜ்ரத் நடுவில் சிறு டெஸ்கைப் போட்டு கம்பீரமாக உட்கார்ந்திருப்பார். ஹஜ்ரத்தின் ஒரு பக்கம் மாணவிகளும், ஒரு பக்கம் மாணவர்களும் வரிசையாய் உட்கார்ந்திருப்போம் ஒவ்வொருவராகவோ அல்லது ஹஜ்ரத் கூப்பிடும் நபராகவோ தரஸ் பாடம் ஓத வேண்டும். பாடம் இரவில் ஓதாமல் வந்தவர்கள் நீபோ, நாபோ என்று குசு குசுப்போம்...

“ஷைத்தானு அவுலியாவு பேகூஃப் மூதேவி ஜஹன்னம்” என ஹஜ்ரத் கத்துவார். ஏதோ கோபமாக இருக்கிறார் என்பது தெரியும். அரபி, ஃபார்ஸி, உருது, தமிழ் என்று பல மொழிகள் சேர்த்து திட்டுகிறார் என்று வீட்டில் எங்களுடன் அன்னோன்யமாக பேசும் சாச்சா, வாப்பா, சின்ன அத்தா, நன்னா யாராவது விளக்கம் சொல்லித் தான் தெரிய வரும்.

நேற்று தொழாதவர்கள், சாப்பிடும் போது பிஸ்மி சொல்லி சாப்பிடாதவர்கள் என்று விசாரித்து, பிள்ளைகளுக்கு மார்க்கம் சொல்லிக் கொடுப்பதில்லை என்று வீட்டில் உள்ளவர்களையும் சேர்த்து திட்டுவார் ஹஜ்ரத்.

ஒன்னரை இரண்டு மணிநேரம் மதரஸா நடக்கும். பின் எல்லோரும் எழுந்து நின்று ஐந்து கலிமாக்கள், அரபி பைத்துக்கள், அரபி தமிழ் பாடல்கள், தொழுகை, நோன்பு, ஜகாத் சட்டங்கள், நான்கு இமாம்கள், நான்கு கலிபாக்கள், வலிமார்களின் வரலாறு, மவ்லிதுகள் என்று எல்லாவித மார்க்க விஷயங்களையும் எளிமையான முறையில் மனதில் பதிய வைத்துவிடுவார்கள். நாங்கள் எழுந்து நின்று கோரஸாக ஓதுவது மஹல்லா அதிரும்படி கேட்கும்.

ஹஜ்ரத் அஸ்ஸலாமு அலைக்கும் என்று ஆளுக்கு ஒரு மாதிரி கத்திவிட்டு, ஹஜ்ரத்திடம் மாட்டி கொடுத்து திட்டு வாங்க வைத்தவனை, அடிவாங்க வைத்தவனை கூட்டத்தில் நங்கு என்று ஒரு குட்டு குட்டிவிட்டு இன்னாலில்லாஹி... எடுத்தானா ஓட்டம்! என்று மஹல்லாவில் ஓடிவிடுவது இன்று நினைத்தாலும் பசுமையாய் உள்ளது.

மேற்கொண்டு எழுத இடப் பற்றாக்குறை காரணமாக ஆசிரியர் தடுப்பதால் அதற்குப் பின் பொழுதை எழுதுவதா, வேண்டாமா என்பது வாசகர் ஊக்கம் கொடுத்து எழுதும் அஞ்சல் அட்டைக் கடிதங்களை பொறுத்தது. காலை 8 மணிக்கு மேல் என்ன நடக்கும் என்பதை தொடர்ந்து பார்க்கலாம்...

# வலிமார்கள் பேசுகிறார்கள்...!

தப்ஸீர், ஹதீஸ் பகுதிகள் தர்கா இதழில் துவங்கிய போது வலிமார்கள் பற்றிய ஒரு பகுதி துவங்கினால் என்ன என்றதன் வெளிப்பாடு தான் வலிமார்கள் பேசுகிறார்கள்...

## ஹஜ்ரத் அபுல் ஹசன் கிர்கானி...

நாகூர் எஜமான் பாதுஷா நாயகத்தின் குருநாதரான ஹஜ்ரத் சையதுஸ் ஸாதாத் ஹஜ்ரத் கௌஸுல் முஸ்லிமீன் சையத் ஷா முஹம்மத் கௌஸ் குவாலியர் அவர்களின் 6வது தலைமுறை பாட்டனார் சையதுஸ் ஸாதாத் ஹஜ்ரத் ஃபரீதுத்தீன் அத்தார் (513 ஹிஜ்ரி) அவர்கள் தமது உலகப் புகழ் பெற்ற கிரந்தமான தஸ்கிரத்துல் அவ்லியாவில் 296வது பக்கத்தின் ஹஜ்ரத் அபுல் ஹசன் கிர்கானியின் கூற்றை இப்படி எழுதுகிறார்கள்.

எல்லாம் வல்ல எனது நாயன் கியாம நாளிலே என்னை தன் அருகில் அழைத்துக் கூறுவான். நீ எதை விரும்புகிறீர்? நான் பணிவுடன் பதிலளிப்பேன் யா அல்லாஹ்! நான் உலகில் வாழ்ந்தபோது என்னருகில் இருந்தோரையும், எனது வஃபாத்துக்குப் பின் என் தர்காவிற்கு ஜியாரத்திற்கு வந்தோரையும், யார் என் பெயரை நினைவு கூர்ந்தார்களோ அவர்களையும் மன்னித்தருள்வாயாக!

அது போது இறைவன் அருள்வான். நீர் அன்று உலகில் வாழ்ந்த போது எனது (ரஸூலால் வழங்கப்பட்ட) ஷரீஅத் சட்டத்தை பேணி நடந்தீர், எனவே இன்று நான் உமது விருப்பத்தை பூர்த்தி செய்கிறேன் என்று கூறி அத்தனை பேர்களும் என் முன்னே கொண்டு வரப்படும் போது நபிகள் கோமான் கண்மணி நாயகம் அவர்கள் என்னைப் பார்த்து சொல்வார்கள், உமக்காக என் முன்னால் இடம் ஒதுக்கித் தருகிறேன் என்பார்கள். ஆனால் அவர்களிடம் யா ரஸூலே! உலகிலும் நான் தங்களை பின் தொடர்ந்து வந்தேன். இங்கும் நான் தங்கள் பின்னால் இருப்பதையே பாக்கியமாக கருதுகிறேன் என கூறுவேன்.

அல்லாஹ்வின் நாட்டத்தால் ஒரு பெரிய அழகான விரிப்பு விரிக்கப்படும் அதில் நான் நிறுத்தப்படலாவேன். அப்போது வலிமார் அந்தஸ்து அடைந்தோரை என் முன் நிறுத்தி அல்லாஹ், ரஸூலை விளித்துக் கூறுவான். இந்த வலிமார்கள் தங்களின் விருந்தினர் ஆவர். ஆனால் இந்த அபுல் ஹசன் கிர்கானி எம்முடைய விருந்தினர்! என்று கூறுவான்.

மேலும் பகர்ந்தார்கள், யார் என்னுடைய பேச்சைக் கேட்டு நடந்தனரோ, நாளை கேட்டு நடப்பார்களோ அத்தனை பேரின் அந்தஸ்த்தும் கியாம நாளில் குறைந்த பட்சமாக என்னவாக இருக்குமென்றால் அவர்கள் கணக்கு வழக்கு இல்லாமல் மன்னிக்கப்படுவார்கள்!

நூல் : தஸ்கிரத்துல் அவ்லியா பக்கம் 296

## செய்திகள் தருவது தர்கா

### ஏர்வாடி தர்காவில் சந்தனக்கூடு திருவிழா

ராமநாதபுரம் மாவட்டம், ஏர்வாடி தர்காவில் மஹான் குத்புல் அக்தாப் சுல்தான் செய்யது இப்ராஹீம் ஷஹீது ஒலியுல்லாஹ் அவர்களின் சந்தனக்கூடு திருவிழா இந்த ஆண்டு நவம்பர் 11ஆம் தேதி புதன்கிழமை அதிகாலை சிறப்பாக நடைபெற்றது. இதில் அனைத்து சமுதாயத்தினரும் திரளாக கலந்து கொண்டனர். சந்தனக்கூடு எடுத்துவரும் ஊர்வலம் பெரிய ஏர்வாடியிலிருந்து புறப்பட்டு தர்காவை வந்தடைந்தது.

ஊர்வலத்தில், அலங்கரிக்கப்பட்ட யானைகள், வெள்ளைக் குதிரைகள், அணிவகுத்து வந்தன. வாத்தியம் மேளங்கள் முழங்க வாண வேடிக்கைகளுடன் வெள்ளிப் பேழையில் யானை மீது எடுத்துவரப்பட்ட சந்தனம், மகானின் சமாதியில் பூசப்பட்டது.

ஊர்வலமாக எடுத்து வரப்படும் சந்தனக்கூட்டின் ஒவ்வொரு பகுதியையும், ஒவ்வொரு சமூகத்தினரும் செய்து அலங்கரித்து எடுத்து வருவதால், அனைத்து மதத்தினரும் கொண்டாடும் மத நல்லிணக்க விழாவாகவும் இது நடந்து வருகிறது.

### நாகூர் ஷரீஃபில் சின்ன ஆண்டவர்கள் உரூஸ் முன்னிட்டு ஆன்மீக சொற்பொழிவு

நாகூர் ஆண்டகை ஹஜ்ரத் செய்யது அப்துல் காதிர் ஷாஹுல் ஹமீது பாதுஷா நாயகம் அவர்களின் அருமை புத்திரரான ஹஜ்ரத் சுல்தானுல் மாஷாயிகு ஷாஹ் செய்யது முஹம்மது யூசுப் சாஹிபு ஆரிஃப் பில்லாஹ் என்னும் திருநாமத்தையுடைய ஹஜ்ரத் தாதா சாஹிபு நாயகம் அவர்களின் சந்தனம் பூசும் நிகழ்ச்சியை முன்னிட்டு நாகூர் நாயகம் நேசப் பாசறை 20.11.2009 வெள்ளிக்கிழமை காலை 10மணிக்கு நாகூர் தர்கா ஷரீஃப் உட்புறம் ஆன்மீக சொற்பொழிவு நிகழ்ச்சிக்கு சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தனர்.

நிகழ்ச்சிக்கு முதவல்லி K.முஹம்மத் கலிபா சாஹிபு காதிரி (தர்கா பரம்பரை கலீபா & மேனேஜிங் டிரஸ்டி) அவர்கள் தலைமை தாங்கினார்கள்.

மௌலானா மௌலவி ஹாஃபிழ் அல்ஹாஜ் K.A.M. முஹம்மத் முஹ்யித்தீன் ஆலிம் பாகவி (மேலப்பாளையம்) அவர்களும், M.K. முஹம்மத் காஸிம் மஹ்ளரி (இமாம் ஏழுலெப்பை ஜாமிஆ மஸ்ஜித் நாகூர் ஷரீஃப்) அவர்களும் பன்னூல் ஆசிரியர் M.A. ஹைதர் அலீ B.A., காதிரி ஷுத்தாரி சிஷ்தி ரிஃபாயி அவர்களும் மற்றும் பல உலமாக்களும், சொற்பொழிவில் கலந்து கொண்டனர். சொற்பொழிவில் திரளாக மக்கள் கூடியிருந்தனர்.

சொற்பொழிவின் முடிவில் பன்னூல் ஆசிரியர் M.A. ஹைதர் அலீ B.A., அவர்கள் எழுதிய மும்மதம் போற்றும் நாகூரார், நாகூர் ஆண்டகையின் பேரர் காட்டு பாவா ஃபக்ருத்தீன் ஷஹீது ஒலியுல்லாஹ், முத்துப்பேட்டை கஷ்ஃபுல் கராமாத் காரணப்புதுமை ஆகிய நூட்கள் வெளியிடப்பட்டன.

### கௌஸுல் அக்வாஸ் தமீம் அன்ஸாரி அவர்களின் கொடியேற்றம் மற்றும் உருஸ் முபாரக்

சென்னையை அடுத்துள்ள கோவளம் கிராமத்தில் ஹஜ்ரத்துல் அக்தஸ் ஸெய்யிதினா அஸ்ஹாப ரஸுலுல்லாஹ் கௌஸுல் அக்வாஸ் தமீம் அன்ஸாரி அல்மதனி ஃபில்பத்ரி வஸ்ஸாதத் பதுரி ரஜியல்லாஹுத்த ஆலா அன்ஹு அவர்களின் புனிதமிகு தர்கா ஷரீபில் *18.11.2009* புதன்கிழமை இரவு *7.00* மணியளவில் புகழ்பெற்ற நெல்லை அபுல் பரகாத் காதரி குழுவினரின் கச்சேரி நடைபெற்றது. அன்று இரவு *9.00* மணிக்குமேல் ஊர்வலத்தைத் தொடர்ந்து தர்கா கொடித்தளத்தில் கொடியேற்றப்பட்டது.

*3.12.2009* வியாழன் பின்நேரம் வெள்ளி இரவு சந்தனக்குட தாபூத் ஊர்வலம் இரவு சுமார் *1.00* மணியளவில் தர்கா தெருவிலிருந்து சிறப்பான முறையில் பூவை செந்தில் மின்விளக்கு அலங்காரத்துடன் புகழ்பெற்ற குலாப் பேண்டு வாத்தியம் முழங்க, நௌபத், தாயரா, தப்ஸ் மற்றும் நாதஸ்வர இசையுடன் வலம் வந்து 4.12.2009 வெள்ளி அதிகாலை சுபுஹு தொழுகைக்கு முன் ஸலவாத்துன் நபி மத்ஹ் ஷரீப் ஓத அஸ்ஹாப ரஸுலுல்லாஹ் அவர்களின் புனிதம் பொங்கும் மஜார் முகத்தஸுல் அஜீமில் சந்தனம் சமர்ப்பிக்கப்பட்டது.

*4.12.2009* வெள்ளிக்கிழமை உருஸ் முபாரக் அன்று காலை 10.00 மணியளவில் தர்கா தெருவில் உள்ள நிர்வாகிகள் இல்லத்தில் தப்ருக் சாப்பாடு அனைவருக்கும் வழங்கப்பட்டது. அன்று இரவு *10.00* மணிக்குமேல் புகழ்பெற்ற உருது கவ்வாலி நடைபெற்றது.

*4.12.2009* வெள்ளிக்கிழமை மாலை மஃக்ரிப் தொழுகைக்குப் பிறகு அஸ்ஹாப ரஸுலுல்லாஹ் ரவுலா முனவ்வராவில் அஸ்ஹாபே பத்ரியீன்கள் மவ்லூது ஷரீஃப் மஜ்லிஸ் நடைபெற்றது.

கொடியேற்றம் மற்றும் உருஸ் நிகழ்ச்சிகளில் பொது மக்கள் தமிழகம் மற்றும் பிற மாநிலங்களிலிருந்து இருந்து வந்து கலந்து கொண்டனர். ஹஜ்ரத் தமீம் அன்ஸாரி ரஜியல்லாஹு அன்ஹு அவர்கள் நபிகள் நாயகம் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களின் தோழர்களில் ஒருவரும் மேன்மை மிக்க பத்ரு ஸஹாபாக்களில் ஒருவருமாவார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

உருஸ் தினத்தில் கோவளம் சர்கார் அவர்களின் இல்லத்திலும் மௌலூது ஷரீஃப் மற்றும் மார்க்க சொற்பொழிவு நிகழ்ச்சி நடைபெற்றது.

கொடியேற்றம் மற்றும் உருஸ் தினங்களில் காவல் துறை நண்பர்கள் சிறப்பாக பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்திருந்தனர். அவர்களுக்கு அனைவர் சார்பாகவும் நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோம்.

**நன்றி – செய்தி : ஆலே ரஸுல் அவ்லாதே கௌஸுல் அஃலம் ஷாஹ் ஸைய்யது ஸர்க்கார் அல் ஹஸனி வல் ஹுஸைனி காதரி, புஹாரி அவர்கள்,**

**கௌஸுல் அஃலம் முஹ்யித்தீன் ஆண்டகை தைக்காஷரீப் கோவளம் ஷரீப்.**

### எச்சரிக்கை...!

#### கோட், சூட், பூட் போட்டு நம் ஈமானை பறிப்போரிடம் – ஜாக்கிரதை!

கோட், சூட், பூட், நல்ல தாடி - இதற்கு தகுந்தவாறு மார்க்க அறிஞரா? காலேஜ் புரொபஸரா? அல்லது யுனிவர்ஸிடி வைஸ் சேன்சிலரா? என கண்டுபிக்க முடியாத கெட்டப்! விரல் நுனியில் குர்ஆன் ஆயத்துகளின் எண்கள். கிருஸ்துவர்கள் பைபிளை மேற்கோள் காட்டுவது உங்கள் நினைவுக்கு வந்தால் நாங்கள் பொறுப்பல்ல!

பட்டியலாக ஹதீஸ்களை அசால்டாக கூறுவார்கள். நுனி நாக்கில் ஆங்கிலம் புகுந்து விளையாடும். ஓர் ஆங்கில மேதை இப்படி மார்க்கத்தை கரைத்து குடித்து T.V, D.V.D, களில் விளாசுகிறாரே என மூக்கில் விரல் வைப்பீர்கள். ஆடிட்டோரியங்களில். பெரிய மீட்டிங் ஹால்களில், பள்ளிவாசல்களில், பொதுக் கூட்டங்களில் புகுந்து விளையாடுகிறாரே என ஆச்சரியப்படுகிறீர்களா? அமைதியின் பெயரால் அவர் கூட்டங்களிலும், தொலைக்காட்சி சேனல்களிலும் தோன்றுகிறாரா...?

**ஜாக்கிரதை...!** அவர்தான் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்குப் பின் இன்று போலீஸ்காரனாக உலகையே குத்தகை எடுத்துள்ள அமெரிக்க உளவு ஸ்தாபனம் CIA மற்றும் இஸ்ரேலிய மொஸாட்டால் Divide and Rule Policyயில் தயார் செய்யப்பட்ட ஏஜெண்ட்! அவரிடமிருக்கும் புலமையை-மார்க்க அறிவை-வரலாற்று செழுமையைக் கண்டு ஏமாற வேண்டாம்.

குறிப்பாக ஆங்கிலம் மெத்தப்படித்த மேதாவிகள் எச்சரிக்கையாய் இருக்க வேண்டும். இல்லையெனில் ரஸுலுல்லாஹ் சாதாரண மனிதர் - இமாம்கள் எதற்கு - ஸஹாபாக்கள் தவறானவர்கள் - வலிமார்களும், தர்காக்களும் இஸ்லாத்தில் இல்லை என வாழை பழத்தில் ஊசி ஏற்றுவதுப் போல் நம் ஈமானில் விஷம் ஏற்றி நம்மை அம்பேல் ஆக்கிவிடுவார்கள் என்று எச்சரிக்கிறோம்.

உதாரணங்கள் : ஜாக்கிர் நாயக், மிர்ஸா குலாம் அஹ்மத் காதியானி (அஹ்மதியாக்கள்)

# தர்கா இதழ் பார்வையில் அரசியல் உலகம்

## குனியக் குனிய... (அமெரிக்காவிடம் அடிபணியும் இந்திய அயோக்கியத்தனம்...)

★ இந்திய பிரதமர் அமெரிக்கா பயணமாகிறார் என்றால், ஒன்று, நிதி உதவி கேட்பதற்காக அல்லது அமெரிக்க அதிகார மையங்கள் பிறப்பிக்கும் உத்தரவுகளையும், விடுக்கும் எச்சரிக்கைகளையும் மௌனமாகத் தலையசைத்து ஏற்றுக் கொள்வதற்காக என்பது காலா காலமாகத் தொடரும் அனுபவம். இந்த விஷயத்தில் இந்திரா காந்தி பிரதமராக இருந்த காலகட்டம் மட்டும் விதிவிலக்கு!

உலகப் பொருளாதார வல்லுநர்கள், நாளைய வல்லரசுகள் என்று அடையாளம் காட்டும் நாடுகள் இந்தியாவும் சீனாவும். ஆனால் அமெரிக்காவின் அணுகுமுறையில், சீனாவுக்குத் தரப்படும் மரியாதையும், முக்கியத்துவமும் இந்தியாவுக்குத் தரப்படுவதில்லையே ஏன்? இதற்கு காரணம் நாம் பலவீனமானவர்கள் என்பதால் அல்ல. நாமே நம்மை பலவீனமானவர்களாகக் கருதிக் கொள்வதால்தான். நமது வெளிவிவகாரத் துறை அமைச்சகமும், அதிகாரிகளும் குனிவதிலும், குழைவதிலும் காட்டும் சுறுசுறுப்பை, முறையாக திட்டமிடுவதிலும், ராஜதந்திர ரீதியான அணுகுமுறைகளைக் கையாள்வதிலும் காட்டுவதில்லை என்பதால்தான்.

பிரதமர் மன்மோகன் சிங்கின் அமெரிக்க விஜயத்திற்காக, நமது வெளிவிவகாரத் துறையும், வாஷிங்டனிலுள்ள இந்தியத் தூதரகமும் தேர்ந்தெடுத்திருக்கும் தேதிகளே தவறு. நன்றி அறிவித்தல் தினம் கொண்டாடும் வாரத்தில் அமெரிக்காவே கோலாகலமாக இருக்கும் வேளையில் பிரதமரின் வாஷிங்டன் விஜயம் போதிய முக்கியத்துவம் பெறாது என்பது கூடத் தெரியாமல், செயல்படும் இந்தியத் தூதரகத்தை என்ன சொல்வது?

★ பிரதமர் மன்மோகன் சிங்கின் வாஷிங்டன் விஜயத்துக்கு முன்னோடியாக, வேண்டுமென்றே இந்தியாவை அவமானப்படுத்தும் முயற்சிகள் அமெரிக்காவால் அரங்கேற்றப்பட்டது. இந்திய அமெரிக்க அணுசக்தி ஒப்பந்தத்தில் குறிப்பிடப்படாத ஷரத்துகள் வலிய எழுப்பப்பட்டு, இந்தியாவைப் பெயருக்கு மட்டுமே ஓர் அணு ஆயுத நாடாக்கும் முயற்சி நடந்தேறி வருகிறது. ஒப்பந்தம் கையேழுத்தாகி ஓராண்டாகப் போகிறது. அணு அளவும் எதுவுமே அசைந்ததாகத் தெரியவில்லை.

★ அமெரிக்கக் கணினித் துறை இந்தியா சார்ந்த ஒன்றாகத்தான் இருக்கிறது. ஆனால், அமெரிக்கர்கள் இந்தியர்களை அறிவு சார்ந்த கூலிகளாகத்தான் கருதுகிறார்கள்.

**நன்றி : தினமணி – தலையங்கம்**

**– 25.11.2009 சென்னை**

## ஹஜ்ரத் பதில்கள் ! ! !

**கேள்வி :** முஹர்ரம் மாதத்தில் நெருப்பில் குதிப்பது ஏன்?

**ஷவுக்கத் அலி – நாமக்கல்.**

✍ **பதில் :**

அஸ்ஸலாமு அலைக்கும். 8.11.2009 உங்கள் கடிதம் கிடைத்தது. நீங்கள் கேட்டிருந்த தர்கா இதழ் அனுப்பி விட்டோம். கிடைத்திருக்கும். தாங்கள் தர்கா இதழை விரும்பிப் படிப்பதற்கும், ரூ20/- மணியார்டர் செய்தமைக்கும் நன்றிகள் பல.

முஹர்ரம் மாதத்தில் நெருப்பில் குதிப்பதைப் பற்றி கேட்டிருந்தீர்கள். இமாம் ஹுஸைன் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் போருக்குச் செல்வதற்கு முன் கர்பலா களத்திலே அகழி என்ற அலாவா தோண்டி நெருப்பு வார்த்து அதன் அருகில் நின்று, "நபி இப்ராஹீம் அலைஹிஸ் ஸலாம் அவர்களுக்கு சோலைவனமாய் மாறிய நெருப்பே! அது போல் என் குடும்பத்தினர் சையதுமார்களுக்கு நல்லதை நாடி உதவ வரும் நல்லோருக்கு பூவாகவும், தீயோருக்கு நரக நெருப்பாகவும் மாறிவிடுவாயாக!" என்ற அல்லாஹ்விடம் துஆ கேட்டதால் இன்று வரை அதன் செயல்பாடுகள் காலம் காலமாய் நடந்து வருகின்றது என்பது வரலாற்று உண்மை.

மேலும் விவரங்களுக்கு தஞ்சை தர்காக்களும் கர்பலா சின்னங்களும் என்ற நூலில் விரிவாகக் காணலாம். தேவையாயின் எழுதி பெற்றுக் கொள்ளவும்.

தொடர்ந்து தர்கா இதழ் படித்து நிறைகுறை சுட்டிக் காட்டினால் நன்றி. தங்கள் குடும்பத்தினருக்கும், நண்பர்களுக்கும் சலாம்கள்.

## நன்றி அறிவிப்புகள் :-

வாசகப்பெருமக்களே! நம் தர்கா இதழுடன் மூன்று முறை தொடர்ந்து சமூக சேவை மனப்பான்மையுடன், சுன்னத் வல் ஜமாஅத் கொள்கையில் வாழ வேண்டும் என்ற நல்லெண்ணத்தின் அடிப்படையில் 1. பெண்களும் தர்கா ஜியாரத்தும் 2. மௌலூது ஓதலாம் 3. ஃபாத்திஹா ஓதலாம் என்ற சிறப்பான கருத்து பிரசுரங்களை வழங்கியவரும், தர்கா இதழ் வளர்ச்சிக்கு ரூ.2000/- வழங்கி உதவிய சமூக ஆர்வலரும், எஜமான் முஹ்யித்தீன் நேசருமான ஆலி ஜனாப் ராமநாதபுரம் அப்துல் காதர் அவர்களுக்கும், மேலும் நிதியுதவி வழங்கி யோருக்கும் தர்கா இதழ் நன்றிகளை சமர்ப்பிக்கிறது.

நம் இதழ் வாசிப்போரெல்லாம் நேரடியாகவும், மற்றவர்களின் வாயிலாகவும், தொலைபேசி, அலைபேசி மூலமாகவும், பாராட்டுவோருக்கு நன்றிகள் பற்பல. வாசகர்களிடம் தர்கா இதழ் முன்வைக்கும் ஒரே ஒரு வேண்டுகோள் என்னவெனில் தங்கள் எல்லா கருத்துக்களையும் ஒரு அஞ்சல் அட்டை மூலம் தெரிவித்தால் எழுத்துப்பூர்வமான ஆவணமாக எங்களுக்கு கிடைக்கும், எங்களின் எழுத்துப் பணியும் சிறக்கும் என்பதை தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

நாம் கேட்காமலேயே எவ்வித பிரதிபலனும் இன்றி தர்கா வளர்ச்சி நிதியை நன்கொடையாக வழங்கும் நல் உள்ளங்களுக்கு நன்றி! நன்றி!! நன்றி!!!

1. தன் பணி ஒய்வு பணத்தில் தர்கா இதழ் வளர்ச்சிக்காக ரூ 10,000/- FD நிரந்தர வைப்பு நிதி வழங்கிய ஆலி ஜனாப் ஷப்பீர் அஹ்மத் பிஜ்லி அவர்களுக்கு மனமார்ந்த நன்றி.
2. ஆலி ஜனாப் முஹ்யித்தீன் நேசர் அப்துல் காதர்- ராமநாதபுரம் ரூ 2000/-
3. சிவில் இன்ஜினியர் ஆலி ஜனாப் அப்துர் ரஷீத்- சேலம் ரூ 1000/-
4. ஆமிலே காமில் ஆலி ஜனாப் ஹமீத் பாஷா காதிரி ஷுத்தாரி - வலத்துறை தைக்கால் கொள்ளிடம் ரூ 500/-
5. ஆலி ஜனாப் நூர் அலி ரூ 500/-
6. ஆலி ஜனாப் சையத் அதீக் அஹ்மத் - கோயம்புத்தூர் ரூ 400/-

## நூல் அன்பளிப்பு...

அகிலம் போற்றும் ஆலா ஹஜ்ரத் நூல் வெளிவர முக்கிய காரணமாகவும், அந்நூலை தன் சொந்த செலவில் பதிப்பித்து அனைவரும் படித்து பயன்பெற வேண்டும் என்ற நன்நோக்கத்தின் அடிப்படையில் இலவசமாக வெளியிட்டவரும், நம் தர்கா இதழ் வாசகர்களுக்கு அன்பளிப்பாக வழங்கிய வருமான **இன்ஜினியர் ஷாஜஹான்** (தஞ்சை) அவர்களுக்கு தர்கா இதழ் குழுமம் தன் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறது.

## இஸ்லாமிய புத்தாண்டு விழா...

சேலம் மாநகரில் தமிழ்நாடு இமாம்கள் பேரவை சார்பாக இஸ்லாமிய புத்தாண்டு விழா 19.12.2009 ஞாயிற்றுக்கிழமை அஸருக்குப் பின் ஜங்ஷன் ஆஜாத் பள்ளிவாசலில் சிறப்பாக நடைபெற்றது.

அவ்வமையம் உலமாக்கள் முஹர்ரம் மாதத்தைப் பற்றி சொற்பொழிவாற்றினர்.

## தன்ஜீமே அஹ்லெ சுன்னத் வல் ஜமாஅத்சார்பாக முஹர்ரம் விழா

சேலம் மாநகரில் தன்ஜீமே அஹ்லெ சுன்னத் வல் ஜமாஅத் சார்பாக முஹர்ரம் அன்று கோட்டையில் 30.12.2009 காலை 10 மணியளவில் மௌலூது ஓதி மாநகரின் அனைத்து மதரஸாக்களின் குழந்தைகளுக்கு பரிசுப் பொருட்களும் உஸ்தாத்பீக்களுக்கு புடவைகளும் வழங்கப்பட்டது. அஸருக்குப் பின் பாத்திஹா ஓதி ஷர்பத்தும், மக்ரிப்புக்குப் பின் இமாம் ஹுஸைனார் பெயரால் பாத்திஹா ஓதி தபருக் விருந்தும் அளிக்கப்பட்டது. பின் உலமாக்களின் சொற்பொழிவும் நிழ்கச்சியும் நடைபெற்றது.

# இறந்தோருக்கு 3,7,10,40 பாத்திஹாக்களுக்கு நாள் குறித்தல் - ஓர் ஆய்வு

(கண்ணியமிகு ஃபழீலத்துஷ் ஷைகு அஸ் ஸையத் அப்துல் அஜீஸ் மௌலானா குஷ்ஹாலி ஹஜ்ரத் அவர்கள்)

**ஏழாம் நாளும் அதன் மகிமைகளும் :**

ஒருவர் இறந்து, மூன்றாம் நாளன்று கத்தம் பாத்திஹா ஓதி உணவருந்திச் சென்றவர்கள் பின் மீண்டும் ஏழாம் நாளன்று ஒன்று கூடுகின்றனர்.

மூன்றாம் நாளன்று இவ்வாறு செய்வதற்குரிய ஆதாரமென்ன என்று கேட்டோருக்கு முன்னால் நாம் எடுத்துக் கூறிய ஆதாரங்களை பார்த்த நீங்கள் இப்போது ஏழாவது நாளுக்குரிய ஆதாரங்களையும் உங்களின் பார்வைக்கு தருகிறோம்.

1. நமது தலைக்கு மேல் தெரியும் வானத்தையும், நாம் உலவித் திரியும் பூமியையும் அல்லாஹ் ஏழாகவே படைத்தான்.

**சூறா - அத்தலாக், வசனம் - 12**

2. நபியே! திடனாக நாம் உமக்கு திரும்பத் திரும்ப ஓதக் கூடிய (சூறத்துல் பாத்திஹாவையும்) ஏழு வசனங்களையும், மகத்தான குர்ஆனையும் வழங்கி இருக்கிறோம்.

**சூறா - அல் ஹிஜ்ர், வசனம் - 87**

3. அத(நரகி)ற்கு ஏழு வாயில்கள் உண்டு. அவைகளில் ஒவ்வொன்றும் பங்கிடப் பட்ட (தனித்தனி) பிரிவினர்களுக்கு உரியதாகும்.

**சூறா அல் ஹிஜ்ர், வசனம் - 44**

4. அல்லாஹ்வுடைய பாதையில் தங்கள் செல்வத்தை செலவிடுவோருக்கு உவமையானது, ஒவ்வொரு கதிரிலும் நூறு தானிய மணிகளைக் கொண்ட ஏழு கதிர்களை முளைப்பிக்கும் ஒரு வித்தைப் போன்றதாகும். அவன் நாடியவர்களுக்கு அதனை இரட்டிப்பாக்குகிறான். இன்னும் அவன் அனைத்தையும் நன்கறிந்த விசாலமான கொடையாளன்.

**சூற -அல் பகரா, வசனம் - 261.**

5. மேலும் திடனாக இப்புவியிலுள்ள மரங்கள் யாவும் எழுதுகோலாகவும், கடல் நீர் முழுவதும் இன்னும் அதனுடன் ஏழு கடல்கள் அதிகமாக்கப்பட்டு (மையாக) இருந்த போதிலும் அல்லாஹ்வின் புகழ் முடிவுற முடியாது. நிச்சயமாக அல்லாஹ் மிகைத்தவன் ஞானமுள்ளவன்.

**சூறா - லுக்மான், வசனம் - 27**

இனி திருமறையில் விவரிக்கப் பட்டுள்ள கனவுகள் ஏழாகும். அவையாவன...

1. நபி இப்ராஹீம் அலைஹிஸ் ஸலாம் அவர்கள் தமது மைந்தர் இஸ்மாயீல் அலைஹிஸ் ஸலாம் அவர்களை அறுத்து பலியிடுவதாக கண்ட கனவு.
2. நபி யூசுஃப் அலைஹிஸ் ஸலாம் அவர்கள் தமக்கு பதினொரு நட்சத்திரங்களும், சூரியனும் சந்திரனும் சிரம் பணியக் கண்ட கனவு.
3. சிறையிலிருந்த இருவரில் ஒருவர் திராட்சை பழச் சாரை பிழிவதாகக் கண்ட கனவு.
4. இரண்டாமவர் தமது தலையில் ரொட்டியை சுமப்பதாகக் கண்ட கனவு.
5. எகிப்து நாட்டு அரசன் பஞ்சத்தைக் குறித்து கண்ட கனவு.
6. நல்லடியார்களான வலிமார்களுக்கு இருவுலகை குறித்தும் தரப்படும் சுபச் செய்தி. அதில் இவ்வுலகுக்குரியது கனவாகும்.
7. நபி ஸல்லல் லாஹு அலைஹி வ ஸல்லம் அவர்களுக்கு மக்காவின் வெற்றியை குறித்து கனவின் மூலம் அறிவித்து தரப்பட்டது.

1. ஸுஜூது செய்யப்பட வேண்டிய உறுப்புகள் மொத்தம் ஏழாகும். அவை ; நெற்றி, இரு உள்ளங்கை, இரு கால்கள், இரு மூட்டுகள் ஆகியவைகளாகும்.

**- நபி மொழி.**

2. பிள்ளை பிறந்த ஏழாம் நாளன்று ஆடொன்று அறுத்து அகீகா கொடுத்து தலைமுடியை இறக்கி பெயர் வைத்தல்.

**-நபிமொழி.**

3. பிள்ளை பிறந்து ஏழு வயதை அடைந்து விட்டால் அப்பிள்ளையை தொழக் கட்டளையிட வேண்டும்.

**- நபிமொழி.**

4. இஸ்லாமிய கடமைகளில் ஐந்தாவது கடமையான புனிதமிக்க ஹஜ்ஜின் போது கஃபாவை ஏழு முறை வலம் வருதல். சஃபா, மர்வா மலைகளுக்கிடையே ஏழு முறை தொங்கோட்டம் ஓடுதல், மினாவில் ஏழு கற்களை எரிதல், குர்பானி கொடுப்பதற்கு மாடோ அல்லது ஒட்டகமோ ஏழு நபர்களுக்கு பகரமாக்கப்பட்டிருத்தல். **- நபிமொழி**

இனி வணக்கங்களில் தலையாய இடத்தை வகிக்கின்ற தொழுகையில் தன்னை சமீபிப்பதற்குக் காரணமாக அமைந்துள்ள ஸுஜூதை ஏழு உறுப்புகளைக் கொண்டு செய்யுமாறும், அக்கடமை ஒவ்வொருவருக்கும் ஏழாம் வயதிலிருந்து கடமையாகிறதென்றும், இவ்வாறே இறைவனது இல்லத்தை ஏழு முறை வலம் வர வேண்டும் என்றும் திரு மறையும், திரு நபியின் மணிமொழியும் ஏழு என்னும் எண்ணுக்குரிய சிறப்பை நமக்கு உணர்த்திக் காட்டுவதை நாம் கண்டோம்.

பின்னர் அல்லாஹ்வும் அவனது ரஸூலும் ஏழு என்பதற்குரிய இலக்கத்தை என்ன மாதிரியான ஸ்தானத்தில் வைத்துள்ளனர் என்பதை தெரிந்திருந்ததால் தான் நமது முன்னோர்கள் கண்டிப்பாக இந்த எண்ணுக்கு மகத்துவமுண்டு, அதில் செய்யப்படும் நற்காரியங்கள் மிக மிக ஏற்றமானவை என்பதை தெரிந்து ஒருவர் இறந்து போன ஏழாம் நாளன்று குர்ஆன், துஆ போன்றவைகளை ஓதி உணவும் தந்து அதன் சவாபை இறந்தவருக்கு சேர்த்து வைத்தனர். இதில் என்ன தவறு இருக்க முடியும்.

(ஆதாரம் - எத்திவைப்போம் வாரீர், பக் : 68)

இன்ஷா அல்லாஹ்! இனி அடுத்த இதழில் பத்தாம் நாளுக்குரிய மகிமைகளையும், அதன் சிறப்புகளையும் காண்போம்.

---

## மன்சூர் ரிஃபாயி ஆண்டகையின் கராமத்

சுல்தானுல் ஆரிஃபீன் சையத் அஹ்மத் கபீர் ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் தாய்மாமன் அவர்கள் மன்சூர் இப்னு அபூபக்கர் ரிஃபாயி என்ற பெரியார் ஆவார்கள். அவர்கள் ஆரிஃபு நாயகம் அவர்களின் அன்னையாகிய ஆயிஷா நாயகி அவர்களின் சகோதரர் ஆவர். மேலும் ஹஜ்ரத் ஹஸன் ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் சந்ததிகளில் ரிஃபாயி கிளையைச் சேர்ந்தவர் ஆவர். அல்லாஹு தஆலாவுக்கு உரித்தாளரான அவ்லியாக்களுள் மிக மேம்பாடுள்ள நாயகமவர்கள் அல்லாஹ்வை உணர்ந்து அறிந்து வழிபட்டு வணங்குவதில் தமக்கு இணையில்லாதவர்கள். மக்கள் திகைக்கும் வண்ணம் அற்புதங்களைச் செய்கின்றவர்கள்.

**தவறிழைத்த வேங்கைக்கு தண்டனை :-**

ஹஜ்ரத் மன்சூர் இப்னு அபூபக்கர் ரிஃபாயி அவர்கள் பதாயிகு நகரத்தில் இருக்கின்றபோது அவ்வூராருள் ஒருவரை அங்குள்ள அடவிகளில் திரியும் வேங்கை ஒன்று பிடித்து அவருடைய இரு கரங் களையும் முறித்துவிட்டது. அதனை இவர்கள் கேள்வியுற்று உடனேயெழுந்து அடவியிற்போய் நின்று, அந்த வேங்கையைக் கூப்பிட்டு அதன் நெற்றியில் உள்ள உரோமத்தைக் கற்றையாகச் சேர்த்துப் பிடித்து இழுத்துக் கொண்டு, அதனை நோக்கி எங்கள் அண்டை வீட்டாரை நீங்கள் தீங்கு செய்யவேண்டாம் என்று நான் முன் ஒருதரம் உங்களுக்குச் சொல்லவில்லையா? என்று கேட்டார்கள். அப்போது அந்த வேங்கை, அப்படிச் சொன்னது உண்டு என்னும் குறியாகத் தலையைத் தாழ்த்தி நின்றது.

உடனே இவர்கள் சினங்கொண்டு மறுத்தும் அதனை நோக்கி ஏ! துஷ்டமிருகமே, நீ அல்லாஹு தஆலாவின் ஏவலைக் கொண்டு சாவாயாக என்று கட்டளையிட்டார்கள். இங்ஙனம் சொல்லி வாய் மூடும்முன் அவ்வேங்கை தரையில் விழுந்து செத்தது. பின்பு இவர்கள் கைகள் முறிந்து போன மனிதரை அருகே அழைத்து, முறிந்த துண்டுகளைத் தங்கள் கையால் எடுத்து ஒடிந்த இடத்தில் வைத்துச் சேர்த்துப்பிடித்துக் கொண்டு யா ஹையு, யாகையூம், யா ஜுல்ஜலாலி வல் இக்ராம். இந்த ஒடிந்த முட்களை ஒன்றாகப் பொருத்துவாயாக என்று திருவாய்மலர்ந்து சொன்னார்கள். அப்போதே முறிந்த கைகள் ஒன்றாய்ப் பொருந்தி முன்போல ஆயின. பின்பு இவர்கள் தங்கள் கையாலேயே அந்த வேங்கையின் தோலை உரித்து விட்டார்கள்.

**நூல் : ஆரிஃபு நாயக வசனம் பக்கம் 42,43**

# தர்கா அலமாரி

தஞ்சை சாஹெப் வலியுல்லாஹ் அவர்களின் தர்கா வளாகத்தில் 17.12.2009 வியாழக் கிழமை மாலை 5 மணியளவில் இல்முல் இன்ஸான் மற்றும் அகிலம் போற்றும் ஆலா ஹஜ்ரத் ஆகிய நூட்களின் வெளியீட்டு விழா நடைபெற்றது. விழாவில் ஜனாப் **B.**நஸ்ரத் இல்யாஸ் **D.Pharm.,**- வழுத்தூர், ஜனாப் **Lion.A.**பசீர் அஹமது **B.Sc.,** - வழுத்தூர், ஹாஜி **M.J.**அப்துல் ரவூப் - வழுத்தூர், ஹாஜி **P.M** தாஜுத்தீன் - வழுத்தூர், ஜனாப் **F.**அப்துல் கரீம் காதிரி - வழுத்தூர், **Dr.M.**சையத் கரீம் அலிஷா தங்கள் **M.D.DSc.,** மௌலானா மௌலவி ஹாபிழ் **M.** அப்துர் ரஜ்ஜாக் காதிரி சூஃபி - தஞ்சாவூர், ஜனாப் **A.**யூசுப் அன்சாரி **(Daceu)** -வழுத்தூர் ஆகிய முக்கியஸ்தர்கள் கலந்து கொண்டார்கள். அந்த நூட்களின் விமர்சனம் தர்கா இதழ் வாசகர் பார்வைக்கு.

நூலின் பெயர் :இல்முல் இன்ஸான்.
தொகுப்பாசிரியர் :H.அப்துல் ஹலீம்.
பக்கங்கள் :145.
விலை :ரூ100/-
கிடைக்குமிடம் :கான் இராவுத்தர் நஸ்ரத் இல்யாஸ் அஹ்மத்,1/60, கீழ்த்தெரு,வழத்தூர்-614210,தஞ்சாவூர்.

விமர்சனம் :...இல்முல் இன்ஸான் அதாவது மனிதனைப் பற்றிய ஞானம். மனிதன் தன்னை மறந்து பிற மோகங் களை தேடி ஓடிக்கொண்டிருக்கும் இந்த காலகட்டத்தில் மனிதன் என்பவன் யார்? அவன் எப்படி உண்டாகிறான்? அவன் செயல்களின் ரகசியம் எவ்விதம் இயங்குகிறது? மோட்சம் அடைவது எவ்வாறு? என்று பலவாறு கேள்விகளை எழுப்பி அதற்கு விடையளித்திருக்கிறார். இந்நூலின் தொகுப்பாசிரிர் ரிஃபாயி சர்குரு கவிஞர்.ஹ.அப்துல் ஹலீம் அவர்கள்.

அன்றாடம் முஸ்லிம்கள் பேண வேண்டிய வாழ்வியல் நடைமுறை களையும், இம்மையிலும், மறுமையிலும் வெற்றியடைவதற்கான வழிமுறை களையும், திக்ருக்கள் என்னும் தியான முறைகள், தரீகத்தின் முக்கிய இரகசியங்கள், சிருஷ்டிகளின் தத்துவங்கள் என கலைக் களஞ்சியமாக தொகுத்து அனைவரின் பாராட்டுதலையும் தட்டிச் செல்கிறார். மனிதன் தன்னை அறிய முற்பட்டாலே மோட்சம் என கூறும் இந்நூல் அனைவரும் படிக்க வேண்டிய மிக முக்கியமான நூல்.

நூலின் பெயர் : அகிலம் போற்றும் ஆலா ஹஜ்ரத்.
தொகுப்பாசிரியர் : மௌலவி ஹாபிழ் அப்துர் ரஜ்ஜாக்
பக்கங்கள் : 16.
கிடைக்குமிடம் : சாஹெப் தர்கா,தஞ்சை.

விமர்சனம் : .....20 நூற்றாண்டில் உத்திரப்பிரதேசம் மாநிலம், பரேலி என்ற சிற்றூரில் தோன்றிய அஹ்லே சுன்னத் வல் ஜமாஅத் உலமாக்களில் மிகவும் போற்று தலுக்கும் கல்வி ஞானங்களில் சிறந்தும் விளங் கிய மௌலானா அஹமத் ரஜா கான் பரேல்வி அவர்களைப் பற்றி அறிய உதவும் நூல்.

நம் உயிரினும் மேலான நபிகள் நாயகத்தை தப்லீகிய தேவ்பந்தி தலைவர் களான அஷ்ரப் அலி தானவி, ரஷீத் அஹ்மத் கங்கோஹி, காஸிம் நானோத்வி ஆகியோர் எப்படியெல்லாம் தரக்குறைவாக தங்களது புத்தகங்களில் எழுதியிருக்கிறார்கள் என்பதை உலகுக்கு எடுத்துக் காட்டி அவர்களுக்கு தக்க பதிலடியை தந்தவர் அஹ்மத் ரஜா கான் பரேல்வி ஆவார்.

இந்த குரோதத்தால் தான் இன்று வரை தப்லீகர்கள் தங்களது பேச்சாலும், எழுத்தாலும், பள்ளிவாசல், பத்திரிகை, டி.வி, இன்டெர்நெட் என அனைத்து ஊடகங் களிலும் மௌலானா அஹ்மத் ரஜா கான் பரேல்வியை ஒரு புதிய கூட்டத்தின் தலைவர், பரேல்வி என்பது அக்கூட்டத்தின் பெயர் என பொய் பிரச்சாரம் செய்வது இந்த நூலை வாசிக்கும் போது தெரியவருகிறது.

நூலின் பெயர் : நபி புகழ் காவியம்.
ஆசிரியர் : அதிரை அருட்கவி அல்ஹாஜ் முஹம்மது தாஹா மதனீ.
பக்கங்கள் : 272.
விலை : ரூ.75/-
கிடைக்குமிடம் : கைரிய்யத் பதிப்பகம், கவிஞர் லேன், 20/51-சி, பெரிய நெசவு தெரு, அதிராம்பட்டிணம்-614701.
பேசி : 04373-240279

விமர்சனம் : .....நூலின் ஆசிரியர் கவிதைச் செம்மல், ஆஷிகே ரசூல், அல்ஹாஜ் மு.முஹம்மத் தாஹா மதனீ, எம்.ஏ, பி.எட்., அவர்கள் அடிப்படையில் இஸ்லாமிய இலக்கிய ஆர்வலர்.

நாற்பதுக்கும் மேலான நூற்களை வழங்கியிருக்கும் அதிரை அருட்கவி அவர்கள் முதல் முயற்சியாய் நபிகள் நாயகத்தின் சரித்திரத்தை புதுக்கவிதை வடிவில் யாத்தளித்திருப்பது மாற்று மத சகோதரர்களும் விளங்கும் வகையில் மிக எளிய நடையில் உள்ளது.

ஒவ்வொரு வீட்டிலும் இருக்க வேண்டிய, இன்றைய இஸ்லாமிய இளைய தலைமுறையினர் அவசியம் படித்து பாதுகாக்க வேண்டிய பொக்கிஷம்.

## சிறப்புக் கடிதம்...

**ஆழிக் கருங்கடல் அரவணைப்பில் அமைந்த ஜீலான் நீப் தலத்தில் ஊழிப்பெருவலி தனைவெல்ல உதித்த முஹ்யித்தீன் பெருமானே!**

தர்கா ஆசிரியருக்கு அஸ்ஸலாமு அலைக்கும்...

தலையங்கம் : சில ஹஜ்ரத்மார்கள் - இமாம்களின் செயலும் தங்களின் வேண்டுகோளும் மிக சிறப்பும் உண்மையும். பக் 4: பத்ருப் போரில் வலிகள் கோமான் முச்சுடர் மூலப் பரம் பொருள் முஹ்யித்தீன் அவதாரத்தை மிக அழகாக ஹக்கை கூறியது நன்று! துடரட்டும் முஹ்யித்தீன் அடிமையின் திருப்பணி பக்6: திருச்சி தப்லே ஆலம் பாதுஷா தர்காவில் உலக தர்காக்கள் புகைப்பட மற்றும் புத்தக கண்காட்சிகளை நேரில் கண்டது போல் உணர்ந்தோம் மிக அருமை. பக்13: இறந்தோருக்கு 3,7,10,40 வருட பாத்திஹா ஆய்வு அற்புதம் தொடரட்டும் - தொடர்ந்து கர்பலா போரின் உண்மைச் சம்பவம் மிக உருக்கம். நல்லோரின் நாதாக்களின் கால்களை முத்தமிடுதல் மாநபியின் மணிமொழிகள் - திருமறையின் தெளிவுரை என்று இதழ் 10 எல்லாமே முத்துச் சிதறலாக ஈமானின் பொக்கிஷமாக உள்ளது. தவறுகளுக்கு மன்னிக்கவும், பிழைகளை திருத்திக் கொள்ளவும், அதிகத்தை குறைத்துக் கொள்ளவும். வஸ்ஸலாம். ***அன்பன் முஹ்யித்தீன் நேசன். சைய்யிது அப்துல் காதிர். இராமநாதபுரம். 15.12.2009***

## கூத்தாநல்லூரிர் மௌலூது விழா...

சிரித்தால் சுடரடிக்கும் செம்மல் நபி அவர்களது 18ஆம் தலைமுறையில் வந்துதித்த ஏர்வாடி செய்யிது இப்ராஹீம் ஷஹீது வலியுல்லாஹ் அவர்களின் ஒன்பதாம் ஆண்டு மௌலூது விழா.

ஹிஜ்ரி 1430ஆம் வருடம் துல்ஹஜ் மாதம் பிறை 30 வெள்ளி மாலை 18.12.2009 சனிகிழமை அஸர் தொழுகைக்குப் பின் கூத்தாநல்லூரில் மஹான் அப்துல் மஹ்மூது ஆலிம் சாஹிப் அப்பா தைக்காலில் மௌலூது ஓதப்பட்டு சீரணி வழங்கப்பட்டது. மஃக்ரிப் தொழுகைக்குப் பின் மௌலானா மௌலவி அல்ஹாபிழ் அல்ஹாஜ் M.S.அஹமது மீரான் ஹஜ்ரத் (இமாம், தைக்கால் பள்ளி) அவர்களின் தலைமையில், N.S.M.மீரான் முஹ்யித்தீன் ஆலிம்(ஆர் : புதுமனை குத்பா பள்ளி, அரபி மத்ரஸா, மேலப்பாளையம்)அவர்களின் வலிமார்களின் வாழ்வினிலே தலைப்பில் சிறப்புரை நடைபெற்றது.

ராத்திப் ஜலாலிய்யா திக்ரு மஜ்லிஸ் விழாக்குழுவினர்களும் பொறுப்பாளர் சயிராத்தர் K.அமீருத்தீன் ஜலாலி அவர்களும் மௌலூது மற்றும் பயான் நிகழ்ச்சிக்கு சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தனர்.

## கீழ்பாதியில் உருஸ்...

ஸ்ரீ முஷ்ணம் பாளையங் கோட்டை கீழ்பாதியில் அடங் கியிருக்கும் ஹஜ்ரத் சையதா ஹுஸைன் பீ ஹஜ்ரத் சையிதினா மீரான் ஹுஸைன் வலியுல்லாஹ்களின் உருஸ் கந்தூரி முஹர்ரம் பிறை 10, 1431 ஹிஜ்ரி திங்கள்கிழமை 28.12.2009 அன்று மாலை 6 மணிக்கு ஆலம் மீலாது குழுவின் மீலாது, மௌலூது மற்றும் சென்னை, நெல்லிக்குப்பம் ரிஃபாயி ஃபக்கீர்மார்களின் ராத்தீபு சரஃப் ஹவ்வா உருது கவ்வாலியுடன் சிறப்பாய் நடைபெற்றது.

மேற்கண்ட உரூஸ் ஏற்பா டுகளை ஹஜ்ரத் முஹம்மத் இப்ராஹீம் குத்புத்தீன் மீரான் அல் கல்ஃப் சையத் தாஹின் அலி ஷாஹ் (எ) ரஜ்ஜாகுல்லாஹ் ஷாஹ் முஹம்மத் இப்ராஹீம் சையத் காதர் காதிரி ஆகியோர் சிறப்பாய் செய்திருந்தனர்.



# علم القرآن يعنى تفسير القرآن

# திருமறையின் தெளிவுரை

உருது மூலம் : ஹகீமுல் உம்மத் அஹ்மத் யார்கான் ரஹ்மதுல்லாஹி அலைஹி --- தமிழில் : மௌலவி ஹாபிஸ் அப்துர் ரஜ்ஜாக் காதிரி கூ:.பி

**வணங்குதலும், அழைத்தலும் :-**

அல்லாஹ் அல்லாததை அழைக்காதீர்கள் என்று வரும் வசனங்களுக்கு குர்ஆனின் விளக்கத்தைப் பாருங்கள்.

யார் அல்லாஹ்வுடன் வேறு கடவுளை அழைக்கிறாரோ அவருக்கு எவ்வித ஆதாரமுமில்லை. அதன் கேள்வி கணக்கு அவனுக்கு இறைவனிடம் உண்டு. (அல் குர்ஆன்-23:117)

அல்லாஹ்வுடன் வேறெவரையும் அழைக்காதீர்கள்.

(அல் குர்ஆன்-28:88)

அல்லாஹ் அல்லாததை அழைக்காதீர்கள் என்றால்... அல்லாஹ் அல்லாத எவரையும் கடவுள் என்று கருதி அழைக்காதீர்கள். அதாவது வணங்காதீர்கள் என்ற விளக்கம் தான் என்பதை மேற்கண்ட இருவசனங்களும் தெளிவுபடுத்துகின்றன. எங்கெல்லாம் அல்லாஹ் அல்லாததை அழைக்க தடை செய்து வசனங்கள் வருகின்றனவோ அதற்கு இவ்விரு வசனங்கள் தான் தப்ஸீர் ஆகும்.

கியாமத் வேளையிலும் கூட அவை அவர்களுக்கு பதிலளிக்காது. இன்னும் அவர்களின் அழைப்பையே அறியாதவையான அல்லாஹ் அல்லாததை அழைப்பவனை விட மிக கேடு கெட்டவன் யார்?

(அல் குர்ஆன்-46:5)

மனிதர்களை மறுபடியும் எழுப்பப்படும் கியாமத் நாளில் அவை இவர்களுக்கு எதிரிகளாகி மேலும் அவர்களின் வணக்கத்தை நிராகரித்து விடும் (அல் குர்ஆன்-46:6)

ஆக கியாமத் நாளில் முஷ்ரிக்குகள் வணங்கிய சிலைகள் அவர்களின் வணக்கத்தை நிராகரித்துவிடும். எனவே அழைத்தல் என்பதன் கருத்து இங்கே வணக்கமாக, கடவுள் என்று எண்ணி அல்லாஹ் அல்லாததை அழைப்பது தான் என்பதை மேற்படி வசனங்கள் தெள்ளத் தெளிவாக விளக்குகின்றன.

**அழைத்தல் என்பதை வணங்குதல் என பொருள் கொள்ளுதல் :-**

எனவே தான் பொதுவாக அனைத்து திருமறை விரிவுரையாளர்களும் (முஃபஸ்ஸிரீன்கள்) அல்லாஹ் அல்லாததை அழைப்பதை தடை செய்து வரும் வசனங்களுக்கு அழைத்தல் என்றால் வணங்குதல் என்றே பொருள் கொள்ளவேண்டும் என கூறியுள்ளார்கள்.

ஆனால் குழப்பவாதிகளான வஹ்ஹாபிகளும், தேவ்பந்திகளும் என்ன விளக்கம் கூறுகின்றார்கள் தெரியுமா?

அழைத்தல் - துஆ என்ற வார்த்தைகளுக்கு குர்ஆனின் விளக்க மேதைகளான முஃபஸ்ஸிரீன்களின் விளக்கத்தை எடுத்துக்கொள்ளாமல் தமது தவறான வழிகெட்ட கொள்கைக்கு ஆதாரமாக தமது புறத்திலிருந்து புதிய விளக்கங்களை... அழைத்தல் என்றால் இது தான் என்ற சில வரையரைகளை வைத்துக் கொண்டார்கள். வழிகேடர்களின் பார்வையில் அழைத்தல் என்றால் தூரத்தில் உள்ளவர்களை அழைத்தல் மரணித்தவர்களை அழைத்தல் என்பது தான்.

இந்த வழிகெட்ட தேவ்பந்திகளும், வஹ்ஹாபிகளும் கூறும் இந்த விளக்கத்திற்கு குர்ஆனில் ஆதாரம் உள்ளதா? என்றால் முற்றிலும் இவைகள் குர்ஆனின் விளக்கத்திற்கு மாற்றமானது.

**அவுலியாக்களை அழைக்கலாம் :-**

நபிமார்களும், சஹாபாக்களும் மரணித்தவர்களை அழைத்துள்ளனர். பல மைல் தூரத்திலிருந்தும் கூட அழைத்துள்ளனர். அவ்வழைப்பு செவியுறப்பட்டுள்ளது.

குர்ஆன் வசனங்களே குர்ஆன் வசனங்களுக்கு விளக்கமளிப்பதற்கு இன்னும் சில உதாரணங்களை காண்போம்.

அல்லாவையன்றி உங்களுக்கு நெருங்கியவரோ, உதவியாளரோ கிடையாது. (அல் குர்ஆன்-2.107)

அல்லாஹ் அல்லாததை நெருங்கியவராக ஆக்குபவர்களுக்கு உதாரணம் சிலந்தி வலையைப் போன்றது. அது ஒரு கூட்டை அமைத்துக்கொள்ளும். நிச்சயமாக கூடுகளிலேயே மிக பலகீனமானது. சிலந்தி கூடுதான். (அல் குர்ஆன்-29.41)

இந்த காபிர்கள் என்னை விட்டு விட்டு என் அடியார்களை வலிகளாக ஆக்கிக் கொள்ள நினைக்கிறார்களா? நிச்சயமாக நாம் காபிர்களுக்கு நரகத்தை விருந்தாக தயார்படுத்தி வைத்துள்ளோம். (அல் குர்ஆன்-18.102)

இது போன்ற பல வசனங்கள் வருகின்றன. வலி அவ்லியா என்பதன் அர்த்தம் நண்பர், உதவி செய்பவர், உரிமையாளர், போன்று பல உள்ளன. இவ்வசனங்களில் வலி அவ்லியா என்பதற்கு உதவி செய்பவர் என்று மட்டுமே எல்லா இடங்களிலும் அர்த்தம் வைத்தால் அல்லாஹ் அல்லாத எவரையும் உதவி செய்பவர் என்று கருதியவர் காபிர், முஷ்ரிக் என்று வந்து விடும். இது குர்ஆனுக்கும், ஹதீஸுக்கும், ஏன் அறிவுக்கும் முரணானது. காரணம் குர்ஆனில் அல்லாஹ் தமது அடியார்களை உதவி செய்பவராக கூறுகிறான்.

فَاِنَّ اللّٰهَ هُوَ مَولٰهُ وَ جِبرِيلُ و صٰلِحُ الْمُؤمِنِينَ
و اَلمَلٰئِكَةُ بَعدَ ذٰلِكَ ظَهِيرٌ

ஆகவே நிச்சயமாக அல்லாஹ் அவர்களின் உதவியான். மேலும் ஜிப்ரயீல், சாலிஹான முஃமின்களும், அதன் பின் மலக்குமார்களும் உதவியாளர்களாவர்.

(அல் குர்ஆன்-66.4)

اِنَّمَا وَلِيُّكُمُ اللّٰهُ وَ رَسُولُهُ وَالَّذِينَ آمَنُوا الَّذِينَ
يُقِيمُونَ الصَّلٰوةَ وَ يُؤتُونَ الزَّكٰوةَ وَهُم رٰكِعُون

உங்களில் வலி (உதவியாளர்) அல்லாஹ்வும், அவனது ரசூலும், ருகூஃ செய்பவர்களான தொழுகையை நிலை நாட்டி, ஐக்காத்தையும் வழங்கி வரும் முஃமின்களும் ஆவர்.

(அல் குர்ஆன்-5.55)

وَالمُؤمِنُونَ وَالمُؤمِنٰتُ بَعضُهُم اَولِيآءُ بَعض

முஃமின்களான ஆண், பெண் சிலர், சிலருக்கு உதவியாளர்களாவர்.

(அல் குர்ஆன்-9.71)

இது போல் பல வசனங்கள் கிடைக்கும்.

உலக காரியமாகட்டும், மார்க்க காரியமாகட்டும் அது நடைப்பெற மற்றொருவரின் உதவி இருந்தாக வேண்டும். உதவுதல் நின்று விட்டால் உலக இயக்கமே சீர் குலைந்துவிடும்.

இப்போது கூறுங்கள். இதுப் போன்ற உதவிகளை தேடுபவரை முஷ்ரிக் என்று எப்படி கூற இயலும்?

சரி அப்படியானால் வலி கூடாது என்று வரும் வசனங்களுக்கு குர்ஆனின் மூலம் நமக்கு நமக்கு தெரியவருவது என்ன? யாரை வலியாக ஏற்றுக் கொள்ள அல்லாஹ் குர்ஆனில் தெளிவுபடுத்தி உள்ளான்? குர்ஆனின் வசனங்களே நமது கேள்விகளுக்கு தெளிவாக விளக்கமளிப்பதைப் பாருங்கள்

**இன்ஷா அல்லாஹ்! தெளிவடைவோம்..**

# வாசகர் மன்றம்.....

கண்ணியமிகு ஹஜ்ரத் அவர்களுக்கு... அஸ்ஸலாமு அலைக்கும் வ ரஹ்மதுல்லாஹி வ பரகாத்துஹூ... நலம்! நலமே விளைக!

துல்காயிதா மாதஇதழ் வந்தது. வஹ்ஹாபிகள் முகத்திரையை கிழித்து எறிகிறது. தங்கள் பணி சிறக்க வாழ்த்துக்கள். நபிகள் புகழ் மாலை காப்பியமாக வடித்தேன். தங்கள் மேலான பார்வைக்கு அனுப்பி வைத்திருக்கிறேன். படித்து எழுதுங்கள். தர்கா இதழில் அதுபற்றி விமர்சனம் எழுதுங்கள். மற்றும் தங்கள் தபாலை எதிர்பார்க்கிறேன். வஸ்ஸலாம்.

**கவிதைச் செம்மல் முஹம்மது தாஹா மதனி – அதிராம் பட்டிணம். 30.10.2009**

மதிப்பிற்குரிய தர்கா இதழ் ஆசிரியர் அவர்களுக்கு அஸ்ஸலாமு அலைக்கும். தர்கா இதழ் பத்திரிக்கை தவறாமல் படித்து வருகிறோம். மாதமொரு முறை பத்திரிக்கை வந்தால் நன்றாக இருக்கும். இந்த பத்திரிக்கை மூலமாகத்தான் சையது வம்சத்தினரைப் புரிந்துகொண்டோம். மேலும் இந்த தர்கா இதழ் வளர்ச்சியடைய நபிகள் நாயகம் அவர்களின் வஸீலாவால் அனைத்து அவ்லியாக்களின் வஸீலாவால் துஆ கேட்கிறோம்.

**அஜ்மல் – சேலம் 6.11.2009**

(ஆசிரியர் குறிப்பு - ஜனாப் அஜ்மல் சாஹிப் அஸ்ஸலாமு அலைக்கும்.

தாங்கள் எழுதி அனுப்பிய இரண்டு கந்தூரி தேதிகளையும் வரும் தர்கா ஜன்திரியில் சேர்த்துக் கொண்டோம். இது குறித்து தங்களுக்கு நாம் எழுதிய கடிதம் தங்கள் விலாசம் தவறாக உள்ளதால் திரும்ப வந்துவிட்டது. சரியான விலாசத்தை தெரியப்படுத்தவும். நன்றி, வஸ்ஸலாம்.)

மதிப்பிற்குரிய தங்கள் சமூகம் அஸ்ஸலாமு அலைக்கும். நலம், நலம் காண விழைவு. தங்களின் தர்கா இதழும் புஸ்தகமும் துண்டு பிரசுரமும் கிடைக்கப் பெற்று அக மகிழ்ந்தேன். தர்கா இதழ் சுன்னத் வல் ஜமாஅத் கோட்டையாக திகழ காதர்வலி நாயகமிடம் துஆ கேட்டவனாக இருக்கிறேன்.

இப்போது வெளிவந்த தர்கா இதழில் வெளிவந்த அத்தனை கட்டுரைகளிலும் குழப்பவாதிகட்கு சரியான சவுக்கடி வழங்கி இருக்கிறீர்கள். அடுத்த இதழிலும் கடுமையான முறையில் எழுதவும். நான் இத்துடன் அனுப்பியுள்ள துண்டு பிரசுரத்தை திருத்தம் செய்து வெளியிடுமாறு கேட்டுக்கொள்கிறேன். நன்றி, என்றும் துஆவுடன்

E.K.S **சுல்தான் சாஹிபு காதிரி – நாகூர் ஷரீஃப் 09.11.2009**

## மலஜலத்தை முகர்ந்தவருக்கு பாத்திஹாவின் மணம் எப்படி எட்டும்

கண்ணியத்திற்குரிய ஆசிரியர் அவர்களுக்கு தங்களின் அக்டோபர் தர்கா இதழ் கண்டு அகமகிழ்ந்தது. அல்ஹம்து லில்லாஹ். எனினும் மௌலானா...? சையத் அப்பாஸ் மிஸ்பாஹி அல்காஸிமி, தேவ்பந்தியின் மடலுக்கு சரியான விளக்கமாக இது அமையும் என்ற நம்பிக்கையில் நான் இதை எழுதுகிறேன்.

தமிழக உலமாக்களுக்கு பிடித்த கேடாக தோன்றிய ஆரணி கமாலுத்தீன் பாகவியும், பைஜி ஷா நூரியும் தப்லீக் ஜமாஅத்தான் சுன்னத் வல் ஜமாஅத் என்ற அடிப்படையில் ஒரு மாய மோகத்தை ஏற்படுத்தி தமிழ் நாட்டின் ஏக உலமாக்களை வழிகெடுப்பதில் பங்காற்றியவர்கள் என்பதினை அந்த மாய மோக வலையில் சிக்காதிருந்திருந்தால் மேற்கூறப்பட்ட அந்த கண்ணியவானுக்க ஒருவேளை தெரிந்திருக்க வாய்ப்புண்டு. ஆனால் திசை தவறிய கப்பலின் மாலுமியாக தானும் தடுமாறி, கண்களை மூடிவண்ணம் அடுத்தவர்களும் குருடர்களே என தடுமாறியுள்ளார்.

இவரது ஷேக்கின் வெளியீடான தேவ்பந்தின் 200 வருட இறைநேசர்கள் என்ற புத்தகத்தின் ஒரு சில பகுதிகளையாவது இவர் கண்திறந்து பார்த்திருந்தால் அவரை தூக்கிவைத்து சீராட்டியிருக்கமாட்டார் என்பது திண்ணம். 200 வருட கட்டுக்கதையின் 2ஆம் பதிப்பில் 49ஆம் பக்கத்தில் 2 பாராவில் மௌலானா இல்யாஸ் காந்தலவியின் நன்னிமாவின் சடலத்திலிருந்து வெளியான மலஜலத்தின் நறுமணத்தை இவரது உஸ்தாத் கமாலுத்தீன் நுகர்ந்து பார்த்து அனுபவித்த விதத்தையும் பக்கா வஹ்ஹாபி ரஷீத் அஹ்மத் கங்கோஹி தேவ்பந்தியின் வரலாற்றில் 145ஆம் பக்கத்தில் ரஷீத் அஹ்மத் கண்ட இன்பங்களின் வண்டவாளத்தையும் அல்லாஹ் பொய்சொல்லுவான் எனக்கூறிய காஸிம் நானோத்தவியும் பலபேர் முன்னிலையில் கேவலமாக ஓரினசேர்க்கை செய்த லீலையை அர்வாஹே ஸலாஸாவிலும், படித்திருந்தால் அப்படி எல்லாம் எழுத துணிந்திருக்கமாட்டார்.

அதுவும் உண்மைதான் பிணத்தின் மலஜலம் பட்ட துணியால் நறுமணம் நுகரக்கூடிய தப்லீக் ஜமாஅத்தினருக்கு காகம் சாப்பிடுவது நன்மை தரும் என பிடிவாதம் பிடிக்கும் தேவ்பந்திய வஹ்ஹாபிகளுக்கு எங்ஙனம் அவ்லியா, அன்பியாக்களின் பெயரால் ஓதப்படும் பாத்திஹாவின் நறுமணம் எட்டும்? என்பதை நாம் சிந்தித்து இப்பாவிகளிடமிருந்து நம்மையும் நமது அடுத்த தலைமுறைகளையும் காக்க வல்ல அல்லாஹ்விடம் நபிகள் கோமானின் பாதரஷ்சைகளின் பொருட்டால் வேண்டுவோமாக.

**முஹம்மத் உஸ்மான் – மதுரை 12.11.2009**

## ஹஜ்ரத் அலீயின்வலது தோளில் எஜமான் முஹ்யித்தீன் ஆண்டகை

பொருள் அற்றவனை யாரும் - ஏன் மனைவியும் விரும்பமாட்டாள் என்ற கூற்றை உடைத்து நபி அய்யூப் அலைஹிஸ் ஸலாம் அவர்களை அன்னை ரஹீமா அண்மித்திருந்து கடைசி வரை சேவை செய்த வரலாறு கல்லையும் கரையச் செய்யும் புனித வரலாறு. ஒவ்வொருவரும் படித்து பயன்பெறத்தக்க பகுதி.

ஹஜ்ரத் அலீ கர்ரமல்லாஹூ வஜ்ஹஹூ அவர்களின் வலது தோளின் பின்புறமிருந்து மின்னலென எதிரிகளை வெட்டி வீழ்த்திய பெருமைக்குரிய கை எஜமான் முஹ்யித்தீன் ஆண்டகை என்று படித்த போது எண்ஜான் உடம்பும் சிலர்த்து அடங்கியது.

புதையல் பகுதியில் அரபிக் தப்லீக்வாலாவின் அட்டகாசத்தை வெளியிட்டுக் காட்டியிருப்பது எல்லோருக்கும் நல்ல எச்சரிக்கை! நல்லோரின் காலை முத்தமிடலும், சையத்மார்களின் மேன்மையை விளக்கும் ஹதீஸ்களும் ஆணித்தரமான ஆதாரத்துடன் ருஜூப்படுத்துகின்றன.

எங்களை மீறி நன்றாக சிரித்துவிட்டோம். காரணம் புஷ்-ஷூக்கள் தான். சிம்பாலிக்காக ஷூக்களை குறிப்பிட்டிருந்தது நன்றாக இருந்தது. பெற்றோரின் இறப்புக்குப்பின்- பல சந்தேகங்களுக்கு விடையளிப்பதுடன் பயனுள்ள பகுதியாகவும் இருக்கிறது.

கர்பலா போரின் உண்மைக் காரணத்தினை பட்டியலிட்டு காட்டியிருப்பது காலத்திற்கும் படிப்பினை - சிந்தனையை கிளர்ந்த பகுதி. மொத்தத்தில் காலந்தாழ்ந்து தர்கா இதழ் கைக்கு கிடைப்பது பரவலாக உள்ள குற்றச் சாட்டு வருத்தத்தை அளிக்கிறது. **மஹ்பூப் ஜான் முபாரக் – தஞ்சை. 03.12.2009**

அஸ்ஸலாமு அலைக்கும், தங்களின் தர்கா இதழை வாசித்தேன். மிகவும் பயனுள்ளதாக இருக்கிறது. நவம்பர் மாத இதழை எனக்கு அனுப்பி வைக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். தர்கா ஜன்திரியையும் இத்துடன் அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். மிக்க நன்றி!

**சையத் அதாவுல்லாஹ்** Head Constable

**தர்மபுரி. 7.12.2009**

அஸ்ஸலாமு அலைக்கும், தங்களுடைய தர்கா இதழை வாசித்தேன். மிகவும் அருமையாக இருக்கிறது. எனக்கு ஒரு நகலை அனுப்புமாறு கேட்டுக் கொள்கிறேன். மிக்க நன்றி.

S.நவாப்ஜான் Sub - Inspecter

**கள்ளக்குறிச்சி – 7.12.2009**

கௌரவ ஆலோசகர் :
**சையத் மத்தீன் அஹமத் சக்காப்**, B.E.,

நிருபர்கள் :
**உஸ்மான் சேட்** B.Com.,
**சையத் அப்துல் காதர்**, M.S., (I.T)
**ஹாபிஸ் ருஸ்தும் அலி** உருது
**நிஸார் அஹ்மத்** B.E., **பாஜில் அஹமத் கான்**

துபாய் நிருபர்கள் :
**ஷேக் இஸ்மாயில்** M.B.A.,
**பாரிஸ் அஹ்மத் கான்**